
# அகண்டானந்த யாத்திரை - கனடா
# ஸத்சங்கங்கள்
# பாகம் - 1














பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

*ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!*

# *அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள்*

## *பாகம் 1*

*தூளி பாபா*

**வெளியீடு :**
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655

முதற்பதிப்பு : கார்த்திகை தீபம் 2015

பிரதிகள் : 350

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

ஸத்தியம் பேசு. (ஸத்திய வாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

அகம் பிரம்மம்; ஜெகம் பிரம்மம்; அகமே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும் சிறிதும் இல்லை!

ஓ! எம் அறிவுக்குழந்தைகளே! ஸத்தியத்தின் இருப்பிடங்களே!

**அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் பாகம் I**

என்ற நூலின்

## பொருளடக்கம்


*1. 23.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா ........ 1*

*2. 23.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா ........ 4*

*3. 24.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா ........ 14*

*4. 24.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா ........ 16*

*5. 25.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா ........ 26*

*6. 26.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா ........ 33*

*7. 26.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா ........ 40*

*8. 26.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா ........ 45*

*9. 26.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா ........ 57*

*10. 27.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா ........ 59*

*11. 27.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா ........ 63*

*12. 27.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா ........ 71*

*13. 28.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா ........ 76*

*14. 28.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா ........ 81*

*15. 29.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா........................................... 87*

*16. 29.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா........................................... 92*

*17. 29.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா................................................. 98*

*18. 30.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா............................................. 104*

*19. 30.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா....................................... 106*

*20. 30.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா......................................... 109*

*21. 30.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா............................................... 116*

*22. 31.07.2015 காலை குருபூர்ணிமா ஸத்ஸங்கம் கனடா ....................... 118*

*23. 31.07.2015 காலை ஸத்ஸங்கம் 2 கனடா ......................................... 121*

*24. 31.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா ............................................. 127*

*25. 31.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா............................................... 135*

*எல்லாம் நீ!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 23.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா

**குருதேவர்:** சரீரம் நடக்கவோ, உட்காரவோ இயலாமல் போகும்போது உபகாரமான ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்ளலாம். உபகாரமான சேர், பென்ச் அல்லது மெத்தையில் கண்டிப்பாக உட்கார செய்யலாம். அப்போது அங்கே பெரியவர்கள் இருந்தாலும் கூட அது அவர்களை மதிக்காமல் இல்லை. நம் உடலுக்கு இயலவில்லை அதனால் உட்காருகிறோம். அது தர்மத்தோடு ஒத்துவரும். உடல் திடமாக இருக்கிறது எந்தவிதமான சிரமமும் இல்லை; அப்படிபட்ட நேரத்தில் நாம் வசதியைத் தேடுவது மஹா தவறு. அப்போது நாம் எந்தளவிற்கு எளிமையை கடைப்பிடிக்கிறோமோ அதுதான் சாதனை.

**அன்பர்:** நாங்கள் பாக்கியசாலிகள்; அனைவரும் இளவயதுக்காரர்கள். ஆகவே கீழேயே அமர்ந்து இருக்கிறோம்.

**குருதேவர்:** அது அவனுடைய கிருபை. மேலும் கனடா அன்பர்களுக்கு எந்தவித சிரமமும் கொடுக்கக்கூடாது என்பதை முக்கியமான லட்சியமாக வைத்திருக்கிறான். உங்களுக்கு என்று தனி சலுகை உண்டு. உங்கள் உள்ளமானது பக்குவப்பட்டு; பணிவாலும்,

கனிவாலும், கண்ணீர் பெருக்கத்தாலும், அடக்கத்தாலும், அளவற்ற பொறுமையாலும் சாதனையில் முதிர்ச்சி அடைந்து வருகிறீர்கள். அதனால் உங்களுக்கு அந்த சலுகை கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு முக்கியமான தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும். அறுபது, எழுபத்தைந்துக்கு மேல் வயதாகிறது; உடல் தளர்ச்சி அடைகிறது; ஆகவே சில சிரமங்கள், உபாதைகள் உண்டாகலாம். வினை வசத்தால் உண்டாகலாம், வினை இல்லாமல் நடக்காது. அப்படி வரும்போதும் நூதனமான வைத்தியம் தேவையில்லை. ஆனால் உடலை பேணி பாதுகாக்கத்தான் செய்ய வேண்டும். உணவோ, உறக்கமோ, உடையோ, இருப்பிடமோ எதுவானாலும் சரி நம்மால் எந்தளவிற்கு சமாளிக்க முடியுமோ அந்தளவிற்கு சமாளித்துக் கொள்ளலாம். ஆடம்பரத்தையோ, நூதனமான வைத்திய முறையையோ கண்டிப்பாகக் கடைப்பிடிக்கக்கூடாது.

ஒரு டாக்டரைப் பார்க்கப் போகிறோம் அவர் நம் உடலை பரிசோதனை பண்ணுகிறார். பண்ணி ஊசியோ, மருந்தோ, மாத்திரையோ ஏதோ கொடுக்கிறார். அந்தக் காலங்களில் அவர்களின் உணர்வு எப்படி இருக்க வேண்டுமென்றால் அந்த இடத்தில் டாக்டரைப் பார்க்கும்போது அந்த நாம ரூபத்தையோ அவர் படித்த படிப்பையோ, பட்டத்தையோ, பெயரையோ மறந்துவிட வேண்டும். அந்த ரூபத்தில் பகவான் இருந்து கொண்டு அல்லது நம் குருதேவர் இருந்து கொண்டு நமக்கு இப்படிப்பட்ட உதவி

பண்ணுகிறார் என்று திட உணர்வு இருந்ததானால் நீங்கள் டாக்டரிடம் போகவில்லை, மருந்து சாப்பிடவும் இல்லை, ஊசி போடவும் இல்லை. அவரால் கொடுக்கப்பட்ட மருந்து பிரசாதம். டாக்டர் - பகவான் அல்லது குரு. அவர் செய்யக்கூடிய காரியங்களோ சேவை. பக்தாள் நிமித்தமாக பகவான் அந்த மாதிரி நமக்குச் சேவை செய்கிறான் என்று மாற்றி விட்டீர்கள் என்றால் கர்மா பெருகாது. டாக்டர் வேடம் போட்டுக்கொண்டு பகவானோ, குருவோ வந்திருக்கிறார் என்ற உணர்வுடன் இருப்பதுதான் ஞான சாதனையில் முக்கியமானது.

டாக்டராகப் பார்த்தால் கர்மா பெருகும். பகவானாகவோ, ஸத்குருவாகவோ பார்த்தால் கர்மா இல்லை.

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 23.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா

**குருதேவர்:** கனடா குழந்தைகள் சேலை கட்டுவதே மிகப்பெரிய சாதனை. ஆண்கள் வேஷ்டி கட்டுவது அதைவிட மிகப்பெரிய சாதனை. எல்லோருடைய நெற்றியிலும் திலகம் இருப்பது மங்களஹரமான நிலை. மிகப்பெரிய அரிய பெரிய செயல்.

ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம்.

**அன்பர்:** கனடா அன்பர்களுக்காக குருதேவர் முன்பு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை வாசித்துக் காண்பிக்கிறோம் (கடிதம் வாசிக்கப்படுகிறது).

ஸத்தியம் பேசு. தர்மம் (ஸத்திய வாக்கை) செய். நாவை அடக்கு. கருணையோடு இரு. ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்.

அன்பும் அறிவும் நிறைந்த ஆனந்த குழந்தைகளான ஜனகா - கார்க்கி மற்றும் அன்பின் அன்பர்கள் அனைவரின் திருவடிகளிலும், சிர சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து உங்கள் திருவடித்தூளியை எம் சென்னி சூட்டிக்கொண்டு எழுகிறது ஓர் உதவாக்கரை பைத்தியம். நீங்கள் அனைவரும் ஓர் படிப்பறிவில்லாத இந்த ஜட சொரூபத்தையும் மற்றும் எம் பிரம்மச்சாரி குழந்தைகளையும் ஸ்ரீ பத்ரி வன ஸத்குரு குடிலுக்கும்,

மற்றும் மாண்டிரியால் ஸத்குரு குடிலுக்கும் வரவேற்பு அழைப்பு விடுத்ததோடல்லாமல், வரவேற்பு ஏற்பாடுகளை உங்கள் உள்ளம் பணிந்து கனிந்து கரைந்து கலந்து ஏக்க உருக்கத்தினல் ஆனந்த கண்ணீர் கரைபுரண்டோட அனைவரும் சேவையில் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டிருப்பதை உங்களுடனும், உங்கள் உள்ளும் புறமுமாய் நின்றும் அமர்ந்த நிலையிலும். கண்காணிக்கிறோம். கண்டு ஆனந்திக்கிறோம். உங்கள் அனைவருள்ளும் இரண்டற கலந்திருக்கிறோம்.

இவ்வளவு உருக்க ஏக்கத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும், நீங்கள் அனைவரும் ஈடுபட்டிருக்கும் ஆனந்த காட்சியை வரியாலும் வாக்காலும் தெரிவிக்க இயலாமையினால் திரும்ப திரும்ப சிர சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதல்லால் வேறு மார்க்கம் தெரியவில்லை. அன்பின் அமுதங்களே, ஞானச் செல்வங்களே நன்றி நன்றி நன்றி.

குறிப்பு: உங்கள் சேவைக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? எங்கெங்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உங்களை திக்குமுக்காட செய்வதை இங்கிருந்தே காண்கிறோம். உங்கள் ஆர்வ சேவைக்கு மறைமுகமாக ஆசியும் வழங்குகிறோம். உங்களுள் ஒருவனாகவும், ஒருத்தியாகவும் சூட்சுமமாய் இருந்து கொண்டு எம் பணியை செய்ய அனுமதி அளித்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இருப்பது ஒன்றே. நடப்பது நலமே.

தூளி பாபா கண்ணன்

**குருதேவர்:** என்ன உணருகிறீர்கள்?

**அன்பர்:** கண்ணீர் பெருக்கமும், நன்றியும்.

**குருதேவர்:** ஏக்கம், உருக்கம், கண்ணீர் பெருக்கம் மற்றும் திடமான உறுதியில் நம்பிக்கை, வைராக்கியம். இதுதான் இருக்குமே தவிர வேறு எதுவும் இருக்காது. உணர்வுபூர்வமான அந்த வாசகங்களை உள்ளே ஏற்றுக்கொண்டோம் என்றால் இவ்வளவு தான் வரும். நன்றி சொல்ல வார்த்தைகளே இருக்காது. மேலும் உபச்சார வசனமாகவோ, முக ஸ்துதிக்காகவோ, நீங்கள் அனைவரும் புகழவேண்டும் என்பதற்காகவோ இந்த வார்த்தையைச் சொல்லவில்லை.

அறிவுபூர்வமான வாசகம். ஆனால், பேரறிவிற்கு வாசகங்கள் கிடையாது. பேரறிவு இயங்காத ஒன்று. அறிவு தான் இயங்கும். அறிவுபூர்வமாகப் பார்க்கும் போது கனடியன் குழந்தைகள் ஏக்கம், உருக்கம், கண்ணீர் பெருக்கம், உள்ளத்தில் ஒரு பரவச நிலை, அடைந்துவிடவேண்டும் என்ற ஒரு இதயதுடிப்பு, அடைந்துவிட்டோம் என்ற அளவு கடந்த ஆனந்தம் கொண்டுள்ளனர். இவைகளெல்லாம் கனடாவிலுள்ள குழந்தைகளுக்குத் தான் இருக்கின்றதே தவிர, உலகத்திலுள்ள எந்த மூலை முடுக்குகளில் பார்த்தாலும் இருக்கவே இருக்காது.

எல்லோரும் பெரும்பாலும் ஸ்வய ஞான அனுபவ நூலை சுவைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த சுவையை வாக்காலோ, வரியாலோ சொல்ல இயலாது. அதை உள்ளன்போடு கேட்கக்கூடிய குழந்தைகள் எதுவாயினும், உள்ளம் உருகுமே தவிர வேறு ஒன்றுமே இருக்காது. அதற்கு வார்த்தைகளே இல்லை. கனடா அன்பர்கள், ஆணும், பெண்ணும் - ஆணென்றோ, பெண்ணென்றோ பேதம் கிடையாது. சுத்தாத்மாக்கள். மெய்யன்பர்கள் என்று தான்

சொல்லமுடியும். இவர்கள் பெருமையை தேவாதி தேவனாலும் விவரிக்க முடியாது.

எப்படி உங்களுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், பக்தியோ - முக்தியோ இந்த சாதனை தான் முக்கியமான சாதனை. மற்ற சாதனைகளெல்லாம் இதைவிட இரண்டாம்பட்சம் தான். ஒன்று பரமுக்தி, மற்றது பதமுக்தி. பதமுக்தி முதற்படி, முடிந்த முடிவு பரமுக்தி. இரண்டிற்கும் சாதனை பண்ணப்பட்ட அன்பர்கள் யாராக இருந்தாலும் சரி, ஆணோ, பெண்ணோ, அவர்களது மதம், இனம், ஜாதி, மொழி, நாடு வித்தியாசமில்லை. அதிலும் கனடா அன்பர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை: மஹான்கள் பெரும்பாலும் மூன்று நிலைகளாகச் சொல்வார்கள். ஒன்று மரம் வெட்டியவுடன் இருப்பது பச்சை விறகு. அது நனைந்ததல்ல, வெட்டுப்பச்சை. மரம் வெட்டும்போது எப்படியிருந்ததோ அப்படி அது வெட்டுப்பச்சை. அப்படிப்பட்ட விறகை எரிக்க முடியாது. எப்படி தீ மூட்டினாலும் புகைந்து கொண்டே இருக்குமே தவிர, எரியாது. புகைந்து, புகைந்து கரண்டு கரியாகத்தான் போகும். சாம்பலாகாது.

இரண்டாவது நிலையில் சொல்லக் கூடியது காய்ந்த விறகு. இங்கு பையர் உட் என்று போட்டு அக்னி வளர்க்கிறார்கள். இது எரிய, எரிய, எரிந்து சாம்பல்தான் மிஞ்சும். சாம்பலைக் கண்ணால் காணலாம். சாதனையின் முயற்சியைக் கண்ணால் காணமுடியும். இரண்டாவது சாதனை அது.

மூன்றாவது சொல்லக்கூடியது கற்பூர புத்தி. கற்பூரம் பெரும்பாலும் எல்லோருக்கும் தெரியும். அக்னியை கற்புரத்திற்குப் பக்கத்தில் கொண்டுபோனால்

பக்கென்று பிடிக்கும். அக்னியை பக்கத்தில் கொண்டு செல்லத் தேவையில்லை. கற்பூரத்தை அக்னியில் இருந்து 1/4 அங்குலம், 1/2 அங்குலம் தூரத்தில் வைத்தாலும் கூட கற்பூரம் அக்னியை உடனே ஈர்த்துக்கொள்ளும். ஈர்த்துக் கொண்டு உடனே பிரகாசமாக எரியும். எரிந்தது மாத்திரம் முக்கியமல்ல. எரிந்த கற்பூரமானது இருந்த தடயமே இல்லாமல் போய்விடும். இந்த இடத்தில் கற்பூரத்தை வைத்தோம் கற்பூரம் கொளுத்தினோம், கற்பூரம் எரிந்தது என்ற தடயமே இல்லாமல் போய்விடும். முழுமையாக அழித்துக் கொண்ட நிலைதான் சுத்த அத்வைதம். அத்வைதம் ஊறிப்போன குழந்தைகள்தான் கனடா குழந்தைகள். நம்பிக்கை, வைராக்கியம் உள்ள குழந்தைகள். நாம் சொன்ன குணங்கள் எல்லாம் முழுமையாக இருந்ததானால் அவர்கள் தானே தவிர வேறு எவரும் இல்லவே இல்லை.

மற்றவர்கள் எல்லோரும் பாவனை, பயிற்சி பண்ணுகிறார்கள். வெவ்வொரு சாதனை பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோரும் விறகாகவும், பச்சை விறகாகவும் இருந்து, ஆனால் எரிகிறது, முழுமை பெறவில்லை, முதுமை பெறவில்லை. இவர்கள் அப்படியல்ல. முதுமையும், பெற்று, முழுமையும் பெற்று, அதுவுடன் ஐக்கியமாகி விட்டார்கள் என்றே சொல்லலாம். ஏதாவது விளக்கத்திற்காக சொல்ல வேண்டுமென்றால் ஐக்கியம் ஆகிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம் உபச்சார வசனமாக. உண்மையாகவே ஐக்கியமாகி விட்டார்கள் என்பதே உண்மையான வார்த்தை.

உலகில் பெரும்பாலும் சாதனை செய்யக்கூடிய அன்பர்கள் எவராயினும், ஒன்று குடும்பஸ்தர்களாக

இருக்கலாம் அல்லது சாதனை பண்ணக்கூடிய பிரம்மச்சாரிகளாக இருக்கலாம் அல்லது துறவிகளாக இருந்து கொண்டு சாதனை பண்ணலாம். ஆனால் அவர்களது வினைக்குத் தகுந்தபடி வாழ்க்கை அமையும். அவர்களது வினைக்குத் தகுந்தபடி இன்ப - துன்பம் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கும். கனடா அன்பர்களின் சூழ்நிலையைப் பார்க்கும் போது தொழில் உண்டு. குடும்பம் உண்டு, உறவு, சுற்றம் உண்டு, வாழ்க்கை உண்டு, உணவு - உடை - இருப்பிடம் இவைகளில் ஒரு பிடிப்பு உண்டு. இருந்தாலும் ஆன்மீக சாதனைக்கு என்று உள்ளே புகுந்ததற்கு அப்புறம் ஒவ்வொன்றாக தன்படியே விலகிப் போய்விடுகிறது. இவர்கள் விலக்கவில்லை. இவர்கள் அவைகளை விலக்குவதற்காக சாதனை பண்ணவில்லை.

பிரபு நீயே கதி என்று பகவானையும், குருவையும் முழுமையாக சார்ந்த தன்மையினால், தன்படி விலகிப் போகிறது. இப்படி விலகுகிற நேரங்களில் அவர்களுக்கு குடும்பம் இருந்தாலும் சரி, தொழில் இருந்தாலும் சரி, பணத்தில் புரண்டாலும் சரி, என்ன தான் சிற்றின்பம் அவர்களை மயக்கினாலும் சரி, அந்த வினை முடிகின்ற பரியந்தம் இருக்கும். வினை முடிந்தவுடன் தன்படி புளியம்பழம் தன் ஓட்டிலிருந்து எப்படி கழண்டு போகுமோ அப்படி கழண்டு போய்விடும். இது முகஸ்துதிக்காக சொல்லக் கூடிய வார்த்தை இல்லை. மிக அனுபவமான வார்த்தை. அப்படிப்பட்ட அன்பர்கள் இவர்கள். நல்ல பயிற்சி, முயற்சியோடு இருக்கிறார்கள்.

(அன்பரது கடிதம் வாசிக்கப்படுகிறது)

**அன்பர்:** உங்கள் புனித தாமரைத் திருவடிகளுக்கு நமஸ்காரங்கள். குருதேவா தயவுசெய்து எங்களது அன்பையும். பக்தியையும், கண்ணீர் பெருக்கத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய நன்றியுள்ள குழந்தை. கோபி மா.

*(அன்பர் அளித்த அன்பளிப்பைப் பற்றி குருதேவர்)*



**குருதேவர்:** வெரி கரெக்ட். வெரி வெரி வெரி ப்யூட்டி. மொட்டைக் கழுத்தாக இருந்தால் தான் நாம் போடுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த காலரே கூடாது. ஆனால் அதனை வேண்டாமென்று சொல்லவில்லை. போட்டுக்கொள்ளும். எப்பப்ப போடச் சொல்கிறானோ அப்பொழுதெல்லாம் போட்டுக்கொள்ளும். உனக்காக நாளை ஒருநாள் போட்டுக்கொள்ளும்.

ஏனென்றால் அன்பை புறக்கணிக்கக்கூடாது. பாசமல்ல, வேறு எதுவுமில்லை. கனிந்த உள்ளத்தோடு, ஏக்கத்தோடு, உருக்கத்தோடு கொடுக்கப்பட்ட ஒரு பொருள். நாமரூப சம்பந்தப்பட்ட பொருளுமில்லை. அவசியம் இந்த நாட்டிற்குத் தேவையான பொருள். அங்கே இருக்கும்போதும் பத்ரி போகும்போதோ, ஊட்டி, கொடைக்கானல் போகும்போதோ அவசியம் போட வேண்டிய பொருள்தான் இது. அனாவசியப்

பொருளல்ல. ஆனால் அந்த ஒன்று இருப்பதனால் எப்பொழுதும் போட முடியாது. அன்பை பரிபூரணமாக ஏற்றுக்கொண்டோம் என்பதற்காக நாளை ஒரு நாள் கண்டிப்பாக போட்டுக்கொள்ளும் .

நாளை ஸத்ஸங்கத்தின் போதும் போட்டுக்கொள்ளும், நாளை காலையிலும் போட்டுக்கொள்ளும். எப்பொழுதும் போட்டுக்கொள்ளும் என்று எதிர்பார்க்க வேண்டாம். இந்த நாட்டில் சொல்லக்கூடாது. பெரும்பாலும் காலர் என்பதை அஹங்காரம், மமஹாரம் என்று சொல்வார்கள். இந்த கலியுகத்திற்காக வந்தது. முதலில் சட்டைத் துணியே கிடையாது. ஆண்கள் மேலே ஒன்றும் போடுவதில்லை அல்லது துண்டை மேலே போட்டுக்கொள்வார்கள். பெண்கள் உடம்பை மறைத்துக் கொள்வார்கள். ஆண்கள் சட்டை போடுவதில்லை, துண்டை மட்டும் அதாவது நேரியலை போட்டு மேலே மூடிக்கொள்வார்கள்.

சட்டை பெரும்பாலும் போடுவதில்லை. ஏன் போடுவதில்லை என்றால், பகவான் கொடுத்த இந்த தோல் சட்டை போதும். இந்த தோல் சட்டை முக்கியமானது. நமது நான்கு சீதோஷ்ண நிலையையும் - பனி, வெயில், காற்று, மழை - தாங்கக்கூடிய அளவிற்கு பகவான் கொடுத்திருக்கிறான். மிருகங்களுக்கும் கொடுத்திருக்கிறான், பறவைகளுக்கும் கொடுத்திருக்கிறான், எல்லாமே இயல்பாக இருக்கின்றன. மனித இனம் மட்டும் தான் சட்டையைப் போட்டு உடம்பை மறைத்துக் கொள்கிறான். ஆடம்பரமாக செய்யக்கூடிய செயல்.

ஆனால் கலியுகத்திற்குத் தேவைப்படக்கூடிய அத்தியாவசியப் பொருளாக ஆகிவிட்டது.

ஆனால் இந்த காலரை மட்டும் அஹங்காரம், மமஹாரம் என்று சொல்லுவார்கள். அதனால் அதை மட்டும் வைக்காமல் போட்டுக்கொண்டு இருந்தார்கள். இப்பொழுது சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. இப்பொழுது நாகரீகம் பெருகி முற்றிவரும் போது அதையும் காலி பண்ணி காலர் இல்லை. கை இல்லை எப்படியெல்லாமோ சட்டை போடுகிறார்கள். அந்த நாகரீகம் நமக்குத் தேவையில்லை. காலர் வைத்திருப்பது அஹங்காரம், மமஹாரத்தோடு கூடியது முன்னர் எவரும் போடமாட்டார்கள். நேரியல் மட்டும் போடுவர். ஆண்டவன் கொடுத்த சட்டை போதும். சச்சிதானந்தா தான் சொல்வார்: நீங்கள் ஒருவர் தான் பகவான் கொடுத்த சட்டையோடு இருக்கிறீர், வேறு சட்டை போடமாட்டேங்குறேள். நாங்கள் எல்லோரும் சட்டைமேல் சட்டை, பனியன் போட்டுக் கொள்கிறோம். சட்டை போட்டுக் கொள்கிறோம், ஏதோ ஒன்று போட்டுக் கொள்கிறோம், நீங்கள் ஒன்றும் வேண்டாம் என்று இருக்கிறீர்கள்.

இவனும் போட ஆரம்பித்துவிட்டானே. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றிக்கொள்ள வேண்டும். அதனை பகவானுடைய கருணையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்காகத் தேவையில்லை, அவன் போட்டுக்கொள், சட்டையைப் போட்டுக்கொள் என்று ஆணையிடுகிறான், இப்படி நடந்து கொள் என்று ஆணையிடுகிறான், அப்படி நடந்து கொள்கிறோம், வேறொன்றுமில்லை.

*(அன்பர் ஒருவது கடிதம் வாசிக்கப்படுகிறது)*

***அன்பர்:*** *உங்கள் புனித தாமரை திருவடிகளுக்கு நமஸ்காரங்கள் அன்பான ஒன்றே! உங்களை கனடாவிற்கு அழைக்கிறோம். அளவிடற்கரிய ஆனந்தத்துடனும் நன்றியுடனும் உங்களை அழைக்கிறோம். மிருதுவான, பஞ்சுபோன்ற இதயத்தோடும், அந்த இதயமானது ஏக்கமும், கண்ணீர் பெருக்கமும் நிறைந்திருக்கின்றது. மறுபடியும், மறுபடியும் உங்களுக்கு அந்த இதயத்தை அர்ப்பணம் பண்ணுகிறோம். உங்களது தெய்வீக திருவடிகளில் எங்களது இதயத்தை சமர்ப்பிக்கிறோம். உங்கள் அன்பான குழந்தை புன்னகை அரசி.*

**குருதேவர்:** *இப்பொழுதெல்லாம் கனடா அன்பர்கள் தங்களது இதயத்தையே அர்ப்பணம் பண்ணக்கூடிய அளவிற்கு உள்ளனர். அதை வாக்காலோ, வரியாலோ சொல்லாவிட்டாலும்கூட, உணர்வுபூர்வமாக அவர் அர்ப்பணித்த தன்மை அவர்கள் உள்ளேயே இருந்து, சாட்சிபூர்வமாகப் பார்த்துக்கொண்டிருக்கப்பட்ட அந்த ஒன்றிற்கு கண்டிப்பாகத் தெரியும். அதனால், இவன் எல்லோரையுமே பணிந்து, பணிவோடும், கனிவோடும், உள்ள நிறைவோடும் ஏற்றுக் கொள்கிறோம்.*

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *24.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா*

**குருதேவர்:** ஏ.சி., பேன், ஹீட்டர் (A.C., fan, heater) என்று செயற்கையை அனுபவிப்பதை விட இயற்கையாகவே அனுபவித்தால் மனம் ஏகாந்தமாக இருக்கும். சரீரமும் வியாதி இல்லாமல் இருக்கும். இயற்கையாக இருக்கும் போது யோக மாயாவினுடைய தன்மையாக இருக்கும். யோக மாயா, லோக மாயாவையும் சொல்லலாம். செயற்கையாக அனுபவிக்கும் போது மனதினுடைய விகார குணங்களிடம் மாட்டிக்கொள்கிறோம். அதனால்தான் சிரமம் உண்டாகிறது. மனம் வசப்பட்டாருக்கு சிரமம்தானே மேலும் மேலும் பெருகும், வினையும் பெருகும். இயற்கையாகவே மண், ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளை எற்றுக்கொண்டால் அது நம்மை அரவணைக்கும். உடம்பும் நன்றாக இருக்கும் மனமும் நன்றாக இருக்கும். சாதனையும் நன்றாக பெருகும்.

முன்னால் வாழ்ந்த ஜீவர்கள் எல்லாம் பெரும்பாலும் பக்குவ ஆன்மாக்கள். செயற்கையை விரும்புவதும் இல்லை செயற்கை தெரியவும் செய்யாது பெரும்பாலும். இயற்கையோடையே ஒன்றி ஒன்றி பழகலாம். ஒரு தாய் குழந்தையை எப்படி அரவணைத்து காப்பாற்றுமோ அப்படி இயற்கை

காப்பாற்றும். உணவோ, உடையோ, இருப்பிடமோ இவர்கள் தேடிப்போக வேண்டியதில்லை. அந்த இயற்கையே தன்படி அங்கங்கே அங்கங்கே நமக்கு கொடுக்கும். அதை அனுபவித்துக்கொண்டு ஏகாந்தமாக இருந்துக்கொண்டு அந்த ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

இயற்கையாகவே அந்த மர வீடுகளில் இருந்து அனுபவித்த சாதகர்களுக்கு கல், மண் இவற்றால் கட்டப்பட்ட கட்டிடத்தினுள் இருக்க முடியாது. இருந்தால் மனம் விகாரம் அடையும்; சாதனைக்கும் ஒத்து வராது. இதிலேயே இருந்து பழகிவிட்டால் மிகவும் ஆனந்தமாக இருக்கும். ஏகாந்தம்.

கல்லாலும், மண்ணாலும், சிமெண்டாலும், மற்ற உலோக பொருள்களாலும், கட்டப்பட்ட வீடுகள் பெரும்பாலும் நகரங்களில் தான் இருக்கின்றன. அடுக்கு மாடி கட்டிடம். இதில் வாழப்பட்ட ஜீவர்களுக்கு நாம ரூப மயக்கம் சாமான்யமாக விடாது. இரண்டாவது பணத்திலேயும், பெண் இன்பத்திலேயும் மூழ்கப்பட்ட மோகம் சாமான்யமாக விலகாது. இப்படி இயற்கையாகவே ஒரு மர வீட்டிலோ, ஏகாந்தமான வீட்டிலோ, மரங்கள் அடர்ந்த ஒரு வீட்டிலோ இருந்தோம் என்றால் நமக்கு என்ன தேவையோ அவை எல்லாவற்றையும் இயற்கை வாரி வழங்குகிறது. மனம் கெட்டுப்போவதில்லை. போக மோகங்கள் நம்மை ஆட்படுத்துவதில்லை. எந்த வினாடியும் இறை சிந்தனையுடன் இருக்க முடியும்.

இயற்கையாக வாழும் போது இந்த போக, மோகங்கள் கர்மாவின் பிணைப்புக்கள் சீக்கிரம் குறைந்து குறைந்து சர்வ நாசம் ஆகும். அதனால் எப்பொழுதும் ஆனந்தம் உண்டாகும். இன்ப துன்பம் அணுகாது.



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 24.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா

**குருதேவர்:** கண்களுக்குத் தெரியாத மின்சாரமானது எப்படி கண்களுக்குத் தெரியும் நிலையில் மிக்ஸி, கிரைண்டர், டி.வி. போன்ற மின்சாதன பொருட்களை இயக்குகிறதோ அதுமாதிரி கண்களுக்குத் தெரியாத பரம்பொருள், பராபரம், பரசொரூபம் கண்களுக்குத் தெரியும் நிலையில் அனைத்து ஜீவர்களாக இருந்துகொண்டு திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடி நடத்துவதற்காக இந்த உலகை நடத்திக்கொண்டு வருகிறது. மின்சாரம் கண்களுக்குத் தெரியவில்லை என்பதனால் மின்சாரமே இல்லை என்று சொல்வது மனமடமை ஆகும்.

ஒன்று இயங்குகிறது. அதுவே இந்த அண்ட பிண்ட பிரம்மாண்டங்களை இயக்குகிறது. அது சூட்சுமமாய் இருந்துகொண்டு இயக்குகிறது. அதிலும் ஒரு சிறிய நாம, ரூபம் தாங்கி இருக்கிறோம் நாம். நாமும் அதனால்தான் இயங்குகிறோமே தவிர நமக்கு இயக்கம் இல்லவே இல்லை. நாம் எந்த வினாடியும் அந்த பவர் ஸ்டேஷனாக இருக்கக்கூடிய மின்சாரமே நாம் என்ற உணர்வோடு இருந்தால் போதும்.

அளவு கடந்த அகண்டமான பவர் ஸ்டேஷனானது எல்லா இடத்திலும் வியாபகமாக இருந்துகொண்டு

இயக்கினாலும் அந்த மின்சாரம் இயங்குவதற்கு ஒரு மின்கலப் பெட்டி கண்டிப்பாகத் தேவை. ஒவ்வொரு இல்லங்களிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் எங்கெங்கு என்னென்ன நடந்தாலும் சரி அங்கெல்லாம் மின்கலப்பெட்டி கண்டிப்பாக உண்டு. அந்த மின்கலத்தின் வழியாகத் தான் மற்ற ஸ்விட்சுகள் இயங்க முடியுமே தவிர டைரக்டாக இயங்காது.

அப்படி இயங்கக்கூடிய அந்த மின்சாரமானது மின்கலப் பெட்டியாக இருக்கும்போது உன் உபாசனா மூர்த்தி ஆகிறது. எந்த தெய்வத்தை நம்புகிறாயோ அந்த தெய்வமாக இருக்கக்கூடிய உபாசனா மூர்த்தி ஆகிறது. அல்லாவோ, ஜீஸஸோ, ராமனோ, கிருஷ்ணனோ எதுவோ ஒரு ஸ்விட்சு போர்டு. அது இல்லையானால் மின்சாரம் எங்கும் பரவ முடியாது. இப்படி தன்னைத்தானே ஒரு இறைவனாகத் தோற்று வித்துக்கொண்டு நாம, ரூபமுள்ள இறைவனாகத் தோற்றுவித்துக் கொண்டு எல்லாவற்றையும் சமமாக இயக்கிக்கொண்டு வருகிறது. இந்த விளக்கம் தெரிந்தால் போதும் வேறு அதிகமாக படிக்க வேண்டியதில்லை.


நேரடியாக இயங்கக்கூடாது, இயங்க இயலாது. ஆகையினால் அவரவருக்கு உரிய உபாசனா மூர்த்தியாக இறைவன் மூலமாகத்தான் இயங்க முடியுமே தவிர தனித்து இயங்க முடியாது. ஆனால் நாமும் அந்த மின்சாரத்திற்கு அந்நியம் இல்லை. ஒரு நாம, ரூபம் தாங்கி இருக்கிறோம். நாம, ரூபம் தெரிகிறதே தவிர இயக்கம் நமக்குத் தெரியவில்லை. அந்த உள்ளிருக்கப்பட்ட இயக்கம் அந்த பரம்பொருளே, அந்த பரமான்மாவே, பரப்பிரம்மமே என்ற உணர்வு

இருந்தால் போதும் கண்டிப்பாக ஜென்மா இல்லவே இல்லை.

**பக்தை:** பவர் ஸ்டேஷனில் மின்சாரம் உற்பத்தியாகி வீட்டில் ஸ்விட்சு பாக்ஸ் மூலம் வருகிறது. நடுவில் ட்ரான்ஸ்பார்மர் வருகிறது இல்லையா? அது யார்? எதன் மூலம் வருகிறது? ஒயர் இல்லாவிட்டால் அது வராது இல்லையா?

**குருதேவர்:** ஒயரில் வருகிறது. அதுதான் இயற்கை. மண், ஜலம், அக்னி, காற்று, ஆகாயம். தாவர வர்க்கம், ஜீவ கோடிகள் சரீரம் முழுக்க அந்த பஞ்ச பூதங்களின் அம்சம். இந்த பஞ்ச பூதங்களாகிய ஒயர் மூலம் வருகிறது. ட்ரான்ஸ்பார்மர் நாம, ரூபமுள்ள பகவான். இயக்கத்திற்கு ஆகாரமாக இருக்கப்பட்டவர் பகவான்தான். இயக்கத்தை சொல்லி, பின் குருவை சொல்ல வேண்டும். அதுதான் அதற்கு ஆதாரம்.

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.



## 24.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா

**குருதேவர்:** விழுந்து நமஸ்காரம் செய்யத் தேவையில்லை அப்படியே பண்ணிக்கொள்ளும் போதும். உடல் நிலை எப்படி இருக்கிறது?

**அன்பர்:** பரவாயில்லை.


**குருதேவர்:** இவர் கனடா நாட்டை சேர்ந்தவரா அல்லது வேறு ஏதாவது நாட்டவரா? சிவப் பழமாக இருக்கின்றார்.

**அன்பர்:** அன்பிற்குரிய குருதேவா! பல வருடங்களாக கைரேகை பார்த்து கூறி வருகிறேன். அது எனக்கு ஆர்வத்தைக் கொடுக்கிறது. இது நாள் வரை மனதை வைத்துத்தான் கூறி வருகிறேன். உள்ளத்தில் பக்தி பெருகி அறிவுக் கண் மூலம் கைரேகை பார்த்துக்கூற கருணைபுரியவேண்டும்.(ஜே.ஜே.)

**குருதேவர்:** அது தோஷ குணங்கள் அதனால் பலன் தெரியும். அறிவுக் கண்ணால் பார்க்கவேண்டும் என்று கேட்கிறான்.

**அன்பர்:** கைரேகை சாஸ்திரம் பற்றி ஒரு புத்தகம் எழுதி இருக்கின்றேன்.

**குருதேவர்:** எவ்வளவு நாட்களாக கைரேகை பார்க்கின்றான்?



**அன்பர்:** நாற்பத்து ஐந்து ஆண்டுகளாகப் பார்த்து வருகிறேன். தற்போது எழுபத்து ஆறு வயதாகிறது.

**குருதேவர்:** திருமணம் ஆகி விட்டதா?

**சீடர்:** ஆமாம். போன முறை குடிலுக்கு வந்த போது ஒரு கேள்வி கேட்டிருந்தார். தன் மனைவிக்கு கேன்சர் வந்துள்ளது அதனை எப்படி எடுத்துக் கொள்ளவேண்டும்?

**குருதேவர்:** மனைவியாக பார்க்காமல் ஒரு மஹானாக பார்த்து சேவை செய்தால் கண்டிப்பாக ஆன்மீக உணர்வு மேன் மேலும் வளரும். மனைவி என்று பார்த்தால் சொந்த பந்த பாசப் பிணைப்பு உண்டாகும். மனைவியல்ல ஒரு மஹானுக்கு சேவை செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்திருக்கிறது என்ற உணர்வோடு சேவையாக செய்தான் என்றால் சாதனையும் ஆகும், சாதனை முதிர்ச்சியும் ஆகும். அதனால் வியாதி இருக்கிறது அதனால் செய்கிறோம் அல்லது வியாதி நீங்கவேண்டும் என்ற எண்ணம் தேவையில்லை. சேவைதான் முக்கியம்.

மூப்பிற்காகவோ, வியாதிக்காகவோ சேவை செய்யவில்லை. இவ்வாறு சேவை செய்தால் சொந்த பந்த பாசம் அறுபடும் உணர்வு மேலோங்கும். அதை

செய்யச் சொல். அவள் பெண்ணும் அல்ல, நாம் ஆணும் அல்ல. ஒரு மஹானுக்கு ஒரு மகனாக இருந்து சேவை செய்கின்றோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். ஆண், பெண் என்ற பேதம் இருக்கக்கூடாது. இதை ஏற்றுக்கொள்ள முடிகிறதா? இவன் கைரேகை பார்த்து கூறியதைப் பற்றி புத்தகம் போட்டிருக்கிறான், அதுதானே?

**சீடர்:** மெஷின்களின் படம் போட்டிருக்கிறது.

**குருதேவர்:** அது அவர்களுடைய கலை. சரி அதை பார்த்து நாம் என்ன செய்யப்போகிறோம்? இந்த கைகளைப் பார்க்க முடியுமா?

**அன்பர்:** முடியாது.

**குருதேவர்:** சேவையாக மாற்றிப் பார்த்து செய்தான் என்றால் லௌகீகத்தில் உன்னால் ஒட்ட முடியாது. கணவன், மனைவி என்ற பந்தம் இல்லை. அதனால் வரும் வினைக்கும் நாம் ஆட்படமாட்டோம். ஆன்மீகத்திற்கும் நல்ல வழி கிடைக்கும். ஏதாவது கேட்க வேண்டியுள்ளதா?


**அன்பர்:** இது நிக்கோல் அம்மாவினுடைய பரிசு. இதை வைத்து பிரம்மச்சாரிகளுடன் விளையாடலாம்.

**குருதேவர்:** என்ன பரிசு? இது உலகை கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

**அன்பர்:** ஆனால் கால்களால் விளையாடக்கூடாது.

**குருதேவர்:** யூ ஆர் வெரி கரெக்ட்.

**சீடர்:** இதை ஒரு கைப்பந்து போல போட்டி போட்டு விளையாடலாம் ஆனால் கால்களால் உதைக்கக்கூடாது. கால்களால் உதைத்து விளையாடக்கூடாது என்று ஏற்கனவே நீங்கள் கூறியிருக்கிறீர்கள்.



**குருதேவர்:** அதைத்தான் இவனும் கூறுகின்றான். அதைத்தான் விளையாடுகின்றான், உலகமே ஒரு விளையாட்டுக்கூடம் அலட்சியமாக கால்களால் உதைப்பதில்லை. தூக்கி, தூக்கி போட்டு விளையாடு. அதனுள் நீங்கள் அடங்கி இருக்கிறீர்கள். விளையாட்டை புரிந்து கொண்டால் போதும். இதற்குள் இருக்கும் பரியந்தம் பாசம் என்று சொல்லலாம். அதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளலாம். எல்லாம் நீ என்று அர்ப்பணம் பண்ணி செய்யும் போது பாசவலை அறுந்து போகும். அந்த பந்தை வைத்து ஆடக்கூடியவரை நீங்கள் பார்க்கலாம். அவரோடு கலக்கமுடியும், ஐக்கியமாக முடியும். விளையாட்டில் மயங்கி இருந்தால் அவரைப் பார்க்க முடியாது. இது விளையாட்டு பொம்மைதான் இங்கேயே இருக்கட்டும். நீங்களும் விளையாடலாம். கண்டிப்பாக உங்களாலும் முடியும்.


**சீடர்:** கண்டம் விட்டு கண்டம் வந்திருக்கிறீர்கள் அல்லவா. உலகமே உங்கள் கைகளில் என்பதற்காக இதை கொடுக்கிறார்கள்.

**குருதேவர்:** அண்டம் விட்டு அண்டம் போகிறானே இதற்கு என்ன செய்வது?

**அன்பர்:** கனடா வந்ததற்காக தற்போது இதைக் கொடுத்திருக்கிறோம்.

**குருதேவர்:** உங்கள் அன்பிற்கு கட்டுப்படுகிறான் வேறொன்றும் இல்லை. அந்த அன்பு இருக்கவேதான் அங்கிருந்து இங்கு வரமுடிந்தது. அளவு கடந்த அன்பு. அதற்கு இணையே இல்லை. அப்படிப்பட்ட அன்பினால் பிணைக்கப்பட்ட தன்மையினால் சென்று வரலாம் என்ற அனுமதி கிடைத்தது அதனால் வந்திருக்கிறான். What is this?

**அன்பர்:** இது கனடாவில் அணிவதற்கு ஏனெனில் சிலசமயம் இங்கே குளிராக இருக்கும். இது பருத்தியினால் ஆனது.



**குருதேவர்:** சரி கொடு பார்ப்போம். காலையில் அவள் ஒன்றை கொண்டு வந்து கொடுத்தாள் போடமுடியவில்லை.

**அன்பர்:** நாளைக்கு இதை போடுங்கள்.

**குருதேவர்:** ஒவ்வொருவராக டெய்லி ஒன்றை கொண்டு வந்து தருவீர்கள். எல்லாவற்றையும் இவன் போட வேண்டுமா?

**அன்பர்:** பேஷன் ஷோ.

**குருதேவர்:** ஷோ. சரி நாளைக்கு போடுகிறான். நாளைப் பாருங்கள்.

**அன்பர்:** ஜீலை 24.2015, உங்கள் புனித தாமரை பொற்பாதங்களுக்கு நமஸ்காரங்கள். அன்பான

குருதேவா! உங்கள் அளவிடற்கரிய அன்பினாலும், கிருபையினாலும் உங்கள் கனடா நாட்டு அன்பர்களுக்காக இந்த மிகப் பெரிய கடல் கடந்த யாத்திரையை உங்கள் பிரம்மச்சாரிகளுடன் வந்திருக்கிறீர்கள். எங்களுக்கு ஆசி வழங்க ஸ்ரீபத்ரி வன ஸத்குரு குடிலுக்கு வந்திருக்கிறீர்கள்.

பரகுருவான நீங்கள் இங்கே தங்கியிருக்கும் மேல்பகுதியில் நடந்து செல்வதையும், உட்கார்ந்திருப்பதையும் பார்க்கும் போது நாங்கள் இங்குதான் இருக்கிறோமா என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. இது உண்மையா? என்று ஆச்சரியமாக இருக்கும். நன்றிகளுடனும், கண்ணீர் பெருக்கத்துடனும் உங்களுக்கு எங்களால் முடிந்த அளவு சிறந்த சேவையை செய்ய விரும்புகிறோம் அதனால் இந்த யாத்திரை பரிபூரணமாக நடைபெறும். அது உங்கள் கிருபையால் மட்டுமே நடைபெறும்.


**குருதேவர்:** பாரதபூமி என்ற தேசத்திலிருந்து வட அமெரிக்காவிலுள்ள கனடா என்ற ஒரு இடத்தில் பத்ரி வன ஸத்குரு குடில் என்ற புனிதமான ஆஸ்ரமத்தில் வந்து சேர்வதற்கும், உங்களை தரிசிப்பதற்கும் பெரிய பாக்கியம் செய்த தன்மையினால் தான் கிடைத்திருக்கிறது இல்லையென்றால் கிடைக்காது. அது எப்படி இருக்கிறது என்றால் பெரும்பாலும் கனடா அன்பர்கள் அனைவரும் பெரிய பாக்கியசாலிகள் அதனால் அவர்கள் திருவடியில் இருக்கப்பட்ட தூசிதான் இந்த பைத்தியமே தவிர இதற்கு வேறு இருப்பும் இல்லை, இயக்கமும் இல்லை, தோற்றமும் இல்லை. அந்த நிலையில் இருந்து கொண்டு நீங்கள் எப்படி எல்லாம் அறிவு பூர்வமாக எண்ணுகிறீர்களோ அப்படியெல்லாம்

*காட்சிகள் அமையும். உங்களுடன் என்றென்றும் ஒன்றாக கலந்திருக்கும் அந்த ஒன்று. இவன் எந்த வினாடியும் உங்கள் உள்ளும், புறமும் நிறைந்திருக்கிறான். நீங்கள் அனைவருமே எம்முள் கலந்து, கரைந்துவிட்டீர்கள். இதுதான் உண்மை.*

*பாரத பூமியில் தென்னாட்டில் அன்பின்குடில் என்ற சிறிய இடம். அதில் காவிரி என்ற புனிதமான எம் அன்னை பிரவாகம் பண்ணிக்கொண்டு இருக்கிறாள். அதன் கரையில் ஒரு சிறிய இரும்பு துண்டாக கிடந்த இந்த பைத்தியத்தை அன்பின் பெருக்கினால் உண்டான காந்தமானது விரிவடைந்து பூரண ஆகர்ஷண சக்தியோடு அந்த இரும்பை கவர்ந்து இழுத்தது. உங்கள் அன்பின் காரணமாகத்தான் இந்த தூலம் அங்கிருந்து வரமுடிந்ததே தவிர இதற்கு எவ்விதமான இருப்பும் கிடையாது. உங்கள் அன்பினை தலை வணங்கி எப்போதும் நமஸ்காரம் பண்ணிக் கொள்கிறான். அந்த ஒன்றைத்தான் கொடுக்கமுடியும் வேறு ஒன்றும் இவனால் கொடுக்க முடியாது.*

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *25.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா*

***அன்பர்:*** *அன்பான குருதேவா! போன வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் தரமாக அன்பின் குடிலுக்கு வந்திருந்தோம். அப்பொழுது அன்பான பீஷ்மாஜீ கனடாவின் குழந்தைகளை எல்லாம் கார் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று சில விஷயங்களை சொன்னார். ஸ்ரீ பத்ரி வன ஸத்குரு குடில் பிற்காலத்தில் எப்படி இருக்கும் என்பதை பற்றி விளக்கம் கொடுத்தார். பிறகு குருதேவருடைய பாடங்கள் பிரஞ்சு மொழியில் வந்தால், கனடாவில் வசிக்கும் பிரஞ்சு மொழி பேசும் அன்பர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை சொன்னார். அவர் சொன்னது எமக்கு நேரடியாக சொன்னது மாதிரி இருந்தது. குருதேவரே இந்த மொழி பெயர்ப்புக்கு உண்டான எண்ணத்தைக் கொடுத்தார். ரிபு கீதையை பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்தோம்.*

***குருதேவர்:*** *அங்கு வேறு யாரோ ஆனந்தி, மற்றும் உமாசந்திரன் மொழி பெயர்த்தார்களே?*

***சீடர்:*** *அது ஜெர்மன் மொழி குருதேவா.*

***குருதேவர்:*** *ஓ அது ஜெர்மனா?*

***அன்பர்:*** *குருதேவரே அந்த எண்ணத்தைக் கொடுத்தார். குருதேவர் இங்கு வருவதற்கு முன்னால் எப்படியும்*

*முடித்து விட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. மொழி பெயர்க்கும் போது ஆரம்பத்தில் ஒவ்வொரு க்ஷணமும் அன்பும் சக்தியும் கிடைத்தது. ஆரம்ப காலத்தில் ஒரு சமயத்தில் 5 பாடல்களுக்கு மேல் மொழி பெயர்க்க முடியாது. சக்தி எல்லாம் விரயமாகி விடும். சோர்ந்து போய் விடும். அயர்ந்து போய் விடுவோம். ஆனால் நேரம் சென்று கொண்டே இருந்தது. குருதேவர் வரக்கூடிய நேரம் நெருங்கிக் கொண்டே வந்தது. எமக்கு சக்தி கிடைத்தது. ஒரு சமயத்தில் 6,7,10 பாடல்கள் வரைக்கும் மொழி பெயர்க்க முடிந்தது.*

**குருதேவர்:** *அவனுடைய கருணை.*

***அன்பர்:*** *இந்த அனுபவம் முழுவதும் ஆனந்தமாகவே இருந்தது. இந்த புத்தகத்தை பிரஞ்சு மொழி பேசும் அன்பர்களுக்கு சமர்ப்பிக்கிறோம். உருகிய உள்ளத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும் அன்புடனும் டேனியலா.*

**குருதேவர்:** *யாரு அது?*

***சீடர்:*** காகம் சொரூபத்துல ஒரு மஹாத்மா வந்து ஆசீர்வாதம் பண்ணினாரே அந்த அம்மா.

**குருதேவர்:** *மொழி பெயர்த்து முடிச்சாச்சா?*

***சீடர்:*** *ஜே. ஜே. என்பவர் முழு புத்தகத்தையும் படித்து சில அறிவுரைகளையும் கூறியிருக்கிறார். அவைகள் உபயோகமாக இருந்தன. நேற்று கை ரேகை பார்த்தாரே அவர்தான்.*

**குருதேவர்:** *140 பாடலுமா?*

***சீடர்:*** *140 பாடல்களும். இது தான் குருதேவா அது. கீழே தமிழ்; மேலே மொழி பெயர்ப்பு. பிரார்த்தனை,*

*மங்கள ஆரத்தி, ஆரம்பத்துல இருந்து எல்லாமே இருக்குது.*

**குருதேவர்:** *எல்லா மொழிகளிலும் இது பிரபல்யமாகும். காலக்கிரமத்துல விரிவடையும் யாரு யாருக்கு தேவைப்படுதோ ஆளுக்கொன்று கொடுத்துடலாம். யாரு யாருன்னு கேட்டு வச்சுக்கோங்க. யாரு யாரு படிக்கிறார்களோ அவர்களுக்கு கொடுத்திடலாம். உலக மொழிகள் எல்லா மொழிகளிலுமே இது பிரபல்யமாகும்.*

**சீடர்:** *ஏற்கனவே இந்தியில் பண்ணிக்கிட்டு இருக்காங்க.*


**குருதேவர்:** *யார் யாருக்கு ஏக்கம் இருக்கோ அந்த அன்பர்கள் மூலமாக செய்ய ஆரம்பச்சுட்டான். படிக்கிறவர்கள் எல்லோரும் ஆர்வத்தோடு படித்து முழுமையா பலன் பெறுவார்கள். காலக்கிரமத்துல விரிவடையும்.*

*எழுதப்பட்ட அன்பர்கள் யாராயிருந்தாலும் சரி நீங்கள் மொழி பெயர்க்கவில்லை. பரம்பொருளானது பகவானாக இருந்து கொண்டு இயங்கச் செய்து மேலும் மேலும் பிரபல்யமடையச் செய்கிறது. அவனுடைய வேலை. உங்களுடைய வேலை இல்லை. நீங்கள் எல்லோரும் பொம்மைதான். நீ இதைச் செய்தால் கீர்த்தி கிடைக்கும். அந்த எண்ணத்துல யாரும் பண்ணலை. அந்த நூலானது தன்னைத் தானே விளக்கிக் கொண்டதே தவிர அதற்கு கர்த்தா யாருமே இல்லை. கர்த்தான்னு சொன்னா பகவானை சொல்லலாம். அவன் தான் அந்த காரியம் பண்றான். இங்கேயும் நான் செய்தேன் என்ற எண்ணம் யாருக்குமே இல்லை. அதனால அனுபவம் நல்லா இருக்குது.*

*யார் கொடுத்தது இது?*

***சீடர்:*** மொழி பெயர்த்தாங்களே அந்த அம்மா கொடுத்தது.

***குருதேவர்:*** கண்ணாடிய இப்படி போட்டுட்டு இருப்பாங்க. தேவைப்பட்டா தன்படி கீழே இறங்கிடும். சில சமயம் இப்படி இருக்கும். இந்தக் கண் இருக்குது. பிரயோசனம் இல்லை. இந்தக் கண் தெரியுது. மனக்கண், அறிவுக் கண். அந்த கண்ணாடிய அப்படி மாட்டிக்கிறார் அந்த பெரியவர். மனக் கண்ணையும் அறிவுக் கண்ணையும் ஒன்றாக்கி அந்த திருஷ்டியில பார்த்தால் அந்த பார்வை வந்துடுது. அந்த பாடல் வெளி வர காரணமே அப்படித்தான். ஒரு கண் நெற்றிக் கண் ஒரு கண் இயல்பான கண். இந்தக் கண்ணுக்கு கண்ணாடி கிடையாது. மனக்கண் ஒன்றை விட்டுட்டான். அறிவுக் கண்ணுக்கு வேலை கொடுக்கிறான். அப்படிப் பட்ட திறமை வந்ததால் தான் அந்த அம்மா அத்தனை பாட்டையும் எழுதி இருக்கிறார். இப்ப தெரியுதா?



***சீடர்:*** அந்த பெரியவரைத் தானே சொல்றீங்க குருதேவா.

***குருதேவர்:*** ஆம். போட்ட கண்ணாடிய இப்படி தூக்கி விடாத படி இப்படி பார்க்கிறார். இதுல ஒரு கண். இங்க ஒரு கண், இன்னொன்று அறிவுக்கண். ஒரு மனக்கண் நாசமா போனா, இன்னொரு மனக்கண் இருந்து அறிவா பிரகாசிக்குது. இங்க மூன்று கண்கள் இருக்குது. அர்த்தம் புரியுதா?

**அன்பர்:** *நன்றி.*

**குருதேவர்:** *ரொம்ப நன்றி இவன் தான் ரொம்ப நன்றி சொல்லணும்.*

**சீடர்:** *ஹரித்வார் ஸத்ஸங்கமும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள். அது ஆங்கிலத்துல வந்துடுச்சு. பிரஞ்சுலேயும் வந்துடுச்சு.*

**குருதேவர்:** *அதிசய சாதனை.* Wonderful. *உனக்காக இங்க அந்த பரம்பொருள் பண்ணியிருக்கு. நீ ஒரு பொம்மைதான்.*

**அன்பர்:** *அகண்டானந்த யாத்திரை 2015. உங்கள் புனித தாமரை திருவடிகளுக்கு நமஸ்காரங்கள். மிகவும் அன்பான குருதேவா! இந்த படத்திலுள்ள மிருகம் பகவான் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. முழுமையாக நம்புகிறது. அதனுடைய குணமே முழுமையான நம்பிக்கை தான். ரொம்ப சிரத்தையோடு இருக்கிறது. நீங்களே அதை பிடித்துக் கொண்டும் காப்பாற்றிக் கொண்டும் வருகிறீர்கள். பகவானுடைய கண்களைப் பார்த்து அது சரணடைந்து அது பகவான் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறது. எங்கும் எவ்விடத்தும் எல்லா பொருட்களிலும் ஆத்ம உணர்வோடு எல்லாம் ஒன்றே என்பதை உணர்வதற்கு உங்கள் அறிவுரை என்ன? அதாவது எங்கும். எப்பொருளிலும் ஆத்ம ஞானத்தோடு உணர்வதற்கு உங்கள் அறிவுரை என்ன? ஆழ்ந்த அன்புடனும், சிரத்தையுடனும், எல்லாம் நீ எல்லாம் நீ எல்லாம் நீ உங்கள் குழந்தை கீதா.*

**குருதேவர்:** *அந்த ஆழ்ந்த அன்பு ஏற்பட வேண்டுமானால் மின்சாரம் எப்படி கண்ணுக்குத் தெரியாதோ? அந்த அகண்ட மின்சாரமானது* power station *இலிருந்து* sub-station *க்கு வந்து, பின்னர் வீட்டுல உள்ள மின் பெட்டிக்கு வந்து, அங்கு இருந்து* switch box *க்கு*

வந்து அந்த switch போட்டாதான் மின் விசிறி, மிக்ஸி, கிரைண்டர் எல்லாமே இயங்கும். அப்படி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருள் நம்முள் இருந்து கொண்டு நம்மையும் இயக்குகிறது. நாம் ஆணும் அல்ல. பெண்ணும் அல்ல. இன்னொருவருக்கு மனைவியும் அல்ல. இன்னாருக்கு கணவனும் இல்லை. நாம் பரம் பொருள் அம்சமே என்ற ஒரு மெய்யுணர்வு பெருக்கத்தினால் எந்த வினாடியும் அந்த எண்ணம் தான் இருக்கணும்.

பசுவுக்கு உடம்பு முழுவதும் பால் இருக்கத்தான் செய்யுது. ஆனால் பால் கரக்கக் கூடிய இடம். அந்த நான்கு மடு மட்டுமே. அந்த நான்கு மடு என்பது பகவானையும், குருதேவரையும் குறிக்கும். இந்த இயக்கத்தில் இவருடைய இரண்டு கண்கள், இரண்டு காதுகள் என இரண்டு பட்ட தன்மையால் அந்த இரண்டின் மூலமாக இயங்க முடியும். அதுவே நம்மை இயக்குகிறதே தவிர நாம் இயங்க வில்லை. நமக்கு இயக்கம் இல்லை. இயங்கவும் முடியாது. நாம் ஒரு பொம்மையே என அந்த ஒன்றை சார்ந்து இருந்தால் எல்லாம் நீயே. எல்லாம் உன்னால் எல்லாம் ஒன்றே என்று இருந்தால் அந்த அன்பு மேலும் மேலும் பிரகாசிக்கும்.

**குருதேவர்:** குரங்கை தனக்கு உவமானமாக சொல்கிறார்கள். குட்டி குரங்கு இது. பெரிய குரங்கு இல்லை. அதுக்கு வாலில் அதிக சத்தி உண்டு. உட்காரும் போது வாலை தொங்கப் போட்டுக் கொள்ளும் அஹங்காரம், ஆதிக்கம் இல்லை என்று தெரிகிறது. வாலை தொங்க போட்டுக் கொண்டு கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்திருக்கு. நான் எனது இல்லை, நான், எனது இறந்து போனால் கை மடங்கிய நிலை. இரண்டு கைகளையும் இப்படி

வைத்திருக்கிறது. அப்ப நான் இறந்த போன நிலை. அதிகாரம், ஆதிக்கம் நாசமாகப் போச்சு. அதனால வால் தொங்குது. இது மிருகமா இல்லை. சுத்த ஆத்மாவா இருக்குது.

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *26.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா*

**குருதேவர்:** *எப்பொழுது பிரசாதம் கொடுக்கிறோமோ அப்பொழுது அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். சில நேரங்களில் விட்டுவிட்டாலும். நம்மை விட்டு விட்டுவிட்டாரே நம்மை பொருட்படுத்த வில்லையே என்று நினைக்க வேண்டாம். எப்பொழுது பிரசாதம் கிடைக்கிறதோ அப்பொழுது ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே நமக்காக கொடுக்கப்படும் சரியான பிரசாதமாகும்.*

*எல்லோரையும் உள்ளவே வைத்திருக்கிறானே தவிர வெளியில் பார்க்க முடியவில்லை. உள்ளவே இருப்பது தான் முடிந்த முடிவு. வெளியில் பார்ப்பது மறைந்து விடும். இப்பொழுது உங்களை பார்க்கிறோம் பின்பு மறந்து விடுவோம். இப்படி உள்ளவே வைத்து பார்ப்பதுதான் மிகவும் அதீதமானது.*

*நம்மைவிட்டு அவர் பிரிந்ததில்லை, அவரை விட்டு நாம் பிரிந்ததில்லை. பிரிந்த மாதிரி தெரிந்தால் நம்முடைய சாதனை சரியில்லை. நாம் தான் விலகுகிறோம், அவர் விலகவும் இல்லை, விலக்கவும் இல்லை.*

*சில சமயங்களில் நம்மை பாராமுகமாக நடத்துவது போல் தெரியும். பார்ப்பதோ, பக்கத்தில் வருவதோ,*

பிரசாதம் கொடுக்காமல் இருப்பதோ இப்படி தெரியும். அங்கு மனம் நம்மை ஏமாற்றுகிறது. நமக்கு ஒரு பரீட்சை வைக்கிறார் நாம் எப்படி இருக்கிறோம், எப்படி இயங்குகிறோம், எப்படி இணைகிறோம் என்கிற உள்ளன்போடு இணையும்போது, ஒரு சமயத்தில் ஒரு சிறிய காரியத்தை பண்ணினாலும் கூட, கருணை மழை தன்படியே அதில் பொழிய ஆரம்பிக்கும்.

உங்களுடைய மன வைராக்கியம் எல்லாம், மனம் அழியாத்தன்மையினால் மனம் என்றுதான் சொல்ல முடியும். அந்த மனதின் வைராக்கியம் எல்லாம், ஒரு குரங்கு குட்டி எப்படி தாயை பற்றிக்கொள்கிறதோ, தாய் நின்ற இடத்தில் தன்படி இறங்கிவிடும் ஆங்காங்கே கிடைக்கும் இரையை எடுத்து சாப்பிடும், ஒன்றுக்கொன்று சண்டை போடுவது போல் விளையாடிக்கொண்டிருக்கும். விளையாடிக் கொண்டிருந்தாலும் கவனம் பூராவும் தாய் மேலேயே இருக்கும். தாய் இருக்கிறாளா அல்லது போய் விட்டாளா என்று பார்த்துக்கொண்டு தான் இருக்கும். எதாவது சலனம் எற்பட்டால் தாய் உடனே ஒரு சத்தம் கொடுக்கும் அல்லது ஒரு பார்வை பார்க்கும், அது உடனே வந்து ஒட்டிக்கொள்ளும். அதாவது நீயே கதி என்ற முழு நம்பிக்கை. அப்படி ஒட்டிக்கொண்டது என்றால் தாய் தன்படி எடுத்துக்கொண்டு பறந்து விடும்.

கர்ம காரியங்களில் ஒன்றும் முடியவில்லையே, உடம்பு இயலவில்லையே தளர்ச்சியாக இருக்கிறதே, ரொம்ப சோர்வாக இருக்கிறதே, நம்மாள் சேவை செய்ய முடியவில்லை, வேலை செய்ய முடியவில்லை பாடம் கேட்க முடியவில்லை. இப்படி பட்ட அயர்வு சோர்வு வரும் போது குருதேவா என்ற ஒரு உருகின

பிரார்த்தனை மட்டும் வைத்துக்கொண்டிருந்தால் போதும். ஒன்றும் முடியவில்லை நீயாக ஆட்கொண்டால்தான் முடியும், எங்களால் ஒன்றும் முடியாது என்ற ஒரு அவலநிலை ஏற்படும்போதும், கொஞ்சம் உருகி பிரார்த்தனை பண்ணும்போது, அந்த க்ஷணமே அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அங்கே தூக்கி வைத்து விடுகிறார். அது பூனை குட்டிக்கு, கத்தத்தான் தெரியுமே தவிர, தேடி அலைய தெரியாது, செயல்பட முடியாது. அந்த நிலை வரும்போது நீ செயல்பட வேண்டியதில்லை. உன்னை எங்கு வைக்க வேண்டுமோ, எப்படி காப்பாற்ற வேண்டுமோ, என்ன கொடுக்க வேண்டுமோ, என்ன செய்ய வேண்டுமோ அந்த க்ஷணம் பூனை குட்டி கழுத்தை தூக்கி வைப்பது போல் மேலே வைத்து விடுகிறார். அது அந்த பரகருணையினுடைய யோக மாயாவின் நிலை. செய்வது லோக மாயா, அதனால் யோக மாயா என்று சொல்ல முடியாது.

குருதேவா என்று கத்தி அலறதான் முடியுமே தவிர செயல்பட முடியாது, நகர்ந்து போக முடியாது, ஒரு காரியமும் பண்ண முடியாது. அப்படி ஒரு இயலாத்தன்மை ஏற்பட்டு போகும். அந்த இயலாத் தன்மை எப்பொழுது ஏற்படுகிறதோ மறு வினாடி உனக்கு என்ன செய்யவேண்டுமோ, எப்படி உபகாரம் பண்ண வேண்டுமோ, எங்கு வைக்க வேண்டுமோ, எதை எடுக்க வேண்டுமோ, எதை கொடுக்க வேண்டுமோ அந்த வினாடியே யோக மாயாவினுடைய கருணையினால் லோக மாயா செயல்பட்டு உங்கள் சிரமங்களை அந்த க்ஷணமே நீக்கும்.

அனுபவம் இல்லாத மனமானது சில சமயங்களில் நாம் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு இந்த பக்கம் வந்து

இருக்கிறோம். கனடா என்கிற ஒரு பகுதிக்கு மான்டிரியால் நகரத்திலோ அல்லது பத்ரி வன ஸத்குரு குடிலிலோ எங்கோ ஒரு இடத்தில் தனியாக விடப்பட்டு இருக்கிறோமே அவர் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறாரே காண முடியவில்லை, அவர் குரலை கேட்க முடியவில்லை, அவருடைய உபகாரத்தை பெற முடிய வில்லையே என்கிற மாதிரி கொஞ்சம் வருந்தினாலும் போதும், மறு வினாடி அந்த வருத்தம் தீர்ப்பதற்கு என்ன உண்டோ அத்தனை காரியமும் தானே நடக்கும். அது அதனுடைய கருணை.

உதாரணத்திற்கு ஒரு அன்பர் குருதேவர் படத்தையோ, பொம்மையையோ வைத்திருந்து நித்தியம் அதை எப்படி பூஜிக்க வேண்டுமோ, வழிபாடு பண்ண வேண்டுமோ அப்படி பண்ணிக்கொண்டு அவருடைய பாராயணத்தையோ, ஸத்ஸங்கங்களையோ நித்தியம் கேட்டுக்கொண்டு இருக்கிறான். தனிமையில் உட்கார்ந்துக்கொண்டு இருக்கும் போது எந்த இடத்தில் குருதேவருடைய படம் இருக்கும் அல்லது பொம்மையிருக்கும் மற்றும் தாமும் தனியாக உட்கார்ந்திருப்பான் அப்படி உட்கார்ந்திருக்கிற மாணவனுக்கு ஒரு புழுக்கம் ஏற்படுகிறது,

தெய்வாதீனமாக காற்று அடிக்கவில்லை, வெயிலின் கடுமை இதனால் வேர்வை உடம்பெல்லாம் ஒட ஆரம்பிக்கிறது. ஆஹா குருதேவருக்கும் புழுங்குமே அவருக்கும் இப்படி ஒரு சிரமம் ஏற்பட்டிருக்குமே என்று பார்த்தால் அது பொம்மையின் மீதும் (அல்லது படத்தின் மீதும்) தன்படி வேர்வை கோர்த்து நிற்கும். அங்க வஸ்திரத்தாலே துடைத்து விட்டு விசிறி எடுத்துக்கொண்டு வீசுவான், பிரபு உனக்கு உடம்பு

புழுங்கக்கூடாது உனக்கு வியர்வை வரக்கூடாது என்று உண்மையான பாவனையில், நேருக்கு நேர் நிற்கும் பாவனையில் வீசுகிறான்.

இங்கு இவன் வீசுவது பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள அவருக்கு அங்கு காற்று அடிக்கும். காற்று உடம்பில் பட்டவுடன் ஒரு வினாடி கூர்ந்து கவனிக்கிறார், நம்முடைய மாணவன் சிரம பரிகாரம் பண்ணுகிறான், நல்லா இரு என்று அங்கிருந்து ஆசீர்வாதம் பண்ணுகிறார். இந்த நிகழ்ச்சி போல கடுமையான பனி குளிர் தாங்க முடியவில்லை வெட வெட என்று நடுங்குகிறது சட்டையை போடுகிறான், பனியனை போடுகிறான், கோட்டை போடுகிறான், பனிக்குரிய பனியனையும் போடுகிறான் உடம்பு தாளவில்லை. அப்பொழுது அந்த பொம்மையும் படமும் நடுங்குகிற மாதிரி தெரியும். உடனே சால்வையை எடுத்து போத்துகிறான் அதற்கு. பொம்மையாய் பார்க்கவில்லை, படமாக பார்க்கவில்லை, குருதேவா என்று போர்த்தும் போது அங்கு அவர் உடம்பில் ஒரு உஷ்ணம் ஏற்பட்டு தன்படி சூழ்நிலை மாறும். தம்மீது ஒரு வஸ்திரத்தை போர்த்துகிறானே என்று உணர்கிறார். ஆனந்தமாக சிரித்து ஆசீர்வாதம் பண்ணுகிறார் அங்கிருந்து. இப்படி ஒவ்வொரு நிலையிலுமே நீங்கள் குருவுடன் ஒட்டி இருந்தால் அவரைவிட்டு நீங்கள் எப்பொழுதும் பிரியவே இல்லை. எந்த வினாடியும் அவர் உள்ளேயே இருக்கிறீர்கள் அந்த அனுபவத்தை பெறவும் முடியும்.

எந்த வினாடியும் தூல சிரமங்களோ, மனோ சிரமங்களோ ஏற்பட்டால், குருதேவா, குருநாதா என்கிற ஸ்மரணையோடு கொஞ்சம் கண்ணீர் பணிந்து உருகின உள்ளத்தோடு சேவை செய்யும் போது அந்த

வினாடியே அந்த சேவையை ஏற்றுக் கொள்கிறார். அவருக்கும் உனக்கும் உள்ள தூரம் இல்லவே இல்லை. நெருங்கி இரண்டுபேரும் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். மனம்தான் அவர் அங்கு இருக்கிறாரே என்று எண்ணுமே தவிர, உண்மையில் அவர் தனிமையில் இல்லவே இல்லை. இந்த மன பிரிவு எப்பொழுது ஒன்று பட்டு அவர் நம்மை விட்டு பிரியவில்லை என்கிற மாதிரி ஒரு திட உணர்வு ஏற்பட்டு ஆனந்தம் உண்டாகினால் அப்புறம் நீங்கள் அவரைவிட்டு பிரியவே முடியாது. எந்த வினாடியும் கூடவே இருக்கலாம்.

ஒரே வார்த்தை நீங்கள் எல்லாம் பாக்கியவான்கள்.

நாராயணா.

சிகரத்தையும் பார்த்து அதில் இருக்கப்பட்ட மரங்களும், அதற்கு கீழே உள்ள புல் வெளியையும் கவனி; அதற்கு கீழ் இருக்கப்பட்ட செடி கொடிகளையும் கவனி, இந்த நீர் தடாகத்தையும் பிரவாகம் என்கிற மாதிரி பார்த்தீர்கள் என்றால் அதில் இருக்கப்பட்ட புஷ்பங்கள் எல்லாமே வைகுண்டம் கைலாயம் மாதிரி ஆகிவிடுகிறது.

இப்படி உயர்ந்த பாவனை பண்ணி பண்ணி பார்த்தீர்கள் என்றால் மனம் எப்பொழுதுமே இருக்கவே இருக்காது. எப்பொழுதும் அறிவாகவே இருக்கும். எல்லாம் இறைவன் சொரூபம், எல்லாம் இறைவன் சிருஷ்டி, எல்லாம் இறைவன் இயக்கம் என்று இயற்கையோடு ஒன்றி இருந்ததால் போதும். செயற்கை வரவே வராது.

நாராயணா.

*கண்ணன் தூலத்தை விட்டு போனதுதற்கு பிறகு கோபிகா ஸ்திரீகள் எல்லாம் எண்ணி பார்த்து எந்த வினாடியும் கண்ணன் சொரூபத்திலேயே மயமானார்களே தவிர குடும்பம் இருக்கிறதே, தொழில் இருக்கிறதே, ஊர் இருக்கிறதே, நம்முடைய கிராமம் இருக்கிறது, நம்முடைய பிள்ளை இருக்கிறது என்கிற மாதிரி எண்ணம் வரவே இல்லை. எப்பொழுதும் கண்ணன் கூடவே இருக்கிறான். இயற்கையாக பார்க்கும் போது கண்ணன் கூடவே இருக்கிறான். செயற்கையாக உணரும்போது நீ பிரிந்து விடுகிறாய். செயற்கையாக பார்ப்பது நமக்கு தேவையில்லை. என்னுடையது, நான் செய்கிறேன் என்கிற உணர்ச்சியோடு இருந்தால் செயற்கை, அதில் கண்டிப்பாக பகவானை பார்க்க முடியாது. எல்லாமே அவனுடையது, அவன் இயக்கம், அவன் செய்கை எந்நேரமும் அவன் கூடவே இருக்கிறான் என்கிற மாதிரி உணர்வு ஏற்பட்டு விட்டால் அவனை விட்டு நாம் பிரியவில்லை, நம்மை விட்டு அவன் பிரியவில்லை. அப்புறம் சரீரம் எப்படி போனால் நமக்கென்ன, சரீரம் போன மறு வினாடி நாம் ஆனந்தமாகத்தான் இருப்போம்.*

*இங்கு இவன் உங்களை விட்டு பிரியவே இல்லை, நீங்களும் இவனை விட்டு பிரியவே இல்லை. மனம் தான் உங்களை பிரித்து வைக்கிறது.*

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *26.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா*

**குருதேவர்:** *(ஊஞ்சலில் அமர்ந்து குருதேவர் ஸத்ஸங்கம் நடத்தினார். ஊஞ்சலுக்கு முன் மரத்தின் சிறு வேர்கள் தரையில் படர்ந்து இருந்ததால் உட்காருவதற்கு அசௌகரியமாக இருந்தது. அதை அன்பர்கள் வெட்டிவிட்டார்கள். அது பற்றி குருதேவர் கூறினார்.)* சின்ன வேராக இருந்தாலும், மரத்தில் இருந்து வேரை வெட்டக்கூடாது. மரத்தின் ஆதாரமே வேர்தான். அதன் மூலமாகத்தான் உரமும், ஜலமும் மேலே போகிறது. அது பலன் தருகிறதோ தரவில்லையோ, ஆனால் நிழல் தருகிறதே. அனேக மிருகங்களுக்கு ஆகாரமாக இருக்கிறதே அனேக விதமாக அது உபயோகமாக இருக்கிறது.

நாமாவது ஒன்றிற்கும் உபயோகப்படவில்லை. வேலை செய்யவேண்டியது, சாப்பிடவேண்டியது, தூங்க வேண்டியது, ஒரு பிரயோஜனமும் இல்லை. நம் வசதிக்காக அதனுடைய வசதியைக் குறைப்பது மஹாதவறு. அதனால் சின்ன வேரானாலும் நீங்கள் ஒதுக்கி விட்டு செய்யுங்கள்.

மரங்கள் இருந்த இடத்தில் பாதை பண்ணவேண்டுமானால், அதைவிட்டு ஒதுங்கிப் போ. ஒரு காண் வெட்ட வேண்டுமானாலும், அந்த மரத்தின்

வேரை பாதிக்கப்படாதபடி அந்த காணை கொண்டு செல்லுங்கள். இயற்கையை நீங்கள் பாதுகாத்தால் இயற்கை உங்களை பாதுகாக்கும். நாம் தாண்டிப் போக வேண்டும். நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அவைகளை ஒதுக்கக்கூடாது. இங்குள்ள செடி, கொடி, மரம் இவைகள் இயற்கையாகவே உண்டாக்கப்பட்டன. அதுவும் ஒரு ஜீவனே. இந்த எண்பத்தி நான்கு லட்ச ஜீவகோடிகளும் - ஊர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவன எல்லா ஜீவவர்க்கங்களும் எப்படி சஞ்சாரம் பண்ணுகிறதோ, அப்படி சஞ்சாரம் பண்ணாத ஒரு ஜீவன் - மரம், செடி, கொடி, புல், பூண்டு. சஞ்சாரம் பண்ணாது, ஆனால் ஜீவன் உண்டு. மனிதனும் பாவ, புண்ணியத்திற்கு தகுந்தபடி இப்படிப்பட்ட ஜென்மா எடுக்க வேண்டியிருக்கும். அப்படி நாமும் இருக்கத் தான் செய்தோம்.

அப்படி புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மரமாகி என்பது மாதிரி எல்லா வர்க்கத்திலும் நாமும் இருக்கதான் செய்தோம். இன்று நாம் முன் செய்த தர்மத்தினால் மனித ஜென்மா எடுத்திருக்கிறோம். நாம் இன்னும் மேல் நோக்கி போவதற்கு முயற்சி செய்கிறோம். சாதனை பண்ணி அதனால் அவைகளுக்கு உபயோகமாக இருக்க வேண்டும்.நாமும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தோம். மரம், செடி, கொடிகளாகத் தான் இருந்தோம். இன்று பகவானுடைய கிருபையினாலும், பூர்வ ஜென்ம புண்ணியத்தினாலும் மேலே வந்திருக்கிறோம். வந்த பாதையை மறக்கக்கூடாதே. நாமும் மரம், செடி, கொடி, புல், பூண்டாக இருந்தவர்கள் தானே. நாம் அதற்குத் தகுந்தபடி மதிப்பும், மரியாதையும் கொடுக்க வேண்டும்.

தர்மம் பெரும்பாலும், என்ன சொல்கிறதென்றால் யாருக்கும் தீங்கு பண்ணாதே. நீ செய்யக்கூடிய தர்மமானது உன்னைக் காப்பாற்றும், நீ எது எதையெல்லாம் காப்பாற்றினாயோ அது, அதெல்லாம் உன்னைக் காப்பாற்றும். எது எதெற்கெல்லாம் நீ தீங்கு செய்தாயோ, அது அதெல்லாம் உனக்குத் தீங்கு செய்யும். நன்மை செய்தால் நன்மை கிடைக்கும் தீமை செய்தால் தீமை கிடைக்கும். இது ஜனன மரணத்திற்குரியது. இந்த ஜனன - மரண தர்மத்தை அனுஷ்டித்து வந்தால் தான் ஜனன - மரணம் இல்லாத இடத்திற்குப் போக முடியும்.

அந்த தர்மத்தைப் புறக்கணித்தோம் என்றால், புண்ணிய பாவம் தர்மமாக மாறாது. புண்ணியம் தர்மமாக மாற வேண்டுமானால் கூடுமானவரை தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நம்மால் பிறருக்கு சிரமம் ஏற்படக்கூடாது. பிறர் சிரமம் ஏற்படுத்தினால் பொறுத்துக் கொள், சகித்துக்கொள், மறக்கப்பழகு, மன்னிக்கப்பழகு இது தான் தர்மம்.

எதுவும் சந்தேகம் இருக்கிறதா?

**அன்பர்:** நீங்கள் நடந்து போகும் போது அடிக்கடி சிரித்துக் கொண்டே இருக்கிறீர்களே, சிரிப்பு எதற்காக?

**குருதேவர்:** பைத்தியம் என்ன பண்ணும்? நீயும் பைத்தியமாகு உன்னால் சிரிப்பை அடக்க முடியாது. ஒரு சில மஹாத்மாக்கள் ஒன்றிரண்டு கேள்வி கேட்டுக் கொண்டே வருவார்கள். சூட்சுமமாக இருப்பதனால் யாருக்கும் தெரியாது. அவர்களுக்கு பதில் சொல்லும் போதோ அல்லது அவர்கள் சொல்லும் கருத்தை ஏற்றுக்கொள்ளும் போதோ சிரிப்பு ஏற்படும். அதை வெளியில் சொல்லி விளக்க முடியாது. விளக்க

முயற்சிக்க யாராலும் முடியாது. அந்த நிலை வந்தால் கண்டிப்பாக முடியும்.

***அன்பர்:*** வெற்றிடமாக இருக்கிறதல்லவா, சூன்யம் - எண்ணமற்ற நிலையிலிருந்து அகண்டானந்தத்திற்கு எப்படி போவது?

***குருதேவர்:*** வெற்றிடம் என்று சொல்லக்கூடிய சூனியமானது மனமில்லாத நிலை. அறிவும் மௌனமான நிலை. அறிவு அழியவில்லை. அறிவு இருக்கத்தான் செய்யும். அறிவு என்பது ஆன்மா. அது இருக்கப்பட்ட துவேஷ குணங்கள், ஜீவதன்மை அனைத்தும் நாசமாகிப் போகிறது. அப்படி இருக்கும் போது, சுத்தமான ஆன்மாவாகும் போது, அந்த ஆன்மா, பரமான்மாவாகிய சுத்த பரப்பிரம்மத்திற்குள் ஐக்கியமாக வேண்டும். அப்படி ஐக்கியமாகக்கூடியது தான் வேதாந்தம் சொல்லக்கூடிய நான்கு மஹா வாக்கியங்கள்.

அந்த நான்கு மஹாவாக்கியங்களுக்கும் அதீதமாக இருக்கக்கூடியது, யாம் அதுவாக இருக்கிறோம், யாம் யாமாக இருக்கிறோம், யாம் இருக்கிறோம். இவை எண்ணமல்ல, பாவனை. இந்த மூன்று பாவனையை நாம் அறிவோடு உள்ளத்தில் இணைத்து விட்டோம் என்றால் அது அகண்டானந்தத்திற்கு கொண்டு போய்விடும். யாம் அதுவாக இருக்கிறோம் - கண்டம்; கண்டானந்தம். இது என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அதுவும், நாமும் ஒன்றாகிவிட்டோம்.

யாம் அதுவாக இருக்கிறோம்


யாம் யாமாக இருக்கிறோம்

யாம் இருக்கிறோம் என்று மூன்று வரும். இருக்கிறோம் என்ற ஒன்று தான் வரும் அங்கே யாம்


இருக்காது. அப்படி வந்தால் தான் முழுநிலை. அந்த சூன்யத்தை அடையாதபடி சுத்த பிரம்மத்தை அடைய முடியாது. ஜீவன் முக்தி பெறமுடியாது. பெரும்பாலும் மஹான்கள் எல்லோரும் சூன்யத்தையே சுட்டிக்காட்டுகிறார்கள். எண்ணம் இல்லாமல் இருந்தால் போதும் நாம் பெரும்பாலும் அந்த பிரம்மத்தோடு ஐக்கியமாகி விட்டோம். ஜீவன் முக்தி அடைந்து விட்டோம் என்பது மாதிரி சொல்கிறார்கள்.

எண்ணமற்ற நிலையும் தாண்டி அதற்கப்புறம் எண்ணத்தையும் பாவனையாக வைத்தால் தான் முடியும். எண்ணம் பாவனையாகாதபடி முடியவே முடியாது.

*நாராயணா!*







ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 26.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா

**அன்பர்:** சிறிது சிறிதாகவும், படிப்படியாகவும் இது நடக்கும்.

உங்கள் புனித தாமரைத் திருவடிகளுக்கு நமஸ்காரங்கள். எமக்கு சிறிதளவு ஆங்கில மொழி தெரியும், ஆனால் தமிழ் மொழி தெரியவே தெரியாது. அதனால், மனதால் உங்களுடைய பாடங்களையும், ஸத்ஸங்கத்தில் நடக்கக்கூடிய வார்த்தைகளையும், ரிபு கீதையும் சிறிதளவு தான் புரிந்துகொள்ளமுடிகிறது. எமக்கு என்ன தெரிகிறதென்றால் எல்லாம் நன்மையாக நலமாகவே நடக்கும். எமக்கு ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் அன்பு அம்மா விளக்கம் கொடுப்பார்கள். மேலும் கார்க்கி அம்மாவும் விளக்கம் கொடுப்பார்கள்.

கார்க்கி அம்மா என்ன சொன்னார்கள் என்றால், மனதால் நம்மால் அறிந்து கொள்ள முடிய வில்லையென்றால், அது நமக்கு ஆசீர்வாதம்போல். மனதால் அறிந்து கொள்ள முடியவில்லையென்றால், அந்த பாடங்கள் எல்லாம் நேரிடையாக நம் இதயத்திற்கு சென்று விடுகிறது.

**குருதேவர்:** சொல்லப்பட்ட இரண்டு வார்த்தைகளுமே ஸத்தியமான வார்த்தைகள். மனதால் அறியவில்லை

என்றால், கண்டிப்பாக நம்மால் தெளிவாக உணரமுடியும், அந்த அளவிற்கு நமக்கு அறிவு இருக்கிறது. மனம் அறிந்து கொண்டதானால் குழப்பம் தான் உண்டாகும். நாமரூபம் சம்பந்தப்பட்டது தான் மனம். மனம், அறியவில்லையானால், அவர் சொல்வது ஸத்தியமே என்று உணர்வோடு ஏற்றுக்கொள்ளும் போது, அறிவு பரிபூரணமாக ஏற்றுக்கொள்கிறது. அதனால் கண்டிப்பாக நிலை பெறமுடியும். நேராக போவதனால் அது தடங்கல் இல்லை.

மனதின் தடங்கலே தவிர வேறொன்றுமில்லை. எண்ணம் வந்து மனம் தடங்கல் பண்ணி உள்ளே போவதைத் தடுக்கிறது. நமக்கு மனம் விகாரமாக இல்லாமலிருந்தால் நேராக உள்ளே போய்விடும். ஆசீர்வாதம் என்று சொல்வது ஸத்தியமான வசனம். மொழியைப் பற்றித் தேவையேயில்லை. உலகத்தில் நூற்றுக்கணக்கான பாஷைகள் இருக்கலாம் ஆயிரக்கணக்கான பாஷைகள் இருக்கலாம். பாஷை முக்கியமில்லை. நாம் அதை அடையவேண்டும், வாழ வரவில்லை என்ற உணர்வு இருந்தால் போதும். இன்ப துன்பத்தோடு வாழ வரவில்லை. இன்பமும், துன்பமும் சகஜம். அது உடலுக்கு உரியது. அந்த உடலோடு ஒட்டி நாம் வாழ வரவில்லை. நாம் அதை அடைய வந்தோம். அதுவே நாம் என்ற திட உணர்வு இருந்தால் மட்டும் போதும்.

பாஷை அங்கு தேவையில்லை. அந்த உணர்வு மட்டும் இருந்தால் குருதேவர் சொல்லக்கூடிய அந்த ரசாம்சமானது நேராக உள்ளே போய்விடுகிறது; தடங்கல் இல்லாமல் போய்விடுகிறது. மனம் தடங்கல் பண்ணினால், அவர் என்ன சொன்னார்? அவர் அப்படி

சொல்லியிருப்பாரோ? அவர் இதை சொன்னாரோ, அதை சொன்னாரோ, நமக்கு சரியாக புரியவில்லையே நமக்கு விளங்குமா? விளங்காதா? நாம் பயிற்சி பண்ண முடியுமா / முடியாதா? இப்படி இரண்டுபட்ட தன்மை தான் மனதிற்குரியது.

இந்த இரண்டுபட்ட தன்மையானது பார்வையை மறைக்குது. இந்த இரண்டுபட்ட தன்மை மட்டும் நாசமானால் போதும். அவசியம் முடியும், குரு கிருபை கிடைத்துவிட்டது. அவர் பார்வை நம் மீது பட்டுவிட்டது. நமக்கு அவரின்றி வேறெதுவும் இல்லவே இல்லை. என்ன செய்தாலும் அவரே ஆக்குவதுவும், அழிப்பதுவும் அவருக்கு உரிமை உண்டு. அவரைத் தவிர மற்றவர் இல்லவே இல்லை இந்த உலகத்திலோ, தேவலோகத்திலோ, மற்ற எந்த உலகத்திலோ அவருக்கு அன்னியமாக வேறு எதுவும் இல்லவே இல்லை. அவரே பரம்பொருள் அவரே பகவான் அவரே ஸத்குரு என்ற திட உணர்வு இருக்கும் போது direct ஆக சொல்லக்கூடிய ஸத்திய வசனம் உள்ளே போகிறது. மனம் இருக்கும் போதுதான் தடங்கல் பண்ணுகிறது. முடியுமா/ முடியாதா? கிடைக்குமா/கிடைக்காதா? நாம் அதற்குத் தகுதி உள்ளவனா அல்லது தகுதி இல்லாதவனா? நாம் சாதனை பண்ணியிருக்கிறோம். நாம் ஒரு சாதனையும் பண்ணவில்லையே? இப்படி எண்ணங்கள் வந்து, வந்து மறைக்கிறது. அது தான் போகக்கூடிய ஜலத்தை நிப்பாட்டுகிறது. அந்த எண்ணத்தை நாசம் பண்ணினால் போதும்.

ஒரு அம்மா கேள்வி கேட்டாள் எண்ணம் தான் முக்கியம் என்றால் எண்ணத்தை நாசம் பண்ணினால் சூன்யம். அந்த எண்ணமற்ற நிலையைப் பெற

முடியுமா என்று கேட்டாள். உண்மைதான் அது. பெரும்பாலும் அதோடு நிறுத்திக்கொள்கிறார்கள். குருதேவரின் கிருபையினால் அந்த எண்ணமற்ற நிலையிலும், அந்த ஒரு எண்ணத்தை வை, அது எண்ணமல்ல பாவனை, அது ஒன்று தான் நீ செய்ய வேண்டிய காரியம். வேறு ஒன்றும் பண்ண வேண்டாம். திட உணர்வு - நாம் ஜீவன் முக்தி பெற்று விட்டோம். நாம் அதுவாக ஆகிவிட்டோம் அதற்கு அன்னியமாக நாம் இல்லவே இல்லை. நம் குருவிற்கு அன்னியமாக நாம் இல்லவே இல்லை. வேறு எந்த உறவும் இல்லை. வேறு எவரும் இல்லவே இல்லை. அவரே நாம் நாமே அவர். ஏனென்றால் அவருக்கு அன்னியமாக வேறு எவருமில்லவே இல்லை. முடியுமா / முடியாதா என்ற இரண்டுபட்ட தன்மை வரும்போது தான் சிரமம் உண்டாகிறது. அந்த சிரமம் தேவையில்லையே.

நாமே அது அதுவே நாம் என்பது உறுதியானால் வேறு சந்தேகம் உண்டாவதற்கு பாதை உண்டா? என்ற இந்த கேள்வியை மனதிற்கு கேட்கலாம். நாமே அது என்ற பாவனை உறுதியானால் வேறு சந்தேகம் வருவதற்கு பாதை உண்டா? நாமே அது, அதுவே நாம் என்ற பாவனை ஸத்திய பிரமாணமாக உறுதியானால் வேறு எந்த எண்ணம் வரும்? வந்தால் அஞ்ஞானம் தானே நம்மால் முடியுமா/முடியாதா? கிடைக்குமா/ கிடைக்காதா? நாம் சாதனை பண்ணுகிறோமா/ பண்ண வில்லையா? என்ற இந்த எண்ணம் தான் அலைக்கழிக்கிறது.

அந்த எண்ணம் வரக்கூடிய ஆசையிலே தடுக்கிறது. அந்த எண்ணத்தை மட்டும் நிறுத்தி விட்டால் போதும். முடியும், முடிந்துவிட்டது அவ்வளவுதான் முடியுமா?

*தேவையில்லை. முடியும் புள் ஸ்டாப். முடிந்து விட்டது - இரண்டாவது முடியுமா? என்பது தேவையில்லை.*

*கடிதத்தின் தொடர்ச்சி சாதனை பண்ணுவதை மனதினால் அறிந்து கொள்ளவேண்டுமா?*

**குருதேவர்:** *வேண்டியதேயில்லை. அன்றாடம் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடங்கள் எல்லாம் அப்பைக்கப்ப அப்பைக்கப்ப வாழ்க்கையில் நடக்கப்பட்ட கர்மாக்களில் மனம் பற்றப்படாமல் இருப்பதற்குத் தான் என எண்ணம் வேண்டும். கர்மகாரியங்கள் நிறைய பண்ணுகிறோமே, குடும்பத்திலோ, தொழிலிலோ பிரச்சினைகள் நிறைய பண்ணுகிறோமே பண்ணும் போது வரக்கூடிய எண்ணங்களை நாசம் பண்ணுவதற்கு தான் மனதிற்கு திட உறுதி வேண்டும் என்று சொல்வது. மனதின் திட உறுதி என்பது அறிவின் இயக்கம். மனதிற்கு தொடர்பே கிடையாது. லௌகீக சம்பந்தப்பட்ட அனைத்தையும் மனது தான் செய்கிறது. மனம் தான் எண்ணுகிறது. அந்த எண்ணத்தைத் தடுக்க வேண்டும். எல்லாம் நன்மைக்கே எல்லாம் நலமே, எல்லோரும் நல்லவர்களே என்ற திட உறுதியை ரொம்ப ஸ்திரப்படுத்த வேண்டும். கண்டிப்பாக முடியும். சந்தேகப்படுவது அனைத்தும் மனம் தான். வேறொன்றும் இல்லை.*

**அன்பரின் கடிதத்தின் தொடர்ச்சி :**


**அன்பர்:** *கொஞ்சம் கொஞ்சமாக படிப்படியாக அது நடக்கும்.*

**குருதேவர்:** *அது ஸத்தியமானது. உடனே கிடைத்தது என்றால் நிலைத்து நிற்காது. கிடைத்த மாதிரி தெரியும் பன் மறைந்து போகும் இல்லாமலே போய்விடும். ஒன்றும் தெரியாமலே இருந்து கொண்டு அணு அணுவாக,*

*அணு அணுவாக, அணு அணுவாக, படிப்படியாக படிப்படியாக, படிப்படியாக வந்ததானால் கண்டிப்பாக நிலைத்து நிற்கும். உதாரணம், வேகமாக பெய்யப்பட்ட மழையானது எப்படி ஓடிவிடுமோ தரையின் உள்ளே இறங்காதோ அதே மாதிரி ஆகும். மெல்ல பெய்யக்கூடிய தூரலானது, சிறு மழையானது பெய்ய பெய்ய அந்த ஜலத்தை பூமி குடித்துக் கொண்டே இருக்கும். அடி ஆழம் வரை ஜலம் உள்ளே போகும். அதே மாதிரி அணு அணுவாக, அணு அணுவாக, மெல்ல மெல்ல மெல்ல வந்ததென்றால் நமக்கு அனுபவம் கூடும். தீடீரென்று வரக்கூடாது. தீடீரென்று வந்தால் அது எப்படி வந்ததோ அப்படி மறைந்து போகும். அது மட்டும் உறுதி.*

*அன்பர் அளித்த கார்டைப் பற்றி குருதேவரது வாக்கியம்:*

*யானையைப் போட்டு யானையின் மேல் ஐந்து விதமான கேள்விகளாக சொல்லிக் கொள்ளலாம். ஐந்து கேள்விகளும், ஐந்து குருடர்கள் யானையைப் பார்த்த கதை. நாமும் குருடர்கள் தான் பெரும்பாலும். அறியாமையாய் இருக்கும் போது குருடர்கள். அந்த அறியாமை நீங்கிவிட்டதானால் நாம் குருடர்களல்ல. ஞானமான கண்ணை உடையவர்கள். அந்த ஐந்து பேரில் ஒருவன் துதிக்கையைத் தொட்டுப் பார்க்கிறான் யானை ஓர் உலக்கை போன்றது என்கிறான். ஒருவன் காதை தொட்டுப் பார்க்கிறான். யானை ஓர் முறம் போன்றது என்கிறான். ஒருவன் காலைத் தொட்டுப் பார்க்கிறான். யானை ஓர் தூண் போன்றது என்கிறான். ஒருவன் வயிற்றைத் தொட்டுப் பார்க்கிறான். யானை ஓர் பானை போன்றது என்கிறான். ஒருவன் வாலைத்*




தொட்டுப் பார்க்கிறான். யானை ஒட்டடக்குச்சி போன்றது என்கிறான்.

உலக்கை, முறம், தூண், பானை, ஒட்டடைக் குச்சி - இவையனைத்தும் நாமரூபம். இந்த நாமரூபத்தில் மயங்கின தன்மையினால் இது என் மனைவி, என் கணவன், நான் பெற்ற பிள்ளை, என் தொழில் என்று விவகாரம் பண்ணுகிறீர்கள். இது மனதால் செய்யக் கூடியது. இந்த விவகாரத்தைக் காலி பண்ணி விட்டு, எல்லாம் ஒன்றே இந்த ஐந்தும் சேர்ந்தது யானையே. யானைகள் ஐந்துமில்லை, இந்த ஐந்தும் யானைக்குள் அடங்கியிருக்கிறது. பிரம்மத்திற்குள் அடங்கி இருக்கிறது. அதுவே நாம் என்று இந்த ஐந்தையும் கேள்விக் குறியாக மாற்றிக் கொண்டு ஐந்து கேள்விகளைக் கேட்டு சங்கடப்படுவதை விட்டுவிட்டு எல்லாம் ஒன்றே, துதிக்கையானாலும் சரி, காதானாலும் சரி, காலானாலும் சரி, வயிறானாலும் சரி, வாலானாலும் சரி எல்லாம் ஒன்றே என்று திடமான உணர்வு ஏற்பட்டுவிட்டால் வேறு கேள்வி ஏது? வேறு மார்க்கம் ஏது? இப்படி பார்த்து பார்த்து தானே கெட்டுப் போகிறோம்.

உலகத்தைப் பார்த்து தானே பெரும்பாலும் மனது விகாரமடைகிறது. இது இன்னார், இது இன்னார் இது இன்னார் என்று விகாரமடைகிறது, அது

தேவையில்லையே. கொஞ்சம் எண்ணத்தைக் குறைத்தால் போதும். வார்த்தை குறைந்து போகும். வார்த்தை குறைந்தால் செயல் கண்டிப்பாக இருக்காது. மனித இயக்கமே எண்ணம், சொல், செயல். இந்த மூன்றையும் நாசம் பண்ணலாமே. அவசியம் முடியும். அனைத்து ஜீவசொரூபங்களையும் ஊர்வன, நடப்பன, பறப்பன, நீந்துவன என்று சொல்லக்கூடிய எண்பத்தி நான்கு லட்ச ஜீவகோடிகளாக இருக்கப்பட்ட ஜீவசொரூபங்களையும், சஞ்சாரம் செய்யாத தாவர வர்க்கங்களையும், மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய தாவர வர்க்கங்களையும், கண்ணில் காணக்கூடிய பண்டமோ, பதார்த்தமோ, உணவோ, உடையோ, இருப்பிடமோ, கட்டிடமோ எந்த வஸ்துக்களும் இவை அனைத்தும் எதனால் ஆனது, என்ற கேள்வியை கேட்டுப் பார். மேலே கூறிய எந்த நாமரூபமானாலும் சரி இவையெல்லாம் எதால் உண்டானது. எதால் ஆனது, எப்படி வந்தது என்று கேட்டால் எல்லாம் மண்மயமே மண்ணிற்கு அன்னியமாக எதுவும் இல்லவே இல்லை.

நீ சொல்லக்கூடிய நாமரூபம் அனைத்தும் பொய்யே. உண்மையில் இருப்பது மண்ணே என்ற உறுதி கண்டிப்பாக உண்டாகும். எல்லாம் மண் என்று உணர்ந்துவிட்டால் வேறு கேள்வி ஏது? சலனம் ஏது? சந்தேகம் ஏது? பய-துக்கம் ஏது? கேள்வி கேட்டு, கேட்டு, கேட்டு மனதை திணறடிக்கிறோம். எல்லாம் அந்த ஒன்றிற்கு அன்னியமில்லை, மண்ணிற்கு அன்னியமில்லை, எதுவானாலும் சரி என்ற திட உறுதி இருந்தால் கண்டிப்பாக தவறே ஏற்படாது. அப்படி வரும்போது நடப்பதெல்லாம் நன்மைக்கே, எல்லாம் நன்மையே, எல்லோரும் நல்லவர்களே, தீமை இல்லவே இல்லை என்ற திட உணர்வு உண்டாகும்.

மனமானது தன்படியே இல்லாமல் போய்விடும். அங்கே, அந்த வினாடி ஆனந்தமாக இருக்கலாம்.

இந்த அனுபவம் பெறுவதற்கு நிறைய படிக்கத் தேவையில்லை. நிறைய விளக்கம் பெறவும் தேவையில்லை. இதற்கு எந்தவிதமான பயிற்சியும் தேவையில்லை. ஆனால் எல்லாம் அந்த ஒன்றிற்கு அன்னியமில்லை என்று முடிவு செய்துவிட்டால் நாமரூப மயக்கம் கண்டிப்பாக இருக்காது. நாம ரூப மயக்கம் இல்லையானால் கண்டிப்பாக நீ எந்த வினாடியும் அதுவாகத் தான் இருக்கிறாய். நாமரூப மயக்கம் இருக்கும் பரியந்தம் அந்த எண்ணம் வராது. நாமரூப மயக்கம் நாசமாகிவிட்டால் அது நாம் என்ற உணர்வு திடமாக இருக்கும். அதற்கு அன்னியமாக எந்த பயிற்சியும் தேவையில்லை, ஆனந்தமாக எப்பொழுதும் இருக்கலாம்.

**அன்பரின் கடிதம்:**

**அன்பர்:** உங்கள் புனிதத் தாமரை திருவடிகளுக்கு நமஸ்காரங்கள்.

அன்பான குருதேவா, தங்கள் புனித தாமரைத் திருவடிகளுக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம். மென்மையான பஞ்சு போன்ற இதயத்தை அர்ப்பணம் பண்ணுகிறோம். கண்ணீர் பெருக்கத்தை உங்களுக்கு அர்ப்பணம் பண்ணுகிறோம். ஆழ்ந்த ஏக்கத்தை உங்களுக்கு அர்ப்பணம் பண்ணுகிறோம். எங்களுடைய நம்பிக்கையை உங்களுக்கு அர்ப்பணம் பண்ணுகிறோம். உங்களுடய இருப்புத் தன்மையை எப்பொழுதும் எம்முடைய இதயத்தில் உணரமுடிகிறது.

*எம்முடைய வாழ்க்கை மேலும் மேலும் அமைதியும், ஏகாந்தமாகவும், சாந்தமாகவும் இருக்கிறது. அமைதிக்காக யாம் மேலும் மேலும் ஏங்குகிறோம். எங்களுடைய அன்பான பரகுரு எங்களை வழிகாட்டிக் கொண்டு வருகிறார். உங்களுடைய கிருபையினால் வாழ்க்கை என்ற பிரயாணம் நடந்து கொண்டு வருகிறது. உம்முடைய சாந்நித்யத்தில் இருப்பதற்கு. மிக்க நன்றியுடனும், ஆழ்ந்த ஏக்கத்துடனும் உங்கள் குழந்தை.*

**குருதேவர்:** *திட உறுதியான வாக்கியங்கள் மிகவும் அனுபவ ரீதியான வாக்கியங்கள், ஸத்தியப் பிரமாணமான வாக்கியங்கள், அவள் உணர்ந்த அத்தனையும். இந்த சரீர உணர்ச்சிகளைக் கெடுத்து எல்லாம் நீயே, எல்லாம் நலமே என்ற உணர்வை மேலும் மேலும் பெருக்கி வந்தால் அவசியம் சொல்லக்கூடிய அனைத்தும் அவளுக்கு சாத்தியமாகும்.*

*அன்பர் அளித்த கார்டைப் பற்றி குருதேவரது வாக்கியம்*

*ஒரு பெண் குழந்தை ஒரு செடியிலிருந்து வரக்கூடிய புஷ்பத்தைப் ரொம்ப கூர்ந்து கவனிக்கிறது. நூற்றுக்கணக்கான தேனீக்கள் அதைச் சுற்றி பறக்குது. தேனீக்கள் பறந்து, அந்த தேனைப் பருகுவதற்கு புஷ்பமானது தேன்கிண்ணமாக மாறுகிறது. தேன்கிண்ணமாக மாறினால்தான் தேனீக்கள் அதிலிருந்து சாப்பிட முடியும். ஓரத்திலிருந்து பருகிக்கொண்டிருக்கும் தேனீக்கள் இயல்பாகவே உள்ளே விழுந்துவிடும். புஷ்பத்தில் நின்றால் வெளியே பறந்து போய்விடும் கொஞ்சம் கவனித்துப் பார்க்கிறது. ஒன்றும் வெளியே போகமுடியவில்லை.*


ஒவ்வொன்றும் திரும்ப திரும்ப உள்ளே வந்து தான் உட்காருகிறது. அந்த புஷ்பமானது அப்பொழுது தேன்கிண்ணமாக மாறுகிறது.

அது மாறிய உடனே ஒவ்வொரு தேனீயாக உள்ளே உட்கார்ந்து பருகுகிறது. அந்த பேருணர்வில், பிரம்மானந்தத்தில் லயமாகி உள்ளே மயமாகிறது. ஒன்றும் வெளியே போகவில்லை. வந்த தேனீக்கள் அனைத்துமே தேனைப் பருகிப் பருகி மயமாகி தன் தூலத்தை விட்டு வினையை முடித்து ஜீவன்முக்தி அடைந்து விடுகிறது. அந்த மாதிரி தேனீக்கள் போன்று இருப்பவர்கள் தான் கனடா அன்பர்கள். வந்து விட்டால் இதை விட்டு வெளியே போகமுடியாது. அதைத்தான் சித்திரமாக வரைந்து காட்டியுள்ளான்.

*நாராயணா!*







ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 26.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா

**குருதேவர்:** என்னது அது?

***சீடர்:*** உள்ளே ஓம் என்று இருக்கும் ஸ்வாமிஜீ அதை ஒரு மாதிரி மாறுபட்ட கோணத்தில் பார்க்க வேண்டும் மற்றும் இதை உற்று பார்க்க வேண்டும்.

***சீடர் 1:*** பார்வையை எந்த பக்கமும் சிதறவிடாமல் அதையே உற்றுப்பார்க்க வேண்டும்.

***சீடர்:*** பார்த்துக்கொண்டே இருந்தால் உள்ளே ஓம் தெரியும். மூன்று விதமாக இருக்கும். ஒன்று பள்ளத்திற்குள் இருப்பது போலவும், ஒன்பது கோள்கள் அதன் நடுவில் ஓம் என்றும் இருக்கும். பதிமூன்று வருடங்களுக்கு முன் கார்க்கி அம்மாவும், ஜனகாஜீயும் ரிஷிகேஷில் வாங்கினார்களாம். ரொம்ப நேராக பார்க்க வேண்டும்.

***சீடர் 1:*** பத்ரிக்கு போயிருந்தபோது எல்லோருமே வாங்கினார்கள். அதில் ராதாகிருஷ்ணன் போட்டோ இருக்கும்.

**குருதேவர்:** உற்று உற்று நாடி உள்ளம் மருண்ட பாவியை நீ சற்று விலக்கினால் போதாதோ பராபரமே! அதாவது உற்று உற்று பார்த்து கெட்டுப்போகிறோமே என்கிறான். ஓம் என்கிறீர்கள் அது வேற மாதிரி தெரிகிறது.

***சீடர்:*** *ரொம்ப நாளாக இதை உங்களிடம் கொடுக்க வேண்டும் என்று இருந்தோம் ஜனகாஜீக்கு. இந்த ஓம் எப்படி என்றால் ஏழு கதவை திறந்து பெருமாள் இருப்பார் இல்லையா அதுபோல இதன் உள்ளே இருக்கும் ஓம்மை நாம் கான்ஸ்ரன்டேட் பண்ணி பார்க்க வேண்டும்.*

**குருதேவர்:** *காணவில்லையே.*

***சீடர்:*** *நீங்கள் அதனை தாண்டியவர்.*

***சீடர் 2:*** *நீங்கள் அதை தாண்டி போய் அந்த ஒன்றோடு ஐக்கியம் ஆகிவிட்டீர்கள்.*

***சீடர்:*** *இது மாடர்ன் ஆர்ட் மாதிரி இதை அப்படியே உற்று பார்க்க வேண்டும். கண்கள் ஒரு மாதிரி ஆகிவிடும்.*

***கார்க்கி மா:*** *இது 2002 இல் வாங்கியது மற்றும் இதை மிக கவனமாக உற்று பார்த்து உணர்ந்து மகிழ்வதற்காக இப்போது பரகுருவே எங்களோடு இருக்கிறார். இப்போது இது தேவையில்லை.*

**குருதேவர்:** *இயல்பாகவே இருப்பதனால் மனதை அதில் உட்படுத்தி பார்க்க முடியவில்லை. அன்பர்கள் தங்களை இந்த நாட்டை சேர்ந்தவர்கள் என்று அறிமுகம் செய்து கொள்ளும்போது கூட சரி, சரி என்கிறான். அன்பர்களை பார்க்கும் போது இவன் திருஷ்டிக்கு பொம்மையாகத்தான் தெரிகிறது. அந்த பொம்மையாகப் பார்க்கக் கூடியதையும் மௌனமாக்கி அமைதியாக உட்கார்ந்தோம் என்றால் ஒளிமயமான ஒரே பிரகாசம்தான் தெரியும். நீங்கள் பேசக்கூடிய வார்த்தைகளை, ஒலியை கவனித்து அதைக் கேட்டு உங்களுக்கு பதில் கூறவேண்டி இருக்கிறது. அதைவிட்டு பூஷணமோ, தூஷணமோ அந்த ஒலிகளை விட்டு விடும் போது ஓம்காரம் மட்டும்தான் கேட்கும்.*


வார்த்தைகளின் அர்த்தமே தெரிவதில்லை. ஓம் என்ற பிரணவம் மட்டும்தான் கேட்கும். காட்சிகள் ஒளிமயம், இது ஒலிமயம். ஒளி ஒலி. ஒளி என்று கூறும்போது அது மின்னல், சூரியன், சந்திரன், மின் விளக்கு ஆகியவற்றிலிருந்து வரும் வெளிச்சம் அல்ல. ஒளிமயமானது.

பார்வைக்கு நீங்கள் பார்ப்பது போல உருவம் தோற்றாது. நாடு, மொழி, இனம், மதம் ஆகிய எதுவும் தெரியாது. தனக்கும் காணக்கூடிய தோற்றத்திற்கும் வித்தியாசம் தெரியாது. காணக்கூடியது எதுவும் தன்னைப் போலவேதான் இருக்கும். தனக்கு அந்நியமாகத் தெரியாது. ஆனால் நீங்கள் எந்த கேள்வி கேட்டாலும் இயல்பாகவே பதில் சொல்லும். அதற்கு எந்த பயிற்சியும், முயற்சியும் இல்லை. காணும்போது மனம் இருந்தால் வேறுபாடுகள் தெரியும்.

உண்மையை உணர்ந்தவர், ஞானி என்றும் இன்னும் அநேகம்பேர் அவரை உடலாக பார்க்கும் வரை தெரியும். அவரை உடலாகக் கருதாத போது அவர்தான் நாம். நாம்தான் அவர் என்று உணர்வு இருக்கும். அந்த நிலையை சீக்கிரம் பெறுவீர்கள்.

நாராயணா!





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 27.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா

**குருதேவர்:** ஒரு குரு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஜீசஸ் பற்றி கூறுவார்கள். தன் தூலம் மறையப் போகிறது. அது தெரிந்தே தன் மெய்யன்பர்களுக்கு, (பனிரெண்டு பேர் சீடர்கள் என்று சொல்வார்கள்) பிய்த்து, பிய்த்து ரொட்டியைக் கொடுக்கிறார். அதை சாப்பிட்ட உடனே ஒரு கப்பில் திராட்சை ரசம் கொடுக்கிறார். கொடுத்து எம்மையே உங்களுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டோம் என்று சொல்கிறார் அந்த ஸத்குரு. அவர் கொடுத்தது ரொட்டி அல்ல. அவருடைய சரீரம். மாமிசம் என்னென்ன உண்டோ அத்தனையும் அறுத்து கொடுக்கிறார் அந்த ரொட்டியாக. அதை சாப்பிட்ட பின் திராட்சை ரசம் கொடுக்கிறார். அது தன்னுடைய ரத்தத்தையே தத்தம் செய்துவிட்டோம், அர்ப்பணித்து விட்டோம் என்று அதைக் கொடுக்கிறார். அதை சாப்பிடுகிறார்கள். இது இரண்டுதான் அவரால் கொடுக்கமுடியும்.

கொடுக்க முடியாத ஒன்று எலும்பு; அதை கொடுக்கவும் முடியாது, வாங்கவும் முடியாது. சுத்த பரம். ஒன்றுக்கும் உதவாத, உதவ முடியாத சுத்த காலாதீத பரம். அதை சிலரால்தான் உணர முடியும். அதோடு மறைந்துவிட்டார். மதத்தில் எப்படி சொல்கிறார்கள்

என்று தெரியவில்லை. தன் சரீரத்திலுள்ள மாமிசத்தையும், ரத்தத்தையும் அர்ப்பணம் பண்ணி எலும்பை சாட்சி பாவனையாக அனுபவியுங்கள் என்று விட்டுவிட்டு போய்விட்டார். ஓரிருவர் அனுபவித்தனர். மற்ற யாரும் அனுபவிக்கவில்லை. குரு இதைத்தான் செய்ய முடியுமே தவிர வேறொன்றும் இல்லை. எதை எடுத்தாலும் அஸத்தானதுதான் என்று பைபளில் சொல்லப் படுகிறது.

அதைப்போலவே கர்த்தரின் மறு பிரதிநிதியாக இருக்கக்கூடிய போப் தாம் ஒரு தந்தை, எல்லா பிரஜைகளுக்கும் தந்தை என்று பதவி ஏற்பதற்கு முன்பாக பணிவு என்பதற்கு இலக்கணமாக ஒரு சிறைச்சாலை சென்று கடுமையான பாபம் செய்தவர்கள் எவர்களோ அவர்களை வெளியில் கொண்டுவந்து அவர்களுக்கு பாதபூஜை செய்கின்றார்.

இது எதைக் காட்டுகிறது என்றால் ஒருவருக்கொருவர் பாத நமஸ்காரம் செய்வதோ பாதத்தை தொட்டு நமஸ்காரம் செய்வதோ பாதுகை என்று சொல்லக்கூடிய உங்கள் திருவடிகளை (வெளியில் விட்டு வந்துவிடுகிறீர்கள்) அலட்சியப் படுத்தாதபடி சுத்தப்படுத்துவதோ, நமஸ்காரம் செய்வதோ, இந்த பாத சேவையும், பாதுகா சேவையும் முக்கியம். நீ எப்பேர்பட்ட பாபத்தை பண்ணியிருந்தாலும் பரவாயில்லை நீ பாபியல்ல. நீ துஷ்டனோ, பிரஷ்டனோ எந்த தப்பும் பண்ணவில்லை. நீ எந்த வினாடியும் தெய்வமாக, பகவானாக இருக்கிறாய், பரமாக இருக்கிறாய் உமக்கு யாம் நமஸ்காரம் பண்ணுகிறோம் என்கிற மாதிரி பணிந்து பண்ணுகிறார். பணிந்த தன்மையினால் அவர் அந்த

*உயர்ந்த ஸ்தானத்திற்கு போய்விடுகிறார். நாமும் அந்த பணிவை ஜாதி, இனம், மதம், மொழி, நாடு இவைகளை விட்டு பணிவாக ஏற்றுக் கொண்டோமானால் அவசியம் நாம் எங்கு இருக்கிறோமோ அங்கே அந்த பரம்பொருள் நம்மை வைத்துவிடும். போப்பானவர் பாதபூஜை பண்ணி அந்த பதவியை ஏற்றுக்கொள்கிறார். அதனால் நீங்கள் எல்லோருமே பாதங்களை தொட்டு, பாதுகைகளைத் தொட்டு நமஸ்காரம் செய்வதை வைத்துக்கொண்டீர்கள் என்றால் சீக்கிரம் மனமானது மஹத்தாகி அந்த ஜீவன் முக்தியை அடையமுடியும்.*

***அன்பர்:*** *பிரசாதத்திற்கு அந்த நேரத்திற்கு வரவேண்டும் என்று நினைக்கிறோம் சமயத்தில் ஓரிரண்டு முறை காலதாமதம் ஆகிவிடுகிறது? நாங்கள் சிறிய குழந்தைகள் ஓரிரண்டு முறை அவ்வாறு நடக்கிறது.*

***குருதேவர்:*** *அதற்கு யாரும் பொறுப்பல்லை ஐயா. ஒரு சேவையை செய்ய வேண்டும் என்று உறுதி எடுத்து ஏற்றுக் கொள்ளும் போது அது பகவானுடைய காரியம். குருதேவருடைய காரியம் எந்தெந்த காரணத்திற்காக முன்பின் செய்ய வேண்டுமோ அதை பார்த்து செய்வார்கள். சுணங்கி செய்தாற்போல இருப்பது சேவையில் தடங்கள் அல்ல. அந்தந்த காலத்தில் எப்படி பண்ண வேண்டும் என்று நிர்ணயம் அவர்கள்தான் பண்ண வேண்டும். நாம் பண்ண முடியாது. நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இப்படி செய்ய வேண்டும் என்றுதான் முடிவு பண்ணி செய்கிறோம் ஆனால் முடிவு அவனுடைய கைகளில். நீங்கள் ஒரு பொம்மைதானே! உங்களை சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் சரி என்ன பண்ண முடியும். பண்ணுவது முழுக்க அதுதான் பண்ணுகிறது. அப்போது அந்த*

குறிப்பட்ட காலத்தை நிர்ணயம் அதுதான் பண்ணமுடியும். நீங்கள் ஏதாவது காரணம் சொல்லலாம் நடைபெறப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு அதுதான் பொறுப்பு. என்னால் முடியவில்லையே என்ற எண்ணம் வந்தால் உன்னிடம் ஜீவ கர்த்துருத்துவம் இருக்கிறது. ஆகவே அந்த எண்ணம் தேவையில்லை.

***சீடர்:*** ஸ்ரீ பத்ரி வன ஸ்ரீ ஸத்குரு குடிலிலிருந்து காரில் பரமாத்மா இல்லம் வருகிறார். வெறுமனே கை வைக்கிறார். கார் போகிறதாம்.

***சீடர் 1:*** அவருக்கு அக்ரூரர் அப்பா போன்ற நிலை ஸ்வாமி.

***குருதேவர்:*** அது அபூர்வமான நிலை. சாமான்யப்பட்டவர்களுக்கு விளக்க முடியாது. சரீரத்தையே மறந்த நிலை. உட்காருவதுதான் தெரியும் தன்படி ஆட்டோ மேட்டிக்கா கார் போகும். எங்கு போகிறோம், எங்கே திரும்புகிறோம், என்ன செய்ய போகிறோம் ஒன்றும் தெரியாது. அதுவாக இயக்கும், நீ இயங்கவில்லை. உனக்கு சம்பந்தமே இல்லை. நீ எப்போதுமே ஒரு பொம்மையாகத்தான் உட்கார்ந்து இருக்கிறாய். இங்கு இருந்தால் இங்கு வர வேண்டியது, அங்கே இருந்தால் அங்கு வர வேண்டியது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியது. இது எல்லாமே அதனுடைய ஏற்பாடு. உன்னுடைய ஏற்பாடு இல்லவே இல்லை.

***அன்பர்:*** குருதேவருடைய கிருபை.

***குருதேவர்:*** சரீரத்தை மறந்துவிடு, உலகத்தை மறந்துவிடு. ஆனந்தமாக இரு. எல்லாமே செத்துவிட்டது. இருக்கப்பட்டது ஒன்றே ஒன்றுதான் அது நலமாகத்தான் இருக்கும்.

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 27.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா

**குருதேவர்:** ஏதாவது தபால் இருக்கிறதா? படி.

**அன்பர்:** உங்கள் புனித தாமரை திருவடிகளை சரணடைகிறோம் ஸத்குருதேவா. அன்பான குருதேவா! இந்த பறவையைப் பார்க்கும்போது யாம் உடலாலும், மனதாலும் சுதந்திரமாய் இருக்கிறோம் என்ற உணர்வு வருகிறது. அதன் இறக்கைகள் அதற்கு ஸ்திரத் தன்மையைக் கொடுத்து அது தண்ணீரில் விழாமல் பாதுகாக்கிறது.


**குருதேவர்:** என்ன?

**சீடர்:** ஒரு பறவை பாறை மேல் அமர்ந்து இறக்கைகளை விரித்து தண்ணீர் குடிப்பது போல இருக்கிறது இந்த படத்தில். அதனால் கீழே விழாமல் இருக்கிறது.

**குருதேவர்:** சரி. கீழே விழாமல் இருக்கிறது.

**அன்பர்:** அதே போல நாமும் நம் மனதை சமநிலையில் வைத்துக்கொள்வது சாதனை. இது மனதிற்கும் ஒரு பாடமாக இருக்கிறது. நாம் அழுகிறோம், மனம் எந்த காரணமும் இல்லாமல் சலனமடைகிறது, கலங்குகிறது என்ன பண்ண வேண்டும்.

**குருதேவர்:** அலைபாய்கிறது என்பதற்கு காரணம் இல்லை என்கிறாள். ஆனால் கண்டிப்பாக உண்டு. ஆசை



ஏற்படும் போதெல்லாம் அலைபாயும். நாம ரூப சம்பந்தப்பட்ட எந்த வஸ்து வானாலும் சரி. ஜீவ சொரூபமோ, ஜட சொரூபமோ நாம ரூபமாக பார்க்கும் போது சின்ன ஆசை உண்டாகும் உடனே அசைவு உண்டாகும். நாம ரூபமாக பார்க்காமல் பழகிவிட்டோம் என்றால் அந்த ஆசையும் உண்டாகாது, அசைவும் உண்டாகாது. அந்த ஆசையும், அசைவும் உண்டாகாமல் இருந்தால் நாம் சுதந்திரப் பறவைதான். அந்த நிலையைப் பெறுவதற்கு பறவை இரண்டு இறக்கைகளையும் ஊன்றிக்கொண்டு ஜலம் சாப்பிடுகிறது. ஊன்றுவது போன்ற பாவனையில் ஆதரவு. ஆதரவு என்னவென்றால் நம்பிக்கை, வைராக்கியம்.

1. குருமேல் இருக்கும் முழுமையான நம்பிக்கை
2. அவர் கூறும் வாக்கியங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியம்.

இந்த நம்பிக்கையும், வைராக்கியமும் இருந்ததென்றால் இரண்டு சிறகும் பாதுகாப்பாக இருக்கும். நீ எங்கு பறந்தாலும் சுதந்திரமாக இருக்கலாம். எப்போதும் ஆனந்தமாக இருக்கலாம். நம்பிக்கையும், வைராக்கியமும் இல்லையென்றால் இந்த

அலைபாயக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். மனதால் ஆசை, அசைவு உண்டாகும். இப்படியிருந்தால் சஞ்சலம்தான் உண்டாகும். கவனமாக இருக்கத்தான் அந்த படத்தை போட்டிருக்கிறார்கள்.

**அன்பர்:** எங்களுடைய இதயத்தை உள்ள பூர்வமாக உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறோம். கிருபா சமுத்திரமாகிய உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறோம். எங்கள் உள்ளத்தை மனப்பூர்வமாகவும், உள்ளப்பூர்வமாகவும் அந்த கிருபை சமுத்திரத்தையும் உங்களுக்கு சமர்ப்பணம் பண்ணுகிறோம். நீயே யாம், யாமே நீ. உங்கள் குழந்தை. கீதா.

**குருதேவர்:** நிற்கக்கூடிய இடம் இரண்டு பாறையும் தேவை, ஆசையும் ஆகும். மேலும் வரக்கூடியதை சாப்பிடுகிறது. இரண்டுமே சாப்பிடுகிறது.

**சீடர்:** ஒன்றுதான் குருதேவா சாப்பிடுகிறது.

**குருதேவர்:** இரண்டுமே சாப்பிடுகிறது. ஒன்று மனம், இன்னொன்று அறிவு. அப்படித்தான் பார்க்க வேண்டும். மனமும், அறிவும் வெவ்வேறு. அறிவு ஸ்திரப்பட்டால் மனம் நாசமாகும். இவை இரண்டும் இருப்பதனால் போட்டிபோட்டாற் போன்று இருக்கிறது. நீங்கள் பார்ப்பது போன்று ஒரு பறவைதான் இன்னொன்று நிழல் என்பது சரிதான். மனம், அறிவு இரண்டும் ஜலத்தைத்தான் சாப்பிடுகிறது. பாறையின் விளிம்பில் நிற்கிறது. எப்போதும் கால் வழுக்கலாம். இங்கு நிற்பதும் சரியில்லை, அங்கு நிற்பதும் சரியில்லை. இரு தோணியில் கால் வைத்தால் எப்படி கடப்பது? கடக்க முடியாது. என்றைக்கு இருந்தாலும் ஆபத்துதான். அது போல ஆசையும், தேவையும் இரண்டு பாறைகள்.

*வாழ்க்கை அப்படித்தான் நடக்கிறது. வாழ்க்கையை அப்படி நடக்காமல் ஆசையையும், தேவையையும் குறைத்துக்கொண்டு போதும் என்ற நிறைவு ஏற்பட்டுவிட்டால் ஒரு பறவை ஆகும். ஒரு பறவை நல்லதாக போய்விடும். நாசம் ஆகும். மனம் நாசமாகும், அறிவு ஸ்திரமாகும். இவை இரண்டும் இரண்டு பாறைகள், இவை இரண்டும் இரண்டு பறவைகள். உங்களுக்கு தெரியவில்லையா? நிழல் என்று சொல்கிறீர்கள் அது எப்படி பொருந்தும்? கண்டிப்பாக பொருந்தாது. உங்களுக்கு ஒரு பறவைதான் தெரிகிறதா?*

***சீடர்:*** *ஆமாம்.*

**குருதேவர்:** *ஸேடோ (நிழல்) எப்படி வரும். இரண்டு பறவைகள்தான் போட்டிருக்கிறான். ஒரு பறவை என்கிறீர்களே எப்படி?*

***சீடர்1:*** *அது நீர் பரப்பு. நிற்கிற தண்ணீர்.*

**குருதேவர்:** *இப்படி பார்க்க வேண்டுமா? இவன் இப்படி பார்த்தான். மாற்றிப் பாருங்கள் பார்ப்போம். மாற்றிப் பார்ப்பதுதான் சாதனை. இப்படி பார்த்தீர்கள் என்றால் நீங்கள் சொல்வது கரெக்ட். இப்படி பாருங்கள், கவனித்து பார். உங்கள் பார்வை சரியில்லையா? இவன் பார்வை சரியில்லையா?*

***சீடர்:*** *எங்கள் பார்வைதான் குருதேவா சரியில்லை.*

**குருதேவர்:** *மனம், அறிவு இருப்பதனால் கண்டிப்பாக இரண்டுதான் இருக்கிறது. நீங்கள் மனதை காலி பண்ணிவிட்டீர்கள் என்றால் ஒரு பறவைதான். பறவை இறக்கையை விரித்துக்கொண்டு இருப்பதனால் பலம் கிடைக்கிறது. பேலன்ஸ் கிடைக்கிறது அதனால் தண்ணீருக்குள் விழாமல் ஜாக்கிரதையாக தண்ணீர்*

*சாப்பிட்டுவிட்டு போய்விடும். சுதந்திரப் பறவை அது வாஸ்தவம்தான். மனம் நாசம் பண்ண வேண்டுமே! அந்த மனம் நாசத்திற்குத்தான் இவன் இரண்டு பறவைகளை சுட்டிக்காட்டினான். உங்கள் பார்வை சரி அதை தப்பு என்று சொல்லவில்லை.*

***சீடர்1:*** *உங்கள் நிலை வேறு. எங்கள் நிலை வேறு ஸ்வாமிஜீ.*

***குருதேவர்:*** *மாற்றிப் பார்க்க கூறு. நீங்கள் இரண்டாக இருக்கிறீர்கள். ஒன்றாக வேண்டும். இரண்டைத்தான் மாற்ற முடியவில்லையே என்ன செய்வது? இரண்டை ஒன்றாக்க வேண்டும் அவ்வளவுதான்.*

***சீடர் 1:*** *ஆக்கிவிடுங்கள் என்று கூறுகிறார்கள்.*

***குருதேவர்:*** *கண்டிப்பாக ஆக்கமுடியும். உங்கள் நம்பிக்கைத்தான் காரணம். வேறு கவர் இருக்கிறதா?*

***அன்பர்:*** *கலைவாணி என்ற அம்மா சாதனைப் பற்றி கேள்வி கேட்க வேண்டும் என்கிறார். தற்போது வேலையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்கள்.*

***குருதேவர்:*** *என்ன வேலையோ?*

***அன்பர்:*** *வீட்டுமனை வாங்கல், விற்றல் அதன் பின் பேஷன் ஷோ.*

***குருதேவர்:*** *மொத்தமாக வாங்கி சில்லரையில் விற்கிறாளா?*

***அன்பர்:*** *ஆமாம். ஒன்பது வருடங்களுக்கு முன்னர் குருதேவரைப் பார்த்தோம்.*

***குருதேவர்:*** *எங்கே?*

***அன்பர்:*** *2006 இல் திரு அண்ணாமலையில் தரிசித்தோம். குருதேவரை திரு அண்ணாமலையில் பார்த்த பின் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. பின் ஒரு வருடம் கழிந்து தற்காலிக கணவருடன் இருந்து*

பிரிந்துவிட்டோம். எட்டு ஆண்டுகளுக்குப் பின் தற்போது மீண்டும் இணைந்து இருக்கிறோம். மாண்ட்ரியாவில் இல்லை. இங்கிருந்து தள்ளி இருக்கிறோம். செய்துவந்த தொழிலையும் மூன்று மாதங்களுக்கு முன் விட்டுவிட்டோம்.

**குருதேவர்:** இப்போது மீண்டும் சேர்ந்த பின் தொழிலை விட்டுவிட்டாளா? எட்டு வருடங்கள் தொழில் பார்த்துக்கொண்டு இருந்தாளா?

***சீடர்:*** தற்போது மூன்று வருடங்களாக எல்லாம் போதும் என்று தொழிலை விட்டுவிட்டார். ஒரு நாளில் எத்தனை மணி நேரம் ஆன்மீகத்திற்கு செலவழிக்க முடியும்? நாள் முழுக்க எப்படி ஆன்மீகத்திலேயே இருக்க வேண்டும்? சாதனையிலேயே இருக்க வேண்டும் அதற்கு என்ன பண்ண வேண்டும்? 24 மணி நேரத்தில் அதிக நேரம் சாதனைக்கே செலவிட வேண்டும்.

**குருதேவர்:** கணவனோடு சேர்ந்ததோ, பிரிந்ததோ அது விதி. குற்றம் சொல்லக்கூடாது. கொஞ்ச காலம் விலகி இருக்க வேண்டிய சூழ்நிலை பின் சேர்ந்தாகி விட்டார்கள்; பரவாயில்லை. விலகிபின் தூலம் போஷிக்க தொழில் பார்த்தாள். அது அவளுக்கு எட்டு வருடங்கள் உறுதுணையாக இருந்தது. கணவனுடன் சேர்ந்த பின் இந்த சரீரத்தை காக்க வேண்டியது அவன் பொறுப்பாகி விடுகிறது. அதனால் நாம் தொழில் பார்க்க வேண்டியது இல்லை. தொழிலை விட்டாகி விட்டது. நிரந்தரமாக விட்டுவிட வேண்டும். பணத்தின் மேல் ஆசை ஏற்பட்டு ஏதாவது செய்ய வேண்டும். பணத்தின் மேல் ஆசை ஏற்பட்டு தேவையைப் பெருக்கினால் அவஸ்தைதான்.

பதியே தெய்வம் என்று பதி தர்மத்தை கடைப்பிடித்தால் பக்திக்கு வந்து ஞானத்திற்கு வர

முடியும். பதிதான் குரு அவன்தான் தெய்வம் என்று முழுமையாக நம்பிக்கை இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் திரும்ப பிரவிருத்திக்கு மனம் வராது. பிரவிருத்திக்கு வந்ததென்றால் அதிமாக ஆசை இருக்கிறது என்று அர்த்தம். பிரவிருத்தி இல்லாமல் இருந்தால் ஆசை இல்லை. அப்படி இருந்து கொண்டு பதிக்கு சேவை பண்ண வேண்டும். இயல்பாக என்ன நடக்க வேண்டுமோ அது பார்த்துக்கொள்ளும். அது வேண்டும் இது வேண்டும் என்று தேவைகளை விருத்தி பண்ணாமல் இருந்தால் போதும். ஆசையும், தேவையும் இருந்ததென்றால் சாதனை பண்ணவே முடியாது. தேவையைத்தான் குறைக்க வேண்டும், ஆசையை குறைக்க முடியாது. தேவை குறைந்ததென்றால் ஆசை கண்டிப்பாக குறையும். ஆசை குறைந்ததென்றால் அவஸ்தைகள் குறையும். மனோ பாரம், தூல உபாதைகள் கண்டிப்பாக குறையும். எளிமையை கடைப்பிடித்தால் தேவைகள் கண்டிப்பாக குறையும். ஆடம்பரத்தை நம்பி போனால் தேவைகள் கூடும். ஆடம்பரம் கூடாது. எளிமை கண்டிப்பாக வேண்டும். இவ்வாறு வாழ்க்கையை குறைத்துக் கொண்டால் போதும் அதுதான் சாதனை. சொன்னது புரிகின்றதா?

***அன்பர்:*** புரிகிறது.

***குருதேவர்:*** தேவைகளைக் குறைத்துக்கொள். சாப்பிடுவதிலோ, உடுத்துவதிலோ, இருக்க, படுக்கும் இடத்திலோ இருப்பது போதும் என்று நிறைவோடு ஏற்றுக்கொள். சிரமங்கள் கண்டிப்பாக குறையும். இதைவிட அதிகமாக வேண்டும் என்று ஆசைப்பட்டால் அவஸ்தைதான். அந்த ஆசைதான் கண்டிப்பாக கூடாது. தேவைகளை குறைக்கும் போது ஆசைகள் கண்டிப்பாக

குறையத்தான் செய்யும். அங்கு நிம்மதி ஏற்படும், திருப்தி ஏற்படும், ஸாந்தி ஏற்படும். சாதனை முற்றுப்பெறும்.

ஜீவ வேஷம் போட்டு வந்திருக்கிறோம். ஆணாகவோ, பெண்ணாகவோ வேஷம் போட்டுக்கொள்கிறோம். போட்ட வேஷத்திற்கு என்னென்ன வேண்டுமோ அதை பகவான் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். உணவு, உடை, இருப்பிடம் இவைகள் எல்லாம் இயல்பாகவே நமக்கு கிடைக்குமே தவிர நாம் முயற்சி பண்ணத் தேவையில்லை. அப்படி இயல்பாய் கிடைக்கப்பெற்றதை போதும் ஸ்வாமி இனிமேல் வேண்டாம். வேண்டுமென்றால் நீ வேண்டும், உன் கிருபை வேண்டும் என்று முழுமையாக உள்ளம் உருகி வேண்டினால் கண்டிப்பாக இறை சாநித்தியத்தையோ, குரு சாநித்தியத்தையோ பெற முடியும். தேவைகள் குறைந்து விடும். பிறகு எப்போதும் ஆசைகள் வராது ஆனந்தமாக இருக்கலாம்.

நம்பிக்கைதான் மூலதனம். நம்பிக்கை என்பது குருமேல் வைக்கப்பட்ட நம்பிக்கை. கண்டிப்பாக கடைத்தேற்றப்பட்டு விடுவோம், கிட்டும் என்ற இரு நிலைகளில் நம்பிக்கை வேண்டும். கடைத் தேற்றப்பட்டு விட்டோம். அவர் என்ன சொல்கிறாரோ அதை கடைப்பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியம் வேண்டும். எல்லா வாக்கியத்தையும் கடைப்பிடிக்க முடியாது. அவர் பத்து கூறினால் அவற்றில் ஒன்றை கடைப்பிடித்தால் போதும் அந்த பத்தும் அனுபவமாகும். அவர்மீது முழுமையான நம்பிக்கை, அவர் கூறும் வாக்கியத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்ற வைராக்கியம் இதுதான் சாதனை வேறொன்றும் இல்லவே இல்லை.

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 27.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா

*அன்பின் குடிலில் விறகு எரிப்பதென்றால் மண்ணெண்ணெய், காகிதங்களைப் பயன்படுத்துவர் நீண்ட நேரம் ஆகும். ஆனால் இங்கே உடனே விறகு கட்டை எரிகிறது என்று சசிஜீக்கு ஒரே ஆச்சரியம்.*

**குருதேவர்:** *அதற்கு இங்கே பத்ரி வன ஸத்குரு குடிலில் இருக்கும் அன்பர்களின் உள்ளங்கள் தூய்மையானது ஆகவே எளிதாக எரிகிறது. நீங்கள் இங்குள்ளதையும், அன்பின் குடிலையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தீர்கள் அது அமைதியாகிவிட்டது.*

**ஜனகா:** *மேப்பல் மரம் கட்டைகள் நன்றாக எரியும். பத்ரி வன ஸத்குரு குடிலில் ஆண்கள்தான் எப்போதும் விறகு எரியவிடுவார்கள். இன்று கார்க்கி அம்மா எரிய வைத்தார்.குருதேவர் மூன்று உதாரணங்கள் கூறியிருக்கிறார் கற்பூரம், கரித்துண்டு, ஈர மரக்கட்டை (வாழைமட்டை). சிறிய மரக்குச்சிகள் கீழே வைத்து எரிய வைப்பதற்கும் அதன் மேல் மேப்பல் மரக்கட்டைகளை வைப்பதனால் நின்று எரிகிறது.*

**குருதேவர்:** *வைக்கோல் ஆரம்பத்தில் எரிய வைக்க பயன்படுத்துவது போல் இங்கே சிறிய விறகு குச்சிகளைப் பயன்படுத்துகின்றனர். தற்போது சைலன்டாக எரிகிறது.*

**சீடர்:** பச்சை கற்பூரம் உணவில் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் இந்த கற்பூரம் வெளிப் பயன்பாட்டிற்கு மட்டும்தான், உட்கொள்வதற்கு அல்ல. ஆரத்தி முதலியன செய்வதற்கு மட்டும்தான் பயன்படும்.

**ஜனகா:** திருஅண்ணாமலையில் மலையின் மேல் தீபம் ஏற்றும் போது அனைத்து வீடுகளிலும் கற்பூரம் பயன்படுத்துகின்றனர்.

**சீடர்:** இதுவரை இப்படி நெருப்பு நடந்ததில்லையாம்.

**குருதேவர்:** அன்பின் குடிலை ஒப்பிட்டீர்கள் பின் சும்மா இருக்குமா அது. (அதுபோல இதுவும் ஆகிறது).

**சீடர் 1:** கார்க்கி அம்மாவிற்கு ஆக்ஸிடென்ட் ஆனபோது கால் முட்டி பிரச்சனை ஏற்பட்டு காலில் போல்டு வைத்துள்ளார்கள். நீங்கள் வருவதற்கு முன்னாடி நாள் மிகவும் சிம்பளாக பகவான் கருணையில் முடித்துவிட்டீர்கள் என்று சொல்கிறார்கள்.

**குருதேவர்:** அவன் பார்த்துக்கொள்ளுவான். ஆயின்மென்ட் ஏதாவது டாக்டர் கொடுத்தாரா?

**கார்க்கி மா::** கமால் எண்ணெய் தடவி விடுகிறார்.

**ஜனகா:** எந்த பிரச்சனை வந்தாலும் ஆபத்பாண்டவர் அவர்தான் (கமால்). மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் மற்றும் எல்லாவற்றிற்கும் அவர்தான் உதவுகிறார்.

**குருதேவர்:** தூல வைத்தியம்.

**சீடர் 1:** ஜட கட படாதிகள் எல்லாமே.

**கார்க்கி மா:** நாங்கள் கொடுத்து வைத்தவர்கள். அவர் இந்தியாவிற்கு வந்துவிட்டால் என்னாவது?

**குருதேவர்:** *ஒரு அரசன் பழத்தை அரியும்போது கையில் வெட்டுபட்டு போய்விட்டது என்று சங்கடப்படுகிறான். அவன் மந்திரியை வரவழைத்து இதுபற்றி கேட்டான். மந்திரி ஒரு பக்தன். அவன் எல்லாமே நன்மைக்கு அரசே என்று கூறினான். விரல் வெட்டுபட்ட வேதனை. விரல் தனியாக போய்விட்டது நாம் அரசனாக இருந்தும் கை ஊனமாகி போச்சே என்று எப்படி எப்படியோ கற்பனை செய்கிறான். நாம் என்ன தப்பு பண்ணோம், என்ன பாபத்தை பண்ணோம் என்கிற மாதிரி ஏகப்பட்ட கற்பனைகள் பண்ணி பண்ணி மனம் புண்படுகிறான். மந்திரியை ஜெயிலில் போடுமாறு கூறிவிட்டு போய்விடுகிறான். இவனை பலியிட காட்டில் இவனை பிடித்துக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். இவன் கை ஊனமுற்றிருப்பதைப் பார்த்து ஊனமானவனை பலியிடக்கூடாது என்று விட்டுவிடுகிறார்கள்.*

*இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் விரல் வெட்டுப்பட்டத்திற்கு எவ்வளவு சங்கடப்பட்டோம். தற்போது நான்கைந்து ஆண்டுகள் போனபறகு விரல் போனதால் தலை தப்பித்தது. இல்லையென்றால் காலிபண்ணியிருப்பார்கள் என்று நினைத்தான். காட்டிலிருந்து நாடு திரும்பியதும் நேரே மந்திரியைப் பார்க்கச் சென்றான். என் விரல் வெட்டுபட்ட போது நன்மையே என்று கூறினாய் இன்று அந்த ஊனத்தால் காட்டுவாசிகள் எம்மை பலியிடாமல் விட்டுவிட்டனர் இல்லையென்றால் என் கதி என்ன ஆகியிருக்கும்? எல்லாம் நன்மைக்கே என்று நீ கூறுவது எதனால் என்றார். உம்மைப்பற்றி தெரியாமல் ஜெயிலில் போட்டுவிட்டேன் என்றார்.*

*அதற்கு மந்திரி நீங்கள் ஜெயிலில் போட்டதும் நன்மைக்கே இல்லையென்றால் நான் உங்களோடு காட்டிற்கு வந்திருப்பேன் உங்களை விட்டுவிட்டு என்னை பலியிட்டு இருப்பார்கள் அதனால் என்னை ஜெயிலில் அடைத்ததும் நன்மைக்கே என்றார்.*

*முன்பு ஒரு சிறிய துன்பத்தைக் கொடுத்து அந்த துன்பத்திலிருந்து பெரிய துன்பத்திலிருந்து காக்கிறான். தாங்க முடியாத துன்பத்தை, ஒரு இழப்பை காக்கிறான் பகவான். அப்போது நன்மைக்கு என்று எடுத்துக் கொண்டால் சிறியதோடு போய்விடும். நீயே பெரிதுபடுத்திப் பார்க்கும் போதுதான் கஷ்டப்படுகிறாய். பெரிதுபடுத்தாதபடி எல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக்கொண்டால் வரக்கூடியதும் நன்மையாகத்தான் முடியும். இதுமாத்திரமல்ல வரக்கூடியது கூட நன்மையாக முடியும். எனக்கு வந்துவிட்டது நான் சங்கடப் படுகிறேன் என்ற எதிர்பார்ப்பு இருந்ததென்றால் அது சிரமம்தான். அதுதான் கூடாது. எல்லாம் நன்மைக்கே! அந்த ஒரு வார்த்தைதான் பொருந்தும்.*

*உடலை பாதிக்கக்கூடிய எந்த நிகழ்ச்சியானாலும் சரி, உடலின் அவயமே இழந்தாலும் சரி எல்லாம் நன்மைக்கே! எல்லாம் நன்மைக்கே! எல்லாம் நன்மைக்கே! எல்லாம் நன்மையே என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால் தன்படியே மாறிப்போகும். பகவான் மாயாவால் அத்தனையும் மாற்றி அமைத்துவிடுவான். நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளாமல் எனக்கு வந்துவிட்டதே, நான் சங்கடப்படுகின்றேனே என்று நினைக்கும் போது மன வேதனைதான். பொறுத்துக்கொண்டு தீமையில்லை நன்மையே என்று எடுத்துக்கொண்டால் தன்படி*

மாறிவிடும். பின் திரும்ப வரவே வராது. துன்பத்தையும் இன்பமாக மாற்றிப் பார்க்கும்போது மாயா தன்படியே மாற்றிவிடும். எண்ணம் எப்படி இருக்கிறதோ அப்படி தன்படி மாற்றிவிடும். மாற்றித்தான் ஆகவேண்டும். அப்படி மாற்றினால்தான் பகவான் ஸத்தியம்.

மாயாவினுடைய இயக்கம்தான் உலகம்.

*நாராயணா!*





*ஸத்தியம் பேசு.*
*(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.*
*நாவை அடக்கு.*
*கருணையோடு இரு.*

## *28.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா*

**குருதேவர்:** ஏதாவது கேள்விகள் இருந்தால் கேட்கலாம்.

***அன்பர்:*** *குருதேவருடைய அறிவுரை என்ன என்றால் கூடுமான வரைக்கும் மௌனத்தைக் கடைப்பிடி. அப்படின்னு சொல்றீங்க. நாங்க அதுக்கு முயற்சி பண்றோம். மௌனமாக இருக்கிறோம். சமயத்துல மௌனமாக இருக்கும் போதே சில பேர் வந்து தொந்தரவு பண்றாங்க. அதனால பேச வேண்டியிருக்கு. அதுக்கு என்ன பண்ணலாம்?*

**குருதேவர்:** *மௌனம் என்பது பேசாமல் இருப்பது அல்ல அதை முதல்ல தெரிந்துகொள்ளுங்கள். வாயால பேசாமல் இருப்பது மட்டும் மௌனம் ஆகாது. ஒருத்தருக்கு வாயை கட்டுப்படுத்த முடியாதபடி சொந்த, பந்தம், பாசம், தொழில், குடும்பம் இப்படி பேசிப் பேசியே நாவை அடக்க முடியாது. அவர்களுக்கு நாவடக்கம் கண்டிப்பாக தேவை. இவர்களை மாதிரி சாதனையில் முதிர்ச்சியாகி ஓரளவுக்கு மேல வந்ததுக்கு அப்புறம் யார் மேலயும் குற்றம் குறை பார்க்காமல் இருப்பது மௌனம். ஆண்கள் கிட்டயோ பெண்கள் கிட்டயோ, பார்வையிலோ செயல்களிலோ, அவர்கள் வார்த்தைகளிலோ தப்பு, தவறு, குற்றம், குறை, பழி,*

*பாவம் காணாதபடி எல்லாவற்றிலும் குருதேவர் நிறைந்திருக்கிறார். அவருக்கு அன்னியமாக எந்த ஜீவராசியும் கிடையாது. அப்ப அவர் முன்னாடி நாம் அடங்கித் தான் இருக்கணும். நாம் பேசக்கூடாது. பேசக்கூடாதுதுன்னா, எண்ணக்கூடாது. தீய எண்ணங்களை எண்ணக்கூடாது. மனம் சங்கடப் படக்கூடிய விவகாரம் அடையக்கூடிய, புண்படக்கூடிய எண்ணங்கள் எண்ணவும் கூடாது. பேசவும்கூடாது. இவர்களுக்கு இது, அவர்களுக்கு அது. இரண்டு நிலை உண்டு.*

*ஆண்கள் மேலேயோ பெண்கள் மேலேயோ, குற்றம் குறை பார்க்காத படி இயல்பாக அவர்கள் நடக்கிறார்கள். அவர்கள் வினை விதி அப்படி இருக்கிறது. நாம் அடங்கி இருப்போம் என்ற உணர்வோடு இருப்பது தான் சாதனை.*

**அன்பர்:** *கூடுமான வரை மௌனத்தைக் கடைப்பிடிக்கிறோம். சில பேர் வேண்டுமென்றே காரியம் பண்றாங்க. அதுக்காக பாதுகாப்பாக ஏதாவது செய்ய வேண்டியிருக்கு அல்லது பாதுகாப்பாக பேச வேண்டியிருக்கு. ஒரு எல்லைக்கு மீறி போகும் போது பேசாமல் இருக்க முடியலை. சமயத்தில அந்த மாதிரி சூழ்நிலை வந்துடுது.*

**குருதேவர்:** *அப்படி அதிகப்படியான காரியம் பண்ணி விட்டாலும் பரவாயில்லை. செய்த காரியத்திற்கோ, எண்ணிய எண்ணத்திற்கோ பேசினதற்கோ தனிமையில இருந்து வருந்தணும். உள்ளம் உருகி, குருதேவா இப்படி பேசக்கூடாதே. இப்படி பேச வச்சுட்டீயே? சூழ்நிலை இப்படி ஆகிப் போச்சே? அவர்கள் இப்படி பேசினால்தானே பேச வேண்டியிருக்கு. இதை உன்னால கட்டுப்பாடு பண்ண முடியுமே? நீ*

கட்டுப்பாடு பண்ண வில்லை யென்றால் வேறு யார் பண்ண முடியும். உன்னால் எல்லாம் முடியுமே. உலகம் முழுவதும் உன்னுடைய மாயாவின் கைக்குள் தானே. காப்பாற்று என்று உருகி கண்ணீர் மல்கி, கண்ணீர் கசிந்தால் போதும். பேசினது நீ பேசலை. செயல் செய்ததும் நீ இல்லை. இது உண்மையான மௌனம்.

உங்களுடைய உருகிய உள்ளமும் கண்ணீர் பெருக்கமும், ஏக்கமும், கூடிய அந்த இறைகுரு உணர்வோடு பிரார்த்தனை பண்ணக்கூடியது. மௌனத்தையும் சாதனையில் முன்னேற்றத்தையும் கொடுக்கும். விவரம் தெரியாதவர்கள் சில பேர் வாக்கை அடக்கணும் என்பதற்காக தீவிரமாக பேசாமல் இருப்பார்கள். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் வரைக்கும் கூட யார் கிட்டேயும் பேசமாட்டார்கள். அப்படி பேசாமல் இருக்கப்பட்டவர்கள் எழுதிக் காட்டுவார்கள். இல்லை செய்கை காட்டுவார்கள். அதுக்கு வாயில பேசிக்கிட்டே போயிடலாம். பேசவில்லை என்று மௌனம் இருந்து கொண்டு இப்படி செய்வதற்கு பேசிக்கலாம்.

இப்படி பண்ணுவது திருட்டுத்தனம். கள்ளத்தனம் பண்றீங்க நீங்க. சைகை காட்டுவதோ எழுதிக் காட்டுவதோ, கண்டிப்பாக கூடாது. இரண்டாவது என்னன்னா, நீ பேசாமல் இருக்கும் போது ஒரு மஹாத்மாவை பார்க்க வேண்டி வருது, அவருடைய தரிசனம் கிடைக்கக் கூடிய பாக்கியம் வருது. நீ போற இடத்தில் அவர் பார்க்கிறார். சில அறிவுரைகள் கூறுவதற்காக உன்னை கூப்பிட்டு சில விஷயம் சொல்லணும்னு நினைக்கிறார். நீ மௌனமாக இருக்கிறாய் என தெரிந்த உடனே உன்கிட்ட பேச

முடியாது. அவருடைய அமுத மொழிகளை கேட்க முடியல. நாமே வாக்கை கட்டுப்பாடு பண்ணி பேச்சை நிப்பாட்டி விட்டோம். அப்ப பெரிய வாய்ப்பை இழந்து விடுகிறோம். அப்ப அந்த இடங்களில் கண்டிப்பாக பேசித்தான் ஆகணும். மஹாத்மாக்கள் கிட்டயோ, ஸத் விஷயத்தையோ, பேசித் தான் ஆகணும். உலக விஷயத்தைத்தான் பேசக் கூடாது. இப்படி சாதனை பண்ணினால் பரவாயில்லை.

**அன்பர்:** ஸ்ரீ ஸத்குரு குடிலிலும் சரி, பத்ரி வன ஸத்குரு குடிலிலும் சரி, ஆரம்பக் காலத்தில் இருந்தே யாரும் அதிகமாக பேச மாட்டார்கள். அவங்க வேணுங்கற செய்திகளை பேப்பரில் எழுதி காட்டிக் கொடுப்பார்கள். அப்படி இருந்தால் தான் அமைதியா இருக்க முடியுது. ஸ்ரீ பரமாத்மா இல்லத்துல நிறைய பேர் இருக்கிறார்கள். சமையலுக்கு நிறைய அன்பர்கள் இருக்கிறார்கள். அப்ப எழுதி கொடுத்துட்டோம்னா யாரும் பேச மாட்டார்கள்.

பேசலாம். எழுதி கொடுக்க வேண்டாம். கை காட்டி signal கொடுக்க வேண்டாம் என்று சொல்லியாச்சுன்னா, எல்லாரும் பேச ஆரம்பிப்பார்கள். பேச பேச பேச விருத்தி ஆகிக்கொண்டே போகும். அந்த இடமே அமைதியில்லாமல் போயிடும்.

**குருதேவர்:** அது குடும்பத்துல இருக்கிறவங்களுக்குத் தான் அந்த வார்த்தை. குடும்பத்துல இருந்து கொண்டே எழுதிக்காட்டவும் செய்கைக் காட்டவும் செய்வார்கள். இவர்கள் சாதகர்கள். சாதனை பண்ணி அதை அடைய வேண்டும் என்று ஏக்கத்துல இருக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட நிலைக்கு கை காட்டுறது தான் சிறந்தது. எழுதிக் காட்டறது தான் நல்லது. பேச்சை விட சிறந்தது. இப்படி வாக்கை அடக்கறது ரொம்ப சிரேஷ்டம். அது தான் நல்லது. தேவையானதை

மட்டும் எழுதிக் காட்ட வேண்டியது. குற்றம் குறை பார்க்கக்கூடாது. அந்த ஒன்றை மட்டும் கவனித்து கொள்ளணும். அது ரொம்ப முக்கியமானது.

**அன்பர்:** சமயத்தில் எழுதி காட்டுறது கூட புரியாது. அதனால் பக்கத்தில் உள்ள room உள்ளே போய் மெல்ல, மிருதுவான குரலில் பேசிக்கலாமா?

**குருதேவர்:** உரத்த குரல் கூடாது. மெல்லிய குரல் கண்டிப்பாக தேவை. கனடாவில் இருக்கப்பட்ட அன்பர்கள் யாவரும் பேப்பர்ல எழுதி காட்டவோ, சின்ன சின்ன செய்கை காட்டவோ, மெல்லிய குரலில் பேசி செய்யவோ செய்தார்கள் என்றால் சாதனைக்குரியதைத் தான் பண்ணுகிறார்களே தவிர சாதனைக்கல்லாததை பண்ணவே இல்லை. தன் பாதையில தவறவே இல்லை. அவர்களை குருதேவர் வழி நடத்திச் செல்கிறார். அவருடைய கட்டளையே தவிர இவர்களுடைய எண்ணம் இல்லை. உள்ளே இருந்து கொண்டே இப்படி நட என்று ஆணை இடுகிறார். சூட்சுமமாக இவர்கள் காரியம் பண்றாங்க. நீங்க செய்யக்கூடியது தவறு இல்லவே இல்லை. குடும்பத்துல தான் அந்த மாதிரி உள்ளது. குடும்பம், தொழில் பந்த பாச பிணைப்போடு இருக்கப்பட்ட அன்பர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது பொருந்தாது.

ஒன்றில் மட்டும் மிகுந்த கவனம் தேவை. பேசும் போதும், விளக்கம் கொடுக்கும் போதும், மிருதுவாக, அவருக்கு மட்டும் கேட்கும்படி பேசணும். சத்தம் போட்டு பேசக்கூடாது. குருதேவரே உங்களை வழி நடத்திச் செல்லுவதனால், கவனமா கொண்டு போகிறார். அதனால பயம் வேண்டாம்.





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *28.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா*

***அன்பர்:*** அங்கே இருந்து இங்கு கூட்டிக்கொண்டு வந்ததுக்கு நன்றி சொல்கிறார்கள். ரொம்ப தூரத்துல இருக்கிறார்கள். ஹவாய் தீவு என்னும் ஒரு இடத்தில் இருக்கிறார்கள்.

***குருதேவர்:*** அங்கே இருந்து இங்கு வந்தாயே அதுக்கு நன்றி சொல்லணும். இவன் கிருபை கூர்ந்து அங்கே இருந்து தரிசனம் கொடுக்க வந்திருக்கிறாயே. அது பெரிய பாக்கியம். உங்களை மாதிரி சுத்தமான உள்ளம் தான் முக்கியம். இந்த உடம்பு முக்கியமல்ல. ஹவாய் என்பது ஒரு தீவுதானே?

***குருதேவர்:*** What is your name?

***அன்பர்:*** Fara.

***குருதேவர்:*** ஜெயா என்று வைத்துக்கொள். ஜெயம் வெற்றி.

What is this? இது பழமா? காயா?

***அன்பர்:*** பழம்தான். வெளியில் உள்ள தோல் பச்சையாக இருக்கிறது. உள்ளே வந்து மிருதுவா இருக்கும்.

***அன்பர்:*** நேற்று மதிய உணவுக்கு இதை வைத்துத்தான் உணவு தயார் பண்ணினார்கள், இதுல மேல் தோல் கருப்பா

இருக்கும்; உள்ளே மிருதுவா இருக்கும் இதை வைத்து உணவு தயார் பண்ணுகிறார்கள்.

**குருதேவர்:** என்ன ஆகாரம் இது மாவா? அரிசியா?

**அன்பர்:** முந்தின நாள் காலையிலே கொடுத்த உச்சிஷ்ட பிரசாதம் இது தான் சுவாமி.

**குருதேவர்:** களிதான் கொடுத்திருந்தாங்க.

**அன்பர்:** களி இல்லை சுவாமி.

**குருதேவர்:** எல்லாமே ஒன்ணாதான் இருக்குது. பல பெயர்கள் வைக்கிறீர்கள். எல்லாமே ஒண்ணாதான் இருக்குது. நாம ரூபத்தை காட்டி காட்டி மயக்க பார்க்கிறீர்கள். நீங்கள்தான் மயங்கி இருக்கிறீர்கள். எங்களை மயக்க பார்க்கிறீர்கள். அது எப்படி முடியும்.

வேற ஏதாவது தபால் இருக்கா?

**அன்பர்:** எந்த கேள்வியும் இல்லை. எந்த சந்தேகமும் இல்லை. எம்முடைய எளிமையான சான்றிதழ் மாதிரி, எம்முடைய வாக்கு. ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே வந்து 16 மாதங்கள் கழிந்தன. நெஞ்சு வலி ஏற்பட்டது அதனால உடனே ஆஸ்பத்திரியில சேர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தது. இதயத்துக்கு செல்லக்கூடிய இரத்தக் குழாய் ஒன்று உடைந்து விட்டது. அது பழுதடைந்து விட்டது. இதயத்தில் ஒரு சிறு பகுதி செயல் இழந்து விட்டது. ஆகையால் உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தது. டாக்டர்கள் இந்த நிலையை எமக்கு விளக்கிக் கூறினார்கள். அவர்கள் பிற்காலத்து வாழ்க்கை பற்றியும், உயிரோடு இருப்பது பற்றியும் கவலைப் பட்டார்கள். யாம் ஏற்கனவே சரணடைந்து விட்டோம். குருதேவரின் திருவடியை பற்றிக் கொண்டு விட்டோம். என்னுடைய இதயத்தில்

பல பல வருடங்களுக்கு முன்னதாகவே குருதேவரிடத்தில் சரணடைந்துவிட்டோம். அவர் அரவணைப்பையும் ஏற்றுக் கொண்டு விட்டோம். இந்த அறுவைச் சிகிச்சைக்கு பிறகு வரக்கூடியதையும் ஏற்றுக்கொண்டு சரணடைந்து விட்டோம்.

எனது குடும்பத்தினரிடம். இது பற்றி விளக்கம் கொடுத்தோம். எவ்வளவு ஆனந்தமா நாம் இருக்கிறோம்? இந்த நிலையிலும்? எம்முடைய வாழ்க்கையில் எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறோம். இதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று குடும்பத்தாருக்கு விளக்கம் கொடுத்தோம். ஏனென்றால் நாம் அந்த திருப்தியையும், ஆனந்தத்தையும் அடைந்து விட்டோம். அந்த அறுவை சிகிச்சைக்கு செல்வதற்கு முன்னால் ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். அதில் எம்முடைய கையெழுத்தைக் கேட்டார்கள். ஏனென்றால் இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு தூலம் இறந்து விட்டால் நாங்கள் (டாக்டர்கள்) பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டோம் என்பதற்காக கொடுக்கக்கூடிய ஒரு கடிதம்.

மறுபடியும் உங்களிடம் நாம் சரணடைந்தோம். இதற்கு முன்னால் இதே மாதிரி சரணாகதி பண்ணியதே இல்லை. ஆகையால் மறுபடியும் சரணடைந்தோம். அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டோம். அதற்குப் பிறகு இந்த உடல் உணர்ச்சிகள் மறப்பதற்கு மருந்து கொடுத்தார்கள். மயக்க மருந்து கொடுத்தால் கூட நமக்கு அந்த உள்ளுணர்வு மறைய வில்லை. ஒரு வினாடி கூட அந்த உணர்வு மறைய வில்லை. அந்த சிகிச்சை நடக்கும் போதெல்லாம் ரிபுகீதையின் பாடல்களின் மெட்டுகளை பாடிக்கொண்டே

இருந்தோம். ஜெய ஸத்குரு திருவடித் தூளி ஸத்குரு தேவா என்று பாடிக்கொண்டே இருந்தோம். பழையபடி எமக்கு எல்லாம் கிடைத்து விட்டது. முன்னால் விட யாம் இப்போது நன்றாகவே இருக்கிறோம். மிக மிக மிக நன்றி. சால்.

**குருதேவர்:** எந்த அளவுக்கு ஒரு பக்குவ ஆன்மா பகவானையோ, குருவையோ நீயே கதி, உன்னையல்லால் வேறு ஒன்றும் இல்லவே இல்லை, எல்லாம் உன் உடைமையே எல்லாம் உன் இயக்கமே, எமக்கு கதி, வழி, இயக்கம் எல்லாமே நீயே, என்று மனதார சரண் புகுந்ததற்கு அப்புறம் அந்த ஜீவனுக்கு வேறு இருப்பும் இல்லை, இயக்கமும் இல்லை. அப்படி அனாதையாக துண்டிக்கப்படுகிறது அந்த ஜீவன். இப்ப ஜீவன் என்கிற நிலை மாறி ஆன்மா என்ற நிலைக்கு வந்திடுச்சு. அந்த சரணாகதி அடைந்த தன்மையினால் ஜீவத்துவம் இல்லாமல் மறைந்து ஆன்மா என்ற உணர்வை பெற்று விட்டது. அதை பெற்ற தன்மையினால் விதியும் முடிந்தது.

இப்ப காணப்படுவது அன்பர்களின் சேவைக்காகவும், அன்பர்களது தரிசனத்துக்காகவும், அந்த யோக மாயாவின் கருணையினால் சஞ்சாரம் செய்து வருகிறது. பார்ப்பவர்களுக்கு இன்னாருடைய மகன், இன்னாருடைய கணவன், இந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் இந்த தொழில் பார்த்தவன் என்று விளக்கம் கொடுக்கலாம். பேசலாம். உண்மையில் அவர் இல்லவே இல்லை. அதனுடைய விதி முடிந்து மறைந்து பல காலம் ஆகி விட்டது. இப்பொழுது காணப்படுவது தெய்வீகப் புருஷன் என்று சொல்லக் கூடிய சுத்த ஆத்மா. இதை எதுவுமே பந்தப் படுத்தாது. பாசத்துக்கு உட்படுத்தாது. கரை படியாது. அது

எப்பவுமே சுதந்திரமா இருக்கும். அந்த நிலையை பெற்றிருக்கிறது அந்த நிலைப் பெற்றிருக்கிறது அந்த பக்குவ ஆன்மா.

எந்த ஒரு சாதகன், ஆணாயிருந்தாலும் சரி பெண்ணா இருந்தாலும் சரி, முழுமையாக சரண் புகுந்து விட்டால் கர்மாக்களை பற்றி எண்ணாமலும் அதில் பாதிப்படையாமலும், நடப்பது நலமே என்ற நிலைக்கு வந்து ஆனந்தமாக ஏற்றுக்கொண்டானானால் அவன் சரணாகதியும் முழுமை பெறுகிறது. அந்த முழுமை பெற்ற நிலையில் பிராப்தமும் பெரும்பாலும் முடிந்து விடும். முடிந்து விட்டாலும் அன்பர்கள் சேவைக்காகவும் அந்த தூலம் சில காலம் சஞ்சாரம் செய்யலாம். செய்ய அனுமதி உண்டு. ஆனால் பார்ப்பதற்கு வினை, விதி தாங்கி வந்த தூலம் என்கிற மாதிரி தான் தோற்றும். அதை உணரக்கூடியவன் தான் உணர முடியுமே தவிர மற்றவர்கள் உணர முடியாது. அப்படி சஞ்சாரம் செய்வதனால் எல்லாருமே அந்த நிலை பெற முடியும். சரணாகதி ஒன்று தான் முக்கியமே தவிர விதியையும் வெல்ல முடியும்.

இந்த தூலத்தின் முடிவான ஒரு நிலையை அடையும்போதுகூட ஸ்வய ஞான அனுபவ நூல் தனக்கு அனுபவத்துக்கு வருகிறது என்றால், அதை எண்ணிப் பார்க்கவும், அதனோடு மயமாகவும், கூடிய பாக்கியம் பெற்றால், இதனை விட வேறு சாதனை இல்லை. எந்த விதமான தபசும் இல்லை. எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டோம் என்று உறுதியாகச் சொல்லலாம். ஒரு பக்குவ ஆன்மாவின் முடிந்த முடிவான அது எண்ணமல்ல, பாவனை. ஸ்வயஞான அனுபவ உணர்வோடு கூடிய அகண்டான்ம பாவனையின் மனம் லயித்து, மனம்

அறிவாகி, அறிவு பேரறிவு ஆகி, கலந்து விட்டால் தூலம் இருக்கும்போதே நீங்கள் விதியை வென்று விட்டீர்கள். தூலமானது உங்களுடைய இச்சைப்படி அல்ல, அவனுடைய இச்சைப்படி அது நடக்கும். உங்களுக்கும் பிராப்தத்துக்கும் சம்பந்தமே இல்லாமல் போய் விடும். அந்த அளவுக்கு மாயா அதை கவனித்து விடுகிறது.

அதனால் ஸ்வய ஞான அனுபவம் என்ற ரசாம்சத்தை மட்டும் திரும்பத் திரும்ப படித்தால் போதும். அதுவே சரணாகதியைக் கொடுக்கும். ஸ்வய ஞான அனுபவ நூலில் மனம் முழுமையாக கரைந்து நாசமாகி, மனமே அறிவாகி, அறிவே பேரறிவானால், மரண பயத்தை கண்டிப்பாக வெல்லலாம். வயதானதிற்கு அப்புறமோ, கடும் வியாதியால் பீடிக்கப்பட்டாலோ ஒரு பயம் உண்டாகும். தூலம் மறைந்து விடுமே, மண்ணோடு மண்ணாக போய் விடுமே, சாம்பலாகி விடுமே, அது எப்ப நடக்குமோ என்பன மாதிரி, அந்த தூலத்தைப் பற்றின எண்ணங்கள் வரும். ஆனால் அனுபவம் பெற்றுவிட்டால் அந்த எண்ணங்கள் வராது. அந்த அளவுக்கு நித்திய ஸத்தியமாக எந்த வினாடியும் நாம் இருக்கிறோம். நாமே எல்லாமாக இருக்கிறோம் என்ற பேருணர்வு தான் இருக்குமே தவிர, ஐக உணர்வு வரவே வராது. அவசியம் அந்த நிலை பெற முடியும் பயமே இருக்காது.

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 29.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா

**குருதேவர்:** டாக்டர் என்ன சொன்னார்?

**கார்க்கி மா:** டாக்டர், குருதேவ், பரகுரு எல்லோரும் சேர்ந்து வைத்தியம் பார்த்தார்கள். பேன்டேஜ் போட்டிருக்கிறார்கள் கவனமாக இருக்க கூறியிருக்கிறார்கள். அதிகம் நடக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர்.

**குருதேவர்:** சொன்னதும் அவன்தான், செய்வதும் அவன்தான் இவள் செய்யப் போகவில்லை. அந்த விதிமுறைகள் எல்லாம் கடைப்பிடிக்க இவளால் முடியாது. அவன் கடைப்பிடித்துக்கொள்வான். உன்னால் முடியாது. நம்பிக்கைதான் குருதேவ்; வேறுயாரும் இல்லை. ஆழமான, பிடிமானமான, வைராக்கியமான நம்பிக்கைதான் குருதேவ். வேறு யாரும் இல்லவே இல்லை.

**கார்க்கி மா:** டாக்டரும், அவர் மனைவியும் இந்தியாவிற்கு வர வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் அந்த அம்மாவிற்கு உயரமாக பறக்கும் போது கொஞ்சம் பயம், வியாதி இருக்கு. உயரமாக பறந்தால் அவர் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது. அதனால் அவர்களால் இந்தியா வரமுடியவில்லை. அவர்கள் இருவரும்

இந்தியா வர பிரியப்படுகிறார்கள். அவர்கள் கண்களை மூடிக்கொண்டு தூங்கிவிட்டார்கள் என்றால் பிரயாணம் செய்ததே அவர்களுக்குத் தெரியாது.

***சீடர்:*** டாக்டராக இருப்பதனால் மனைவிக்கு அனஸ்தீஷியா கொடுத்துவிட்டார்கள் என்றால் சிரமம் இல்லை.

**குருதேவர்:** அப்படியே மயங்கிவிட்டால் என்னாவது? அப்படியெல்லாம் பயந்து பிரயாணம் பண்ணக்கூடாது. கப்பலோ, விமானமோ, ட்ரைனோ, பஸ்ஸோ, காரோ, பைக்கோ எதில் சென்றாலும் பயம் வரக்கூடாது. ஹார்ட் ஹட்டாக் இருக்கிறது, ரத்த கொதிப்பு இருக்கிறது, சுகர் ஓவராக இருக்கிறது இதனால் பாதிக்கப் படுவோமோ என்ற கற்பனை அணு அளவு கூட வரக்கூடாது. உடல் நாம் அல்ல. உடம்பு அவனுடைய பதுமை. அவன் ஆட்டி வைக்கிறான் உடம்பு ஆடுகிறது. அவன் ஆட்டி வைக்காதபடி உடம்பு ஆடாது. உடம்புக்கும் நமக்கும் சம்பந்தமே இல்லை என்று உடலை விட்டுவிட்டு போனோமானால் பயமே இருக்காது. பொதுவாக பகவானிடமோ, குருவினிடமோ மனதை விட்டால்தான் பயம் தெளியுமே தவிர நம் உடல் ஆயிற்றே நான் செத்துவிடுவேனே என்று எண்ணம் வந்தால் அந்த பயமே பலிதமாகும். அந்த பயம் மட்டும் வரக்கூடாது.

***சீடர்:*** குருதேவர் தற்போது சொன்னதை போன் மூலம் சொல்வார்கள் போலத் தெரிகிறது.

**குருதேவர்:** காட்டிலோ, மேட்டிலோ, வீட்டிலோ, நிற்கும் போதோ, நடக்கும் போது, உட்காரும் போதோ, படுக்கும் போது எந்த வினாடியிலும் பிராணன் போகலாம். அது யார் கட்டுப்பாட்டிற்கும் அடங்கியது

அல்ல. என்று கருவறையில் நுழைந்ததோ, என்று இறக்கிறதோ அதுவரை காற்று உயிர் சஞ்சாரம் பண்ணத்தான் செய்யும். அது எப்போது போனாலும் போகட்டுமே. கட்டுப்பாடு பண்ணி நம்மால் என்ன பண்ண முடியும்? போகிற உயிர் எந்த வினாடி வேண்டுமானாலும் போகட்டும். ஆனால் அவனுடைய திருவடி வேண்டும். இந்த வைராக்கியம் மட்டும் இருந்தால் போதும். எங்கும் பிரயாணம் செய்யலாம். வேறு எது வேண்டுமானாலும் செய்யலாம் உலகம் உன்னை ஒன்றுமே செய்யாது; பண்ணமுடியாது; அது அவனுடைய ஆளுகை.

அப்படி அந்த பிராணன் பிரியும் போது உன் எண்ணம் மட்டும் மறவாமல் இருந்தால் போதும். குருதேவா அல்லது பகவான் நாமாவோ எதுவோ ஒன்று. அந்த எண்ணம் மட்டும் ஸ்மரணை கெடாமல் இருந்தால் போதும். எந்த சாதனையைக் கொண்டும் பிராணன் பிரிவதை யாராலும் நிறுத்தமுடியாது. உயிர் பிரிவதை தடுக்க முடியாது; தூலம் மறைவதை யாராலும் நிறுத்த முடியாது. கோடானுகோடி மஹான்கள் தோன்றியிருக்கிறார்கள். வாழ்ந்திருக்கிறார்கள், சாதனை பண்ணியிருக்கிறார்கள். அரிய, பெரிய உபதேசக் கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்பட்ட சரீரமெல்லாம் இன்றைக்கு காணோம். எல்லாம் மறைந்துவிடுகிறது.

காலத்தின் கதிக்கு உட்பட்டதுதான் சரீரமே தவிர காலத்திற்கு அப்பாற்பட்டது சரீரம் அல்ல. அதனால் வந்த சரீரம் போகட்டுமே. ஆனால் அந்த ஒரு எண்ணம் மாத்திரம் இருக்க வேண்டும். பகவன் நாமாவோ, குரு நாமாவோ அந்த எண்ணம் மட்டும் இருந்தால் போதும். உங்களைப் போன்று இருக்கப்பட்ட

அன்பர்கள் எல்லாம் அந்த ஒன்றே நாம் என்ற திட உணர்வு இருந்தால் போதும். கண்டிப்பாக ஜீவன் முக்திதான் அடுத்த ஜென்மா இல்லவே இல்லை.

குருதேவா என்பது இந்த தூலம் அல்ல வேறு எந்த தூலமும் அல்ல. முன்னால் தோன்றிய மஹாத்மாக்கள் யாராக இருந்தாலும் சரி. ரமணரோ அல்லது பரமஹம்சரோ, வஸிஷ்டரோ, வியாசரோ, அகத்தியரோ எப்பேர்பட்ட மஹாத்மாவாக இருந்தாலும் சரி அவர்கள் இந்த சரீரம் இல்லவே இல்லை. ஆனால் அவர்கள் எல்லோரும் குரு. எப்படி, குரு ஒலி, ஒளி. இவை இரண்டும்தான் குருவினுடைய ஸ்தானத்தைப் பெறமுடியுமே தவிர இந்த தூலத்தாலும் குரு ஸ்தானத்தை பெற முடியாது. தூலம் வந்து, இருந்து, மாறி, மறையக்கூடியது. அந்த தூலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவே கூடாது. ஆனால் அவர்கள் ஸத்திய போதனைக்கு மட்டும் செவி சாய்த்து அதில் வைராக்கியமாக இருக்க வேண்டும்.

ஒலி என்பது மாயா. ஒளி என்பது பரம். பரமும், மாயாவும் சேர்ந்ததே ஜக ஜீவ ஈஸ்வராதி தோற்றங்கள். ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

**அன்பர்:** குருதேவர் பாடங்களை மனதளவில் ஏற்றுக்கொள்ள முடிகிறது. தர்மா அதாவது கர்மா பூர்வ புண்ணியம் சுகிர்த்தமானால்தான் ஜீவன் முக்தி என்று தெரிகிறது. கர்மா சம்பந்தப்படாமல் இருக்க வேண்டும். சாத்வீக குணங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, அது நிர்க்குணம் ஆக வேண்டும். நாங்கள் எல்லாம் பொம்மைகள்தான் என்று புரிகிறது. ஆனால் சில ஜென்ம வாசனைகள் எல்லாம் போகாமலிருக்கிறது. பணம், பெண் போன்ற மற்ற வாசனைகள் எல்லாம் போக முயற்சி செய்கிறோம், பிரார்த்தனை செய்கிறோம். பகவானிடமும், குருதேவரிடமும்

முறையிடுகிறோம். கண்ணீர் அதிகம் வரமாட்டேன் என்கிறது. ஆனால் இருந்தாலும் அந்த பிரிய வாசனைகள் இன்னும் இருக்கிறது அதற்கு என்ன பண்ணலாம். நாம் எல்லாம் பொம்மையே வாசனைகளை திருவடிகளில் சமர்ப்பிக்கிறோம். எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

**குருதேவர்:** பிரிய வாசனை என்பது ரஜோ, தமோ குணங்கள். கலிதோஷ வாசனைகள். நான், எனதால் பற்றப்பட்ட வாசனைகள். இவை அத்தனையுமே இருப்பது போல தோற்றும் உண்மையில் இல்லவே இல்லை. என்றைக்கு குருவை முழுமையாக நம்பி நீயே கதி என்று சரண்புகுந்தாயோ அந்த வினாடியே இரண்டு வினாடிகள் இல்லை அந்த வினாடியே கர்மாக்கள் அத்தனையும் நாசம் செய்துவிட்டார் அவர். புலி வாயில் போன மாமிசம் எப்படி திரும்பாதோ அப்படி உன் கர்மாக்களை எல்லாம் சாம்பலாக்கிவிட்டார் அவர். ஆனால் இருந்த பாத்திரம் சரீரம், பழக்க வழக்க தோஷம் விடவில்லை. கர்மா முடிந்துவிட்டது. ஆனால், பழக்க வழக்க தோஷம் விடவில்லை. பழக்க வழக்கம் சஞ்சாரம் பண்ணும் போது இருக்கிறதே. பிராப்தம் இருக்கிறதே.

சாப்பிடும் போதும், கொடுக்கும்போதும், வாங்கும்போதும் மனைவியைப் பார்க்கும் போதும், அடுத்த பெண்களைப் பார்க்கும் போதும், அநேக தோற்றங்களைப் பார்க்கும்போது வரக்கூடிய வாசனையே தவிர அந்த பொருள் அல்ல. வினை இருந்த பொருள் அல்ல. வினை இருந்த வாசனை. வாசனை இருப்பது வினை இருப்பது போல தோற்றுகிறது. பெருங்காயம் இருந்த டப்பா போல. அது இல்லவே இல்லை என்று முடிவு பண்ணினால் அதைவிட சாதனை இல்லவே இல்லை.



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *29.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா*

**குருதேவர்:** *இவள் ஏன் தலையை முட்டிக்கொள்கிறாள்? அது சரியில்லை. ஏதாவது வேண்டுதல் இருந்தால் அதற்கு ஏதாவது கோவிலைப் பார்த்து போகச்சொல். எல்லோரும் எப்படி செய்கிறார்கள். அமைதியாக நமஸ்காரம் பண்ணினால் பண்ணட்டும் அல்லது உட்கார்ந்து விட்டு போகட்டும் பரவாயில்லை. ஏதாவது கேள்வி இருந்தால் கேட்கலாம்.*

**சீடர்:** எந்த கேள்விகளும் இல்லை குருதேவா.

**குருதேவர்:** *அப்போது மௌனமாக இருங்கள். மௌனத்தை விட சிறந்த சாதனை இல்லவே இல்லை. நாம ரூப கற்பனை இல்லாது இருப்பதுவே மௌனம்; அதுவே சாதனை. நீ வைக்க வேண்டியதை வை (மைக்). உன் சேவையை செய். அந்த காலத்தில் இதெல்லாம் கிடையாதே. கேட்பவர்கள் எல்லோரும் அறிவு பூர்வமாக எங்கெங்கு உட்கார்ந்து இருந்தாலும் கேட்கும். கவனம் வேறு எங்காவது போனால் காது கேட்காது. இந்த ஒலியே போதும்; அதுதான் பர ஒலி என்பது. இது செயற்கை ஒலிதானே?*

*பாடம் நடத்தக்கூடிய மஹாத்மாக்கள் கொஞ்சம் உயரமான பீடத்தில் உட்கார வேண்டும் என்று*

சாஸ்திரம் இருக்கிறது. அதனால் உயரமான இடத்தில் உட்காருவார்கள். பாடம் கேட்கும் மாணவர்கள் சுற்றி தரையில் உட்காருவார்கள். தரையில் உட்காரும் போதும் ஏதாவது வஸ்திரத்தை விரித்து உட்கார வேண்டும். வெறும் தரையில் உட்கார்ந்தால் சாதனைக்கு அது தடையாக இருக்கும். நம்முடைய சாதனையில் பாதியை இழுத்துக்கொள்ளும் பூமி. அதனால் ஒரு விரிப்பு, மறைப்பு, ஆசனம் போட்டு உட்கார்ந்தால் நாம் எந்தளவிற்கு சாதனை செய்கிறோமோ அது நமக்கே கிடைக்கும்.

பாடம் கேட்க உட்காரும் போது இரண்டு நமஸ்காரம் செய்யலாம். ஒரு நமஸ்காரம் குருதேவருக்கு; மறு நமஸ்காரம் சபையோருக்கு. சபையோருக்கு முதலில் பண்ணிவிட்டுத்தான் குருதேவருக்கு பண்ணுவர். அதே போல குறிப்பட்ட வார்த்தையை சொன்னாலும் சொல்லலாம் அல்லது மௌனமாக இருக்கலாம். முடிந்ததென்றால் நாராயணா என்று சொல்லுவார். அப்படி சொன்னால் பாடம் முடிந்துவிட்டது என்று அர்த்தம். ஆங்காங்கே இருந்து நமஸ்காரம் பண்ணலாம். பக்கத்தில் வந்துதான் பண்ண வேண்டும் என்பது இல்லை. நீ எங்கு நமஸ்காரம் செய்கிறாயோ அங்கே அவர் திருவடி இருக்கிறது என்ற நம்பிக்கையோடு பண்ணு. அதை அவர் ஏற்றுக் கொள்வார். பக்கத்தில் போகவேண்டும், பக்கத்தில்தான் பண்ணவேண்டும், திருவடி தொட்டு நமஸ்காரம் பண்ணவேண்டும் என்பது இல்லவே இல்லை. அப்படி செய்தார்கள் முன்னர். தற்போது எல்லாமே ஆடம்பரம், வினோதம் என்று அப்படி மாறிப்போச்சு.

அந்த காலாதீத பரம்பொருள் எங்கும் சர்வ வியாபகமாக இருப்பதனால் இறை நாம ஸ்மரணையோ அல்லது

குருதேவா, குருநாதா என்ற ஸ்மரணையோ பண்ணிக்கொண்டு இருந்த இடத்தில் பெண்களாக இருந்தால் மண்டியிட்டு பண்ணவும், ஆண்களாக இருந்தால் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணவும். பண்ணும்போது இரண்டு கைகளுமே பூமியைத் தொட வேண்டும். தொட்டு நமஸ்காரம் பண்ணிவிட்டு கைகளை பின் எப்படி வைத்தாலும் பரவாயில்லை. அப்படி தொட்டால் நீ எங்கு கை வைக்கிறாயோ அந்த இடத்தில் அந்த பரம்பொருள் இருக்கிறது. நீ தேடிப் போக வேண்டியதில்லை. அது உன்னை தேடி வருவதும் இல்லை. எந்த இடத்திலுமே சாசுவதமாக, பிரமாணமாக, ஸத்தியமாக, பிரத்யட்சமாக அங்கேயே இருக்கிறது. நீ கை வைக்கப்பட்ட இடத்தில் அது உண்டு. அது உள்ளத்தில் அது வைக்கப்படும்.

அதனால் திருவடியைத் தொடவில்லையே, திருவடியை காணவில்லையே, திருவடி ஸ்பரிசம் கிடைக்க வில்லையே என்ற எண்ணம் தேவையில்லை. திருவடி என்பது அந்தர்யாமியாக இருக்கப்பட்ட ஒன்று. எங்கு கை வைக்கின்றாயோ அந்த இடத்தில் திருவடி உண்டு. அதை எடுத்து தலையில் தடவிக் கொண்டோம் என்றால் அந்த தூளியானது சிரசில் படும். இப்படித்தான் பெரும்பாலும் பெரியவர்கள் கற்கக்கூடிய மாணவர்களுக்கு நமஸ்காரத்தை சொல்லிக் கொடுத்தனர். நம் அன்பர்கள் செய்கிறீர்கள். மற்ற எங்குமே இப்படி நமஸ்காரம் செய்வதில்லை. கை எடுத்துக் கூட நமஸ்காரம் செய்யக்கூடாது என்கிறார்கள் சில அன்பர்கள். அந்த அளவிற்கு கேவலமாக போய்விட்டாயா? அவர்கள் உயர்ந்தவர்களாக ஆகிவிட்டனரா என்று அப்படிபட்ட அஹங்காரம். நம் தலையில் மாணிக்கம் இருக்கிறதாம். கீழே முட்டி

நமஸ்காரம் செய்தால் அது சிந்திபோகுமாம் அது ஒரு காரணம். பிறரை நமஸ்காரம் பண்ணும்போது அவர்களுடைய பாபங்களை ஏற்றுக்கொள்கிறாய், நீ பண்ணாதே என்று கலி அந்த அளவிற்கு வக்கிரம் ஆகிவிட்டது.

நமஸ்காரம் பண்ணுவதில் எந்த கோரமான வக்கிர குணங்களும் இல்லை. பணிவோடு திருவடி நமஸ்காரம் செய்கிறார்கள். இது போல வேறு எந்த சமாஜ்யத்திலும் கிடையாது. எந்த ஊரிலும் கிடையாது. அந்த பாத நமஸ்காரம் ஒன்றே அனைத்தையும் அணு அணுவாக கூட்டி வைக்கும். பாத நமஸ்காரத்தை விட பாதுகா சேவை ரொம்ப முக்கியமானது. எங்கு பார்த்தாலும் அவை இரண்டையும் தொட்டு ஒழுங்கு படுத்தி வைக்கவோ, நேர் படுத்தி வைக்கவோ, பிரிந்திருந்தால் சேர்த்து வைக்கவோ செய்யவும். அந்த அளவிற்கு பாதுகா சேவை செய்தீர்கள் என்றால் அந்த பாதுகா சேவையானது பாத சேவையைவிட அதிகமான அனுபவத்தைக் கொடுக்கும். பாதம் என்பது பகவான், பாதுகா என்பது ஸத்குரு. இந்த எண்ணத்தோடு சேவை செய்தீர்கள் என்றால் போதும்.

ஆண், பெண், குழந்தைகள், படித்தவர்கள், படிக்காதவர்கள், ஜாதி, மதம், இனம், மொழி என்ற எந்த பேதமும் இல்லாதபடி ஒருவர்கொருவர் பணிவோடு நமஸ்காரம் பண்ணும்போது உங்கள் உள்ளம் பள்ளமாகிறது. பஞ்சு போன்ற மென்மையாகிறது, எதையும் கிரகிக்கக்கூடிய ஆற்றல் உண்டாகிறது. குருதேவர் சொல்லக்கூடிய வாசகங்களை இதயத்தில் பதிய வைத்து அதன்படி நடப்பதற்கும் அது உறுதுணையாக இருக்கும். உள்ளம் பள்ளமாகாதபடி, உள்ளம் குழையாதபடி, உள்ளம் பஞ்சு போன்று

*மிருதுவாகாதபடி நீ என்ன சாதனை பண்ணினாலும் சாதனை, சாதனை ஆகாது. பல சிரமங்களை கொடுக்கும். பணிவினால்தான் பெரும்பாலும் அந்த நிலையை பெறமுடியும்.*

*தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய் என்பார்கள் சில மஹான்கள். எந்தளவிற்கு உன்னை தாழ்த்திக் கொள்கிறாயோ, பணிவோடு, கனிவோடு திருவடி நமஸ்காரம் பண்ணுகின்றாயோ அந்தளவிற்கு சீக்கிரமாக அந்த உள்ளமானது பண்படுத்தப்படும். பக்தியோ, முக்தியோ அவசியம் உண்டு. உன்னுடைய படிப்போ, பதவியோ, பணமோ மென்மையான இதயத்தைத் தராது. வறட்சியான இதயத்தைக் கொடுக்கும். இறைவுணர்வோடு, குரு உணர்வோடு நாம் அந்த ஒன்றை அடையவே வந்தோம் வாழ வரவில்லை எந்த சோதனை வந்தாலும் சாதனையால் வெல்ல முடியும், இறை, குரு நம்பிக்கை. நம்பிக்கையினால் எல்லாம் பெறமுடியும். நாம் அதுவாக முடியும் என்று இருகரம் கூப்பி நமஸ்காரம் செய்யவோ பணிந்து நமஸ்காரம் பண்ணவோ உடலை வருத்தினால் உள்ளம் குழையும். அதனால் உங்கள் சாதனையும் முதிர்ச்சி ஆகும்.*

*பரமஹம்சர் சொல்லுவார் தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய். அதாவது ரொம்ப தாழ்ச்சியாக, பணிவாக, மென்மையான உள்ளத்தோடு தாழ்ந்து நின்றால் நீ வாழமுடியும். வாழ்ந்து நிற்பாய் என்பார். அதற்கு உதாரணமாக என்ன சொல்கிறார் என்றால் ஒரு நாணலைப் போல இரு. ஆற்றங்கரை ஒரங்களில் நாணல் புல் இருக்கும். நான்கு ஐந்து அடி உயரம் வளரும். அந்த நாணல் புல்லானது காற்று வேகமாக அடித்தால் தரையோடு தரையாகப் படுத்துக்கொள்ளும்.*

எங்கிருந்து காற்று வீசுகிறதோ அதற்கு மறுபக்கம் படுத்துக்கொள்ளும். காற்று அடித்து நின்றவுடன் நிமிர்ந்து நிற்கும். அதற்கு எந்த சேதாரமும் ஆகப்போவதில்லை. காற்று அடிக்கும் தருணம் பணிந்து கொள்ளும், அடித்து முடித்தவுடன் நிமிர்ந்து கொள்ளும். அதேமாதிரி வெள்ளம் ஜலப்பிரவாகம் எவ்வளவு திரண்டு வந்தாலும் சரி. அது எந்த பக்கம் ஓடுகிறதோ அந்த பக்கமே பணிந்து கொள்ளும். ஜலப்பிரவாகம் குறைந்துவிட்டால் நிமிர்ந்து நிற்கும். இதைப்போல உன் வாழ்க்கையில், சாதனையில் எந்தளவிற்கு பணிகின்றாயோ, எந்தளவிற்கு விட்டுக் கொடுக்கின்றாயோ, எந்தளவிற்கு பொறுமையாக ஏற்றுக்கொள்கின்றாயோ, எதையும் நலமே, நலமே என்று ஏற்றுக்கொள்கின்றாயோ அந்த அளவிற்கு சாதனையும் சுலபமாகும். வாழ்க்கையும் ஸ்திரமாகும், வாழ்க்கையை சாதனமாக பயன்படுத்திக் கொள்ளும். அந்தளவிற்கு சாதனை இலகுவாக முடியும். எந்த சோதனையும், வேதனையும் வராது.

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *29.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா*

***சீடர்:*** *மூன்று வாத்துக்கள் இங்கு வாசல் வரை வந்து சாப்பிட்டுவிட்டு சென்றுவிடுமாம். பசியாக இருந்தால் மக்காசோளம் போட்டிருக்கிறார்கள் வந்து சாப்பிட்டு விட்டு சென்றுவிடுமாம்.*

**குருதேவர்:** *அந்த மூன்றும் மஹாத்மாக்கள். வாத்துக்கள் எல்லாம் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். நாகரீகமான உலகம். இங்கு இருக்க பிடிக்கவில்லை. அதனால் ஏரிக்கு பறந்து போய்விடும். இந்த தூலம் முடியும் வரை இங்குதான் இருக்க வேண்டும் என்று இவை மூன்றுக்கும் வைரக்கியம் இருக்கிறது இவைகளுக்கு. குஞ்சுகள் எல்லாம் இங்கு சிறிய நீர் நிலையில் இருக்க பிடிக்கவில்லை அவைகள் பறந்து வேறு இடம் சென்றுவிட்டன. ஆடம்பரமான வாழ்க்கைக்காக பெரிய ஏரிக்கு போய்விட்டன. ஆனால் இந்த மூன்றும் சற்று தூரம் சென்று கிடைப்பதை சாப்பிட்டுவிட்டு வந்துவிடும். இருப்பிடம் இங்குதான். ஆங்காங்கு போக வேண்டியது ஒரு நாள் இரண்டுநாட்கள் தங்க வேண்டியது கிடைக்கும் ஆகாரத்தை சாப்பிட வேண்டியது ஆனால் இருப்பிடம் இங்குதான்.*

***சீடர்:*** *இங்கிருக்கும் பறவைகளுக்கும் மற்றும் உள்ள அனைத்திற்கும் உணவு பகவான் கருணையில் கிடைத்துவிடுகிறது.*

**குருதேவர்:** கண்டிப்பாக என்னென்ன உணவு வேண்டுமோ கிடைக்கும். வலிய வராது. தேவைக்கு கிடைக்கும்.

***அன்பர்:*** *50 மீட்டர் கார் பறந்து சென்றதாம். இடித்திருந்தால் பாறை, மரம் எல்லாம் இடித்திருக்கும். ஆனால் குருதேவரே ஓட்டிக்கொண்டு சென்று ஒரு இடத்தில் விட்டிருக்கிறார்.*

***சீடர்:*** *அவர் அன்றைக்கே சொன்னாரே, காரில் ஏறி உட்காருவதுதான் தெரிகிறது. எங்கு செல்கிறோம், எப்படி செல்கிறோம் என்று தெரியவில்லை என்று கூறினார் அல்லவா. போய்விட்டு வந்துவிடுகிறேன் என்று கூறினார். இன்றைக்கு குருதேவர் கொண்டுவந்து விட்டுவிட்டார் என்று ஒரே ஆனந்தமாம். உணவு நீங்கள் ஆசீர்வாதம் பண்ணிக்கொடுத்தது ரொம்ப மகிழ்ச்சி என்று சொல்லியிருக்கிறார். கார் உள் அமர்ந்தே சாப்பிட்டு இருக்கிறார். கார் கதவை உயர்த்திவிட்டு வெளியில் வந்திருக்கிறார்.*

**குருதேவர்:** *அவ்வளவு ஆழமா? யார் அவர் உடன் இருக்கிறார்கள்.*

***சீடர் 1:*** *ரிச்சர்டு இருக்கிறார். டோவ் பண்ணும் வண்டி வந்து இழுத்து வந்திருக்கிறது. வண்டிக்கு ஒன்றும் அடி இல்லையாம் சுவாமிஜீ.*

**குருதேவர்:** *அவன் பார்த்துக்கொள்ளுவான். அதைவிட அவனுக்கு வேலை என்ன?*

***சீடர் 2:*** *எங்காவது மோதி இருந்தால் காரே இல்லாமல் போயிருக்கும்.*

**குருதேவர்:** *பாறையில் மோதாதபடி, மரங்களில் மோதாதபடி எப்படியோ கொண்டு இறக்கிவிட்டான் என்றால் பெரிய காரியம். அவன்மீது நம்பிக்கை. மூட நம்பிக்கை, எல்லாம் அவன் செயல் என்ற முழு நம்பிக்கை.*

**சீடர் 1:** ரோஜர் போட்டோ எடுக்கப் போயிருக்கிறார்.

**சீடர்:** இரண்டு, மூன்று முறை விழுந்திருக்கிறார்களாம். காரில் அல்ல. நடந்து செல்லும்போது. ஆனால் எழுந்து கடவுள் இப்படித்தான் என்று போய் கொண்டே இருப்பார்களாம்.

**குருதேவர்:** குழந்தை மாதிரி.

**சீடர்2:** ஸத்ஸங்கத்தில் ஒரு முறை சொன்னீர்கள்.

**சீடர் 1:** ஆமாம். போன வருடம் ஆகஸ்டு மாதம். அவர் தம்பிதான் எல்லாவற்றையும் வாங்கி கொடுப்பாராம். அவர்தான் கார் வாங்கி கொடுத்தாராம். மாண்டிரியாலில் இருக்கும் வரைக்கும் அவர் உதவினாராம்.

**சீடர்:** புத்த மதத்தவர் பின்பற்றும் முறை எப்படிப்பட்டது?

**குருதேவர்:** பணிவு, சின் முத்திரையை காட்டுதல், தியான மூர்த்தியாக இருத்தல். புத்தர் பிரவிருத்தி, யோகம் வேறு எதுவும் இல்லவே இல்லை. உள்ளாழ்ந்த தியானம். மனதை ஐக்கியப்படுத்துவதை தவிர மனதை அழிப்பதில்லை. அவர்களுடைய சாதனை அவ்வளவுதான். சாதனையும், போதனையும் லயமாக வேண்டும். மனம் லயமாகி எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும். எத்தனை வருடம் வேண்டுமானாலும் இருக்க முடியும். பணிவு முக்கியமானது. பணிந்துகொண்டாலும் மனம் லயமாகும், நாசமாகாது.

அது போல சுவாசத்தை பயிற்சி பண்ணினாலும் மனம் லயமாகும். அந்த நிலை கிடைக்கும். ஆனால் அழியாது. சின் முத்திரை என்பதுதான் பெரும்பாலும் காட்டும்போதே சுத்த அத்வைதம் ஆக வேண்டும். ஆனால் அத்வைதத்திற்கு இடம் இல்லை. அத்வைதம்

இல்லாதபடி ஆணவம், கன்மம், மாயை இந்த மூன்றையும் பரம்பொருளில் சேர்த்துவிட்டு ஜீவாத்மா, பரமாத்மாவை ஒன்றாக்கிக்கொண்ட ஆனந்தம். அகண்ட ஆனந்தம் அல்ல. அதுதான் சின்முத்திரை. இது அகண்டானந்தம் இல்லை. இது மூன்றுதான் அவர்களுடைய கொள்கை.

***அன்பர்:*** *குருதேவர் மூன்று சிலைகள் இருக்கின்றது அல்லவா? வாயை மூடிக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு, காதுகளை மூடிக்கொண்டு அவைகளைப் பார்த்து குருதேவர் ஏன் நமஸ்காரம் செய்கின்றார் என்று பரமாத்மா கேட்கின்றார். பணிவாக ஒருவர் அமர்ந்திருக்கிறார் குனிந்தபடி. அவரைப் பார்த்து நீங்கள் நமஸ்காரம் பண்ணுகிறீர்கள் அதற்கு என்ன காரணம்?*

***சீடர் 1:*** *தமிழ்நாட்டில் இருந்து ஒரு அம்மா கூட கேட்டிருக்கிறார். அவர்களுக்கு படங்கள் அனுப்புகிறோம் அல்லவா அதைப் பார்த்து கேட்டிருக்கிறார்.*

**குருதேவர்:** பணிவுதான். பணிந்தாயிற்று என்றால் எல்லாமே சாத்தியமாகும். கேள்வி மட்டும் கேட்கக் கூடாது. என்ன கிடைக்கும், என்ன ஆவோம் என்ற கேள்வி மட்டும் கேட்கக் கூடாது. பணிந்துவிட்டால் போதும் உன் லட்சியம் எதுவோ, என்ன தேவையோ கிடைக்கும்.

இந்த பணிவை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பண்டிதர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பக்தீக்கோ, முக்திக்கோ சாதனை பண்ணக்கூடியவர்கள் ஓரளவிற்கு ஏற்றுக் கொள்வார்கள். பாண்டித்யம் உள்ளவர்கள் ஏகப்பட்ட சாஸ்திரங்களையோ, வேதாந்தங்களையோ,

*ஏகப்பட்ட புத்தகங்களையோ படித்தவர்கள் விளக்கம் நிறைய கொடுப்பர். ஆனால் அவர்களுக்கு பணிய வைக்கத் தெரியாது. பணியத் தெரியாது. பணிந்தால் தம்முடைய சக்தி முழுவதும் போய்விடுமே நம்மை யாரும் மதிக்க மாட்டார்களே என்ற நிலை ஏற்பட்டுப் போகும்.*

***சீடர் 3:*** *செல்போனில் கார் விழுந்த போட்டோவை காண்பிக்கின்றனர்.*

**குருதேவர்:** *யார் எடுத்து வந்தது?*

***சீடர் 3:*** *ஆனந்தி அம்மா அனுப்பி வைத்துள்ளார்.*

**குருதேவர்:** *அவள் ஆனந்தமாக இருக்கிறாள்.*

**அன்பர்:** *கட்டை விரலோடு, ஆள் காட்டி விரல் ஏன் அடி பணிய வேண்டும்?*

**குருதேவர்:** *ஆள்காட்டி விரலில் மூன்று மடிப்புகள் உண்டு. கட்டை விரலில் இரண்டு மடிப்புகள்தான் உண்டு. இருவினை என்ற பிடியில் பிரபஞ்சம். அத்வைதியாக இருக்கப்பட்டவன் பரமாத்மா. அவனுக்கு இரண்டு இயக்கங்கள் உண்டு. நல்லது, கெட்டது; சுகம், துக்கம்; புண்ணிய பாபம் என இரண்டு உள்ளது. அவை இரண்டும் இருக்கப்பட்டவன் வாழத்தேவையில்லை. அந்த இயக்கத்தோடு இருந்தால் எல்லாமே அவன் அனுபவத்திற்கு ஒத்துவரும்.*

*ஜீவனுக்கு ஆணவம், கன்மம், மாயை உண்டு. அவன் இந்த மூன்றையும் காலிபண்ண வேண்டும். இந்த மூன்றையும் மூன்று மடிப்புகளாக சொல்லலாம். இந்த மூன்றையும் வளைத்தால் தான் அந்த கட்டை விரலைத் தொடலாம். பணிவோடு ஏற்றுக் கொண்டாயானால் அது உன்னை ஏற்றுக்கொள்கிறது. ஜீவத்தன்மை நாசமாகிறது. பரமாத்ம தன்மை அனுபவமாகிறது.*


இறைவன் தன்மை நமக்கு இயல்பாய் கிடைக்கிறது. மற்ற மூன்று விரல்களையும் மேல்நோக்கி எல்லாம் நீயே! என விட வேண்டும். இந்த மூன்றும் வளைந்துதான் ஆக வேண்டும். இந்த மூன்றும் பணிந்தால்தான் பரமாத்மாவுடன் சேர முடியும். பணியவில்லையானால் கண்டிப்பாக சேர முடியாது.

ஜீவன்தான் இறைவனை அடைவதற்கு முயற்சி பண்ண வேண்டுமே தவிர இறைவன் ஜீவனை அடைய முயற்சி பண்ணத் தேவையில்லை. நாம் முயற்சி செய்து பணிந்து வளைந்து கொடுத்தால் இறைவன் நம்மை ஆட்கொள்ளுவான். நாம் பணியாதபடி அவன் நம்மை ஆட்கொள்ளமாட்டான். அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம் நாசம் பண்ணி பணிந்தால் வளையலாம். வளைந்தால் ஏற்றுக்கொள்வான். மறு வினாடி ஈசனாகலாம்.

நாராயணா!







ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 30.07.2015 காலை ஸத்ஸங்கம் கனடா

***சீடர்:*** ஸ்டியரிங்கில் கையை வைத்துக்கொண்டிருந்தார்களாம், அதுவே தானாக போய் அந்த பள்ளத்தில் வீழ்ந்து விட்டது.

***குருதேவர்:*** பள்ளத்தில் விழவில்லை, குருதேவரே இறக்கி வைத்தார். அப்படி போனால் நீ எப்படி இருக்கிறாய் உணர்வோடு இருக்கிறாயா அல்லது உணர்ச்சி வசப்படுகிறாயா என்று சரி பார்க்கத்தான்.

***சீடர்:*** பஜன் CDஐ காரில் போட்டிருக்கிறார்கள். அதை வெளியில் எடுக்க முடியவில்லை இரண்டு மாதங்களாக. எப்பொழுதெல்லாம் காரில் செல்வார்களோ அப்பொழுதெல்லாம் பாடிக்கொண்டே இருக்கும்.

***குருதேவர்:*** பள்ளத்தில் விழவில்லை இறக்கிவிட்டார் கீழே. அப்படி இறக்கிவிடும்போது மனம் இருக்கும் போது சிரமமான காரியம்தான். இப்படி சம்பவம் ஏற்படுகிறதே என்று பதட்டம் உண்டாகிறதா அல்லது குரு நாம ஸ்மரணையிலேயே ஒன்றி இருக்கிறாயா என்பதை பார்க்கத்தான். குரு நாம ஸ்மரணையிலேயே இருந்ததாலே அப்படியே இறக்கி வைத்துவிட்டோம். உணர்ச்சி இருக்கிறதா, உணர்வு இருக்கிறதா. உணர்ச்சி

*இருந்தால் உலக சம்பந்தப்பட்டது. உணர்வு இருந்தால் பரமார்த்தீகம் சம்பந்தப்பட்டது. எதோடு இருக்கிறாள் என்கிற மாதிரி ஒரு சின்ன பரீட்சை. அந்த உணர்ச்சிக்கு அடிமையாகவில்லை இவள். உணர்வோடு இருந்த தன்மையினால் எந்த சிராய்ப்பும் இல்லாத படி பார்த்துக்கொண்டது.*

*கார் என்ன ஆயிற்று?*

***சீடர்:*** *காரை ஒன்றும் பண்ண முடியாது; நொருங்கிவிட்டது.*


**குருதேவர்:** *தகரம் நொருங்கக்கூடிய அளவிற்கு நடந்திருக்கிறது. ஆனால் உடம்பில் எந்த சேதமும் கிடையாது.*

***சீடர்:*** *அவர்கள் இப்பொழுது வாடகைக்கு கார் எடுத்துக்கலாம் குருதேவா. அதற்கு இன்சூரன்ஸ் கம்பெனியே பணம் கொடுத்துவிடுவார்களாம். புது கார் வாங்குவதற்கு பணம் இல்லை. கார் இருந்தால் தான் மாண்டிரியால் நகரத்துக்கு சென்று வரமுடியும். எனவே கார் இல்லாமல் இருக்க முடியாது.*

**குருதேவர்:** *அந்த கவலையை அவன் பார்த்துக்கொள்வான். எல்லாம் அவன் செயல் என்பது பிரத்தியக்ஷ அனுபவம். நம்ம செயல் ஒன்றுமே இல்லை.*

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 30.07.2015 மாலை ஸத்ஸங்கம் 1 கனடா

***குருதேவர்:*** ஏதாவது கேள்வி இருந்தால் கேட்கலாம்.

***அன்பர்:*** பல சமயங்களில் கட்டை விரலும், மோதிர விரலும் சேர்ந்து கொள்கிறது.

***குருதேவர்:*** கர்மா நாசம் ஆகிறது. ஒன்று ஆணவம்(நடு விரல்), மற்றொன்று கர்மா (மோதிர விரல்), மாயா (சிறு விரல்). இரண்டு கர்மாக்கள் இருக்கின்றன பிராப்தம், ஆகாமியம். சஞ்சிதம் என்பது வேறு. எடுத்து வந்தது பிராப்தம். சேர்வது ஆகாமியம். இரண்டு விரல்களும் இயல்பாக சேர்ந்தது என்றால் நல்ல சாதனை. அந்த இரண்டு கர்மாக்களும் நாசமாவதற்கு என்ன வழி உண்டோ அதை காட்டுகிறது.

***சீடர்:*** கர்மா குறைகிறதா குருதேவா.

***குருதேவர்:*** குறைந்து குறைந்து நாசம் ஆகும். ஆனால் இது குறைவதற்கு குருவினுடைய கடாட்சம் முதலில் தேவை. அவருடன் சேர்ந்து அவருடைய பாடங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டால்தான் சஞ்சித கர்மா நாசம் ஆகும். சஞ்சிதம் நாசம் ஆகாதபடி இந்த இரண்டு கர்மாக்கள் நாசமானாலும் கூட இன்னொரு ஜென்மா தொடரத்தான் செய்யும். அதை (சஞ்சிதம்) முதலில் காலி பண்ண வேண்டும். அவரிடம் யாம் உம்

மாணவனே; உம்மையன்றி வேறு கதி இல்லை என்று சரண் புகுந்து விட்டான் என்றால் அந்த ஒன்று சாம்பலாக போகிறது (சஞ்சிதம்). அதன் பிறகு இந்த இரண்டு (பிராரப்தம் மற்றும் ஆகாமியம்) கர்மாக்களை அனுபவிப்பதற்கும் முடிவதற்கும் வழிகாட்டியாக இருக்கும். சஞ்சிதம் குருவின் பார்வையாலும், கடாட்சத்தாலும் தான் நாசம் ஆகும். ஆகையால் குரு கடாட்சம் பெற்றுக்கொண்டு அப்புறம் இதை தொட்டோம் என்றால் பரவாயில்லை.

சின்முத்திரையில் இருந்துகொண்டு ஜெபம், தபத்தை பண்ணினாலும் மனம் சாந்தியாகும், அமைதியாகும், ஒரு நிலை படும். ஆனால் அழியாது. அழிவதற்கு அந்த சஞ்சிதம் நாசம் ஆனால்தான் முடியும்.


ஜெப தபத்தை பண்ணும் போதும் மந்திரமோ, யோகமோ, தியானமோ பண்ணும்போதும் சின்முத்திரை வைத்து கொண்டால் ரொம்ப அதீதமாக இருக்கும். ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்று படுத்துவதற்கு பெரிய சாதனையாக இருக்கும். அதை கண்டிப்பாக செய்யலாம். மாற்றி செய்யும் போது நல்லதும் இருக்குது; சில தீயவை அழியாமலும் இருக்கிறது. எனவே இதுதான் முறையோடு செய்யக்கூடியது (சின்முத்திரை).

**அன்பர்:** குருதேவா! பதமுக்திக்கும், பரமுக்திக்கும் என்ன வித்தியாசம்?


**குருதேவர்:** பதமுக்தி என்பது ஈஸ்வராதிகள் என்று சொல்லக்கூடிய திரிகர்த்தாக்களும் இருக்கப்பட்ட இடம். அது கண்ட சமுத்திரம், அளவுக்கு உட்பட்டது. பர முக்தி என்பது ஈஸ்வராதிகளும் அதனுடன் ஐக்கியமாகி ஈசன் என்ற தன்மை நாசமாகி எல்லாம் பரமே எல்லாம் காலாதீத

பிரம்மமே என்ற நிலை கூடுவது அகண்ட சமுத்திரம். எல்லையற்ற, அளவற்ற, அகண்டமான சமுத்திரம் அது. அங்கு போனால் திரும்பி வரவேண்டியது இல்லை. பதமுக்தி என்று சொல்லக்கூடிய ஈஸ்வராதிகள் இருக்கப்பட்ட இடத்திற்கு போனால் திரும்ப ஜென்மாவுக்கு வந்துதான் ஆகணும். ஜென்மா தொலையாது. பரமுக்திக்கு போனால் ஜென்மா நாசமாகும். அது கண்டம். இது அகண்டம்.

*நாராயணா!*







ஸத்தியம் பேசு.

(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

## 30.07.2015 மாலை ஸத்ஸங்கம் 2 கனடா

**குருதேவர்:** Very good your question?

***அன்பர்:*** *தங்கள் புனித தாமரை திருவடிகளுக்கு நமஸ்காரங்கள். மிகவும் அன்பான தூளிபாபா! மிக நன்றியுடன் நாங்கள் இந்த யாத்திரையில் கலந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் கனடா வந்தவுடன் நாங்களும் இந்த யாத்திரையில் பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறோம். இது எங்களுக்கு கொடுத்த மிகப்பெரிய பரிசு. நீங்கள் ஏற்கனவே சொல்லி இருக்கிறீர்கள், ஹிமாலயாவில் வசிக்கக்கூடிய மஹாத்மாக்கள், ஸ்ரீ பத்ரி வன ஸத்குரு குடிலுக்கு வருகிறார்கள். அவர்களை சந்திப்பதற்காக யாமும் இந்த பத்ரி வன ஸத்குரு குடிலுக்கு வருவோம் என்று சொல்லியிருந்தீர்கள். அவர்கள் சூட்சும சரீரத்தில் வருவார்கள். கேள்வி என்னவென்றால் உயிர் வாழும் அனைத்து ஜீவர்களுக்கும் இந்த சூட்சுமமான சக்தி உண்டா?*

**குருதேவர்:** *அனைவருக்குமா?*

***அன்பர்:*** *சூட்சுமமான சக்தி உண்டா? அல்லது சில பேர் தான் அதை பெற்றுக்கொள்ள முடியுமா? அல்லது அனைத்து ஜீவர்களும் பெற்றுக்கொள்ளலாமா? அதை பற்றி*

விளக்கம் வேண்டும். இந்த யாத்திரையில் மஹாத்மாக்களும் பங்கு பெற்றுள்ளார்கள் அல்லவா? இந்த சூட்சுமமான சக்தி ஸத்குருவுக்கு எப்படி உபயோகமாகிறது. எங்களை போன்று சாதனை செய்யக்கூடிய சாதனையாளர்களுக்கு எவ்வளவு முக்கியமானது அந்த சக்தி. அதை பற்றி விளக்க வேண்டும். நன்றி நன்றி நன்றி. பணிவான பக்தியுடன் ரேன்டி.

**குருதேவர்:** எல்லாரும் பெற்றுக்கொள்ளலாம். நல்ல கேள்வி சூட்சுமம் என்பது ஒலி வடிவிலும் அதாவது சப்தார்த்தத்திலும் கேட்கலாம். இரண்டு பேர் ஒரு விஷயத்தை பேசிக்கொண்டிருக்கும் போது அவர்களுடைய வார்த்தை நமக்கு அனுகூலமாக இருக்கலாம். இது சூட்சும ஒலி வடிவம். நம்முடையை சங்கல்பத்திற்கு நம்முடைய காரியத்திற்கு பயன்படக்கூடியதோ பயன்படாததோ இன்னொரு சரீரம் மூலமாக ஒலிக்கப்படும். அவர்கள் எதை பற்றி சொல்கிறார்களோ அதை காது கேட்கும் அது நம்முடைய எண்ணத்திற்கும், செயலுக்கும் அது ஒத்துவரும். நமக்கு வேண்டும் வேண்டாம் என்று அறிவுறுத்தக்கூடியது ஒலி வடிவம்.

இந்த ஒளி வடிவம் என்பது, பிரகாசமாக இருக்கக்கூடிய ஒளி வடிவம் என்பது அறிவின் சொரூபம். இது பெரும்பாலும் எந்த ஜீவர்களையும் குறிக்காது. மனிதர்களுக்கு மட்டும் தான் கிடைக்கும், ஆணுக்கும் கிடைக்கலாம், பெண்ணுக்கும் கிடைக்கலாம். மற்ற மிருகங்களுக்கோ, பறவைகளுக்கோ கண்டிப்பாக கிடையாது. ஏன் என்றால் அவைகளுக்கு மனம் இல்லை. நம்மிடம் மனம் இருக்கிறது; மனதை அறிவாக்கிக்கொண்டோம். அதனால் சூட்சும ஒளி

வடிவை பெறமுடியும். இந்த மனம் நாசமாகி அறிவோடு கலந்தால்தான் அந்த சூட்சுமத்தை பெறமுடியும். ஆண் பெண் என்ற பேதம் இந்த உடம்பே தவிர உண்மையில் இல்லவே இல்லை, ஆணும் இல்லை பெண்ணும் இல்லை. ஆன்மா என்று சொல்லக்கூடிய ஒன்றுதான், ஆன்மா என்று சொல்லக்கூடியது அறிவு. நாம் அறிவாகிவிட வேண்டும், அதாவது மனமானது அந்த அறிவில் கலந்து விட வேண்டும். மனம் நாசமாகும் நிலை வேறு; அது ஜீவன் முக்தி. ஆனால் இது விவகாரத்திற்குரியது. அப்படி இருந்தால் ஒரு நிலை பெறமுடியும்.

இங்கு வரும் மஹாத்மாக்கள் பெரும்பாலும், பல ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான வருடங்கள் ஒளி வடிவத்திலேயே இருந்துகொண்டு சஞ்சாரம் பண்ணிக்கொண்டு சிலர் சாதனை பண்ணுகிறார்கள், சிலர் சித்திகளோடு விளையாடிக்கொண்டு பல விதமான காரியங்கள் பண்ணுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் ஒளி வடிவம்தான். ஆனால் நமக்கு அறிவுறுத்தும் நிமித்தமாக ஒலியை (சப்தம்) கொடுக்கலாம் அதை கேட்க முடியும். ஒளி வடிவமாக இருக்கக்கூடிய அவர்களுடன் நாம் பேச முடியும். மனம் இருந்தால் பேசமுடியாது, மனம் இல்லையென்றால் கண்டிப்பாக பேச முடியும். அவர்கள் ஹிமாலயாவில் இருந்தாலும் கூட இங்கு ஒரு சக்தி அதாவது வைப்ரேஷன் பெருகிக் கொண்டே வருவதனால், ஹிமாலயா, கனடா, அன்பின்குடில் மாத்திரம் தான் சொல்ல முடியும் இந்த உலகத்தை பொறுத்த அளவில். அவர்களுக்கு இந்த இடம் திருப்திகரமாக, ஆனந்தமாக இருக்கிறது. அங்கங்கு உட்கார்ந்து தியானத்தில் அமர்ந்து அனுபவிக்கிறார்கள்.

இங்கு இருக்கும் விசேஷமான சக்தி அவர்களுக்கு கை கொடுக்கிறது. அதனால் இங்கு விரும்பி வருகிறார்கள் சூட்சுமமான மஹாத்மாக்கள். மேலும் இங்கு கூட்டமும் அதிகமாக இல்லை, இரண்டு மூன்று நாட்களாக அவர்களுடன் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள் வருவது, கேள்விகள் கேட்பது அவைகளை முன்பு போல் வரிவடிவில் எழுத முடியவில்லை. அதனால் எழுதுவதை நிப்பாட்டியாச்சு.

வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்; உங்களை பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் உங்களை தரிசனம் பண்ண வருகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அப்பேர்பட்ட பல லட்சக்கணக்கான வருடங்களாக இருக்கும் மஹாத்மாக்கள் தரிசனம் கொடுக்க வருகிறோம் என்று சொல்ல மாட்டேன் என்கிறார்கள். அந்த அளவிற்கு உங்களிடம், கனடா அன்பர்களிடம், கனிவு, பணிவு, உள்ள நெகிழ்வு இருக்கிறது. இந்த உலகத்தில் இது போல் எங்கும் கிடையாது. ஆனால் சாதனை பண்ணுகிறார்கள். இந்த அமைதி, திருப்தி, ஆனந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், அகண்டானந்தம் இதை அனுபவிக்கக்கூடியது யாரும் இல்லவே இல்லை. சூட்சும சக்தியை நாமும் கண்டிப்பாக அனுபவிக்க முடியும். மனம் அறிவோடு கலந்தால் எல்லோரும் பெறமுடியும்.

***சீடர்:*** சூட்சும சக்தி என்பது சூட்சும சொரூபம் என்று சொல்கிறீர்கள் அல்லவா?

**குருதேவர்:** ஆம். ஒன்று ஒலி வடிவம் மற்றொன்று ஒளி வடிவம் ஒருவர் பேசுவது நமக்கு அனுகூலமாக அசரீரியாக கிடைக்கக்கூடிய வார்த்தை ஒலி வடிவம். அது வந்து

பெரும்பாலும் எல்லாருக்குமே அனுகூலமாக இருக்கும். நாம் நினைப்பதற்கு தகுந்தாற்போல் அந்த வார்த்தை வரும். இந்த காரியம் செய்யலாம், இங்கு போகலாம், வரலாம் என்கிற மாதிரி ஒரு தெளிவு உண்டாகும். சூட்சுமமாகவே அந்த ஒலி நம்மை பண்படுத்தும் வேண்டாம் போகாதே, செய்யாதே என்று தடுக்கும். ஒளி என்பது அதீதமானது. மனம் இருக்கப்பட்டவர்களுக்கு அது கண்டிப்பாக சாத்தியம் ஆகாது. இங்கு இருக்கப்பட்டவர்களுக்கு மனம் அழியக்கூடிய நிலை பெரும்பாலும் வந்தாச்சு. நம்பிக்கையுடன் நம்பியிருப்பவர்வளுக்குத்தான் சொல்கிறான் இவன். அதனால் இவர்களை தரிசனம் பண்ணுவதற்காக அந்த மஹாத்மாக்கள் வந்து தங்கியிருக்கத்தான் செய்கிறார்கள். ஆங்காங்கே மரத்தடியிலும், மறைவிடமான இடங்களிலும் உட்கார்ந்து விடுகிறார்கள்.

குடும்பம் தொழில் என்று எவ்வளவு இருந்தாலும் கூட, அதில் நாட்டம் அதிகமில்லாதபடி நாம் வந்த காரியத்தை முடிக்க வேண்டும் என்கிற தீவிரத்துடன் இருக்கிறார்கள் கனடா நாட்டு அன்பர்கள். இங்குள்ள அன்பர்கள் கிடைத்தது போதும் என்ற திருப்தியோடு இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி முகஸ்துதிக்காக பேச முடியாது; அந்த அளவிற்கு ஸ்திரத்தன்மையோடு இருக்கிறார்கள். கனடா நாட்டு குழந்தைகள் போன்று மற்ற வெளிநாட்டில் இருக்கப்பட்ட அன்பர்களும் பெரும்பாலும் ஸ்வய ஞானானுபவம் படிக்கும் தன்மையினால் குடும்பத்திலோ, தொழிலிலோ எந்த பிடிப்பும் அற்று மிகவும் சிரத்தையோடும், வைராக்கியத்தோடும் அனுபவிக்கிறார்கள். எனவே இவர்களை (கனடா) சொல்லும் போது அவர்களும்

இவர்களைப்போல்தான். எனவே அவர்களைப் பற்றி தனியாக சொல்லவில்லையே என்ற எண்ணம் தேவையில்லை. எந்த அன்பர்களானாலும் சரி எந்த நாட்டில் உள்ளவர்கள் ஆனாலும் சரி சிரத்தை இருக்கப்பட்டவர்களுக்கு இங்கு இடம் உண்டு.

ஏதாவது கேள்வி இருக்கா?

கண்ணால் காணக்கூடிய எந்த வஸ்துவானாலும் சரி எந்த ஜீவர்கள் ஆனாலும் சரி, ஒரு பெயர் ஒரு உருவம் சம்பந்தப்பட்டதே. எதுவானாலும் ஒரு நாமா உண்டு, அதற்கொரு வடிவம் உண்டு. நாமரூப சம்பந்த பட்ட எந்த வஸ்துவானாலும் சரி எந்த ஜீவர்கள் ஆனாலும் சரி எல்லாமே அந்த பிரம்மத்திற்கு அன்னியம் இல்லை. ஆனால் பிரம்மத்தில் அந்த வஸ்துக்கள் இல்லை. பிரம்மம் இல்லாமல் அந்த வஸ்துக்கள் இல்லை, என்று முடிந்த முடிவோடு பார்த்தால்தான் மனமானது நாசம் ஆகும். நாமரூப சம்பந்தப்பட்டதோடு பொன்னோ, பொருளோ, தொழிலோ, குடும்பமோ எதுவானலும் சரி அது பிணைக்கப்பட்டால் புண்ணிய பாப சம்பந்தப்பட்டதால் பிறவிக்கு வித்தாகிப் போகிறது. அதை மட்டும் நாசம் பண்ணுங்கோ போதும். வேறு எதுவும் எந்த சாதனையும் பண்ணத் தேவையில்லை. எது வந்தாலும் சரி, எது நடந்தாலும் சரி, எது கிடைத்தாலும் சரி, எது கிடைக்காவிட்டாலும் சரி எல்லாம் நன்மைக்கே. இது மாயா காரியம், இது நமக்குத் தேவையில்லை, நாம் அந்த ஒன்றே என்ற திட உணர்வு இருந்தால் போதும்.


நாமரூப மயக்கம் இல்லாமல் இருந்தால் போதும். வருவதிலும், போவதிலும், நடப்பதிலும், கிடைப்பதிலும் இவை இல்லவே இல்லை வந்து இருந்து மாறி மறையக்கூடியது. நாம் என்றும் அழியாத

நித்திய ஸத்திய வஸ்துவே, நாமே அந்த பிரம்ம சொரூபம், நாமே ஆத்ம சொரூபம் என்ற ஒரு திட உணர்வுடன் இருந்தால் போதும். சூட்சுமங்களை லேசாக புரிந்துகொள்ளலாம். காணவும் முடியும், பேசவும் முடியும், அனுபவிக்கவும் முடியும். சூட்சுமம் என்பது அறிவு சம்பந்தப்பட்டது. தூலம் என்பது மனோ சம்பந்தப்பட்டது. மனம் சம்பந்தப்பட்ட நாமரூபத்தை கெடுப்பதனால் அறிவு சம்பந்தப்பட்ட சூட்சுமத்தை அவசியம் உணரமுடியும். எல்லா மஹாத்மாக்களையும் தரிசிக்க முடியும். இவன் தான் பார்க்கிறான் என்பது இல்லை. எல்லா அன்பர்களும் பார்க்க முடியும். பிரமாணமான உண்மை.

*நாராயணா!*







ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 30.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா

**குருதேவர்:** பாரம் இல்லை அம்மா. நீ சாவி கொடுத்தால் பூட்டை திறந்து விடுவோம்.

**அன்பர்:** இதய பூட்டைப் திறக்க வேண்டுமா?

**குருதேவர்:** சாவிதான் கொடுத்துவிட்டாளே அப்புறம் என்ன? பூட்டை பற்றிய கேள்வியே இல்லை, சாவி வந்தால் automatic ஆக பூட்டு திறந்துவிடும்.

மனோபாரமோ தூல சிரமமோ வேண்டாம் அம்மா. இவ்வளவு காலம் கஷ்டப்பட்டீர்கள் இனி வேண்டாம்.

பூட்டு என்பது உங்களுடைய உடம்பு, சாவி என்பது மனம். இந்த சாவிதான் அந்த பூட்டை பூட்டி வைத்து திக்குமுக்காடச் செய்து கொண்டிருந்தது. இந்த சாவியான மனதை எல்லாம் நீயே உன்னையல்லால் வேறு கதி இல்லை என்று அர்ப்பணம் பண்ணிவிட்டால் பூட்டு எம்முடைய கைவசம். அதை பற்றிய கவலை உனக்குத் தேவையில்லை.


அனேகர் சாவியை தொலைத்து விடுகிறார்கள். மனம் எங்கிருக்கிறது என்று தெரியமாட்டேன் என்கிறது. மனம் என்பது குருவினுடைய திருவடி என்கிற மாதிரி நம்பி விட்டாச்சுன்னா சாவி கொடுத்தாச்சு. அந்த நம்பிக்கை இல்லாதபடி நாமரூப ஜகத்திலேயே

இருந்தோம் என்றால் சாவியை தொலைச்சாச்சு, அதனால் பூட்டை திறக்க முடியாது. இந்த நாம ரூப ஜகம் நமக்குத் தேவையில்லை; எல்லாம் நீயே என சர்வார்ப்பணம் பண்ணி விட்ட தன்மையினால் சாவி கொடுத்தாச்சு. பூட்டைப் பற்றிய கவலை உங்களுக்குத் தேவையில்லை.

நன்மையும் தீமையும் எல்லாம் நீயே, எல்லாம் உன்னுடையதே என்று ஒப்படைத்ததற்கு அப்புறம் இன்ப துன்ப மயக்கம் இருக்கக்கூடாது. இன்ப துன்பம் உடம்புக்கு வந்ததே தவிர உங்களுக்கு இல்லவே இல்லை. அப்படி இன்ப துன்ப மயக்கம் வரும்போது சோர்வு, அயர்வு ஏற்பட்டாலும்கூட அதிகமாக அதில் நீடிக்கக்கூடாது. உடனே எல்லாம் நன்மைக்கே, எல்லாம் நன்மைக்கே, எல்லோரும் நல்லவர்களே. தீமையும் இல்லை தீயவர்களும் இல்லை என்கிற உறுதி ஏற்பட்டுவிட்டால் அதுவே சாதனையின் முதிர்வு.

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 31.07.2015 காலை குருபூர்ணிமா ஸத்ஸங்கம் கனடா

**குருதேவர்:** பக்திக்கோ, முக்திக்கோ சாதனை செய்யப்பட்ட அன்பர்களுக்கு இது முக்கியமான தினம் ஆகும். இது குருபூர்ணிமா, குரு பௌர்ணமி, வியாச பூஜை என மூன்றுவிதமாக சொல்லுவார்கள். பக்தீக்கோ, பதமுக்திக்கோ, முக்திக்கோ, ஜீவன் முக்திக்கோ சாதனை செய்யப்பட்ட அன்பர்கள் அவரவர் குருதேவருக்கு பூஜை செய்ய வேண்டும் என்பது மாதிரி சாஸ்திரம், வேத சம்பிரதாயம்.

இன்றைய தினத்தில் ஆரத்தி, அபிஷேகம், ஆராதனை, நிவேதனம் இப்படிபட்ட உபச்சாரங்களால் செய்து கொண்டாடப்படுவது உபச்சார பக்தி. அதாவது பெரியவர்களுக்கு செய்யக்கூடிய அந்தஸ்து, மதிப்பு, மரியாதை, கௌரவம் என்று சொல்லக்கூடியது அந்த பூஜை. அந்த பூஜை ஆரம்பத்திலிருந்து கண்டிப்பாகத் தேவை. சில காலம் பக்குவப்பட்டு மாணவனானவன் மேல்நோக்கிச் செல்லும்போது அந்த பூஜைகளை படிப்படியாக, படிப்படியாக, படிப்படியாக குறைத்து அவர் என்ன சொல்லுகின்றாரோ அதை சிரத்தையோடு ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க வேண்டும், நடப்போம், நடந்து விடுவோம், கண்டிப்பாக நடக்கமுடியும் என்ற திட உறுதி கொள்வதுதான் குருபூஜை.

வாக்கியார்த்த சிர்த்தையினாலும் முக்தி அடைய முடியும். சேவை செய்வதினாலேயும் முக்தி அடைய முடியும். சேவை செய்து வினைகளை நாசம் செய்தால் மனம் காலக்கிரமத்தில் அழிந்துவிடும். அங்கு ஜீவன்முக்தி உண்டு. வாக்கிய சிரத்தையோடு செய்தால் மனம் நாசமாகும். அங்கும் ஜீவன்முக்தி அடையும். இந்த இரு நிலைகளில்தான் பெரும்பாலும் முக்தி அடைய முடியுமே தவிர மற்ற வேத, வேதாந்த பாடங்களை படித்துக் கொண்டிருப்பதனால் கண்டிப்பாக முக்தி கிடைக்காது. இந்த நிலையில் காணும்போது நம் கனடா நாட்டு அன்பர்கள் பெரும்பாலும் சேவையிலும், வாக்கிய சிரத்தையிலும் முதன்மை பெறுகிறார்கள்.

கனடாவை மட்டும் குறிப்படுவதால் மற்றவர்களை குறிப்படவில்லை என்று நினைக்க வேண்டாம். வாக்கியார்த்த சிரத்தை, சேவையின் சிரத்தை எங்கு, எங்கு இருக்கிறதோ அத்தனை பேரும் இங்குள்ளவர்கள்தான் வேறு இடம் கிடையாது. சேவை முதலிடம் பெறுகிறது, வாக்கியார்த்த சிரத்தை அதை ஒத்து அநுகூலமாக இருக்கிறது. இவை இரண்டுமே நிறைந்து இருக்கப்பட்ட இடம் இந்த கனடாவில் இருக்கும் பத்ரி வன ஸத்குரு குடில் என்று சொல்லக்கூடிய ஒரு புனிதமான பூமியாகும். இந்த சேவையையும், இந்த வாக்கியார்த்த சிரத்தையையும் இங்கு நடக்கப்பட்ட ஸத் காரியங்களையும் கண்டும், கேட்டும், அனுபவித்தும் ஹிமாலயாவில் உள்ள ஆயிரக்கணக்கான மெய்யன்பர்கள் இங்கிருக்கிறார்கள். அவர்கள் எங்கும் வியாபகமாய் சூட்சும சரீரத்தோடு இருக்கிறார்கள். உங்களால் கண்களால் காண முடியாவிட்டாலும் அவர்கள் உங்களை பார்ப்பது

சிரேஷ்டம். அந்த தரிசனம் கிடைத்த தன்மையினால் அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ, தெரியாமலோ செய்த குற்றங்கள் கண்டிப்பாக குருபூர்ணிமா தினத்தன்று பஸ்பமாகிவிடும் என்பது ஸத்திய பிரமாணமான உண்மை.

இத்தகைய சிறப்பான வழிபாடும், வரவேற்பு எல்லாம் உங்கள் ஸத்குருவுக்கும், உங்கள் பரகுருவுக்குமே ஆகும். இந்த பைத்தியத்திற்கு இது பொருந்தாது. இது என்றென்றும் உங்கள் திருவடியில் ஒட்டியிருக்கப்பட்ட தூஸியே. இது பிரமாணமான உண்மை.

*(ஆரத்தி எடுக்கப்படுகிறது.)*

*ஏ பிரபு! தயா சாகரா! தயாநிதி!*

*எல்லாம் நீ!எல்லாம் நீ!! எல்லாம் நீ!!!*

*பிரார்த்தனையும், மங்கள ஆரத்தியும்.*

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## 31.07.2015 காலை ஸத்ஸங்கம் 2 கனடா

**குருதேவர்:** கோபர்கள் தினம் வனம் போவார்கள். மாடு, கன்று எல்லாமே வரும். அவைகளும் அதன் உணவை சாப்பிடும்; இவர்களும் மரத்தின் மேல், மரத்தின் கீழ் அமர்ந்து சாப்பிடுவர். வீட்டில் சாப்பிடுவதைவிட இங்கு அதிகமாக செல்லும். ஏனென்றால் இயற்கையை அனுபவித்துக் கொண்டே சாப்பிடுகிறார்களே. இவர்களுடனே பகவான் எப்போதும் கூடவே இருக்கிறான். அதனால் உணவானது அவ்வளவு திருப்திகரமாக இருக்கும். தினசரி எல்லோருக்குமே சாப்பாட்டை இங்கு கொண்டுவந்தால் பரவாயில்லைதான். வெயில் அடிக்கிறது அருகில் வாருங்கள் பிளீஸ்.

இங்குள்ள மரங்கள் ஓஹோ என்று உயரமாக வளர்ந்துவிடுகின்றன. படரமாட்டேங்கிறது. நம் நாட்டில் படர்ந்து விரிந்து வளருகிறது. சூரிய ஒளி கிடைக்காததாலா?

**சீடர்:** ஒரு மாதமாக சுத்தம் செய்தார்களாம் குருதேவா. எவ்வளவு சுள்ளி பொறுக்கி போட்டிருக்கிறார்கள் பாருங்கள். இந்த இடம் மட்டும் கிளீன் பண்ணியிருக்கிறார்கள். இன்னும் தூரமாக இருக்கிறது இன்னும் நாம் அங்கு செல்லவில்லை. இந்த விழா பண்ணுவதற்காக சுத்தம் செய்திருக்கிறார்கள்.

**குருதேவர்:** அரும் பாடுபட்டிருக்கிறார்கள்.

**கார்க்கி மா:** குருதேவர் உட்கார்ந்திருப்பதற்கு பின்னால் இயற்கையாக ஓர் ஓடை போகிறது.

**குருதேவர்:** எப்போதும் தண்ணீர் போகுமா?

**ஜனகா:** கோடைகாலத்தில் சிறிய அளவில் தண்ணீர் போகும்.

**கார்க்கி மா:** பரகுரு இங்கு காத்திருந்து பனி காலத்தில் எப்படி உறைகிறது என்று பார்த்துவிட்டு போகலாமே.

**குருதேவர்:** பனிகாலத்தில் ஒருவாரம் வந்துவிட்டு போகலாம்.

**சீடர் 1:** அடுத்த ஏப்ரல் வரைக்கும் விசா இருக்கிறது குருதேவா.

**குருதேவர்:** தண்ணீர் எடுத்துவர சென்றுள்ளனரா?

**சீடர்:** ஒரு பார்ட் சாப்பாடு வந்துவிட்டது. இன்னொரு பார்ட் வரவேண்டும். இன்னொரு வண்டி வந்தால்தான் எல்லாம் எடுத்துவர முடியும். சாப்பாடு சீக்கிரமாக வந்தால் சாப்பிட்டுவிட்டு சீக்கிரம் போய்விடுவோம் என்று மஹான்கள் சாப்பாடு வருவதை காலதாமதம் செய்கின்றனர்.

**குருதேவர்:** அவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார்கள்.

**சீடர் 1:** போன வருடம் 2014 ஆகஸ்டில் ஸத்ஸங்கத்தில் சொல்லியிருந்தீர்கள். சிறிய மாற்றம்தான் ஏமாற்றம் இல்லை என்று சொல்லியிருந்தீர்கள். அது ரத்து ஆகவில்லை ஆனால் ஒத்திபோடப்பட்டது.

**குருதேவர்:** போன வருடம் இரண்டு ஆப்ரேஷன் நடந்து நடக்க சக்தியில்லாமல் இருந்தது. இந்த வருடம் எல்லாமே அவனுடைய கிருபையால் சிறப்பாக நடக்கிறது. இந்த வயதில் ஒரு ஆப்ரேஷன் பண்ணுவதே கடினம். ஆனால் இரண்டு ஆப்ரேஷன் நடந்தது.

**சீடர்:** *சௌல் சொல்கிறார் டிசம்பரிலிருந்து ஏப்ரல் வரை ஐஸ் பார்ம் ஆகுமாம். இருந்து பார்த்துவிட்டு செல்லலாம் என்கிறார்.*

**குருதேவர்:** *அவ்வளவு நாட்கள் இருந்தால் அங்கிருப்பவர்கள் சும்மா இருப்பார்களா? எல்லாம் இங்கு வந்துவிடுவார்கள். எங்கு தங்க வைப்பீர்கள், எப்படி சாப்பாடு கொடுப்பீர்கள், எப்படி சமாளிப்பீர்கள்? பரமாத்மா, பரமாத்மாதான் அவன் எங்கும் நிறைந்திருக்கப்பட்டவன்தான்.*

**அன்பர்:** *ஓம் ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் ஓம். உங்கள் புனித தாமரை திருவடிகளுக்கு நமஸ்காரங்கள். அன்பான பரகுரு! முதல் தரம் 2009 இல் அன்பின் குடிலில் நுழையும்போது கோபி மா சொன்ன வார்த்தைகளை மறுபடியும் நாங்கள் திரும்ப சொல்கிறோம். இந்த வாழ்க்கை முழுவதும் இந்த ஒரு க்ஷணத்திற்காகவே காத்துக்கொண்டு இருந்தோம். இந்த வார்த்தைகள் இந்த குழந்தையின் அனுபவத்தை முழுமையாக சொல்கிறது. ஆழ்ந்த ஏக்கத்துடனும், மிருதுவான இதயத்துடனும், கண்ணீர் பெருக்கத்துடனும், முழுமையான நன்றியுடனும் பணிவான உங்கள் குழந்தை கார்க்கி.*



**குருதேவர்:** *ஓ! இங்குள்ள வாத்தா! இதற்கு முன்னாடி இருந்த அன்பர்கள் எல்லாம் எந்தெந்த நாட்டிலோ, எந்தெந்த தேசங்களிலோ பலன் கருதாத கர்மாவை பண்ணி,*

தர்மத்தைச் சேர்த்து முழுமையாக அனுபவிக்கும் நிமித்தமாக ஒரு இடம் தேடினார்கள். அப்படி தேடிய ஒட்டு மொத்த அன்பர்களும் கனடாவில் சேர்ந்தனர். அங்கங்கே ஒரு இடத்தில் அல்லது பிழைப்பிற்காக வந்தது போல ஒரு பாவனையைக் காட்டி எல்லோரும் இங்கு வந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததோடு அல்லாமல் தர்மமாக மாறிய தன்மையினால் எல்லோருக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அது பரகருணை. அந்த பரகருணையினால் அன்பின் குடில் என்று ஒன்று இருக்கிறது என்ற மெய்யுணர்வைப் பெற்று எல்லோரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அது அங்கிருக்கப்பட்ட பைத்தியம் செய்த பெரிய பாக்கியம்.

வழிமேல் விழி வைத்திருக்கிறோம் என்ற மாதிரி உங்கள் வரவுக்காக காத்திருந்தது அந்த பைத்தியம். இவர்களும் இறை கருணையினாலும், இவர்களுடைய சாதனையினாலும், பரகருணையின் ஏற்பாட்டினாலும் அன்பின் குடிலுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு இரண்டும் சங்கமம் ஆகின. அதாவது சமுத்திரமும், நதியும் சங்கமம் ஆவது போல. சமுத்திரம் அன்பின் குடில். நதி கனடா அன்பர்கள். பல கிளை நதிகளாக வந்தாலும் ஒரே சமுத்திரத்தில் சங்கமம் ஆகிவிட்டார்கள். இனிமேல் இவர்களுக்கு வினையும் இல்லை, பிறப்பும் இல்லை, வேறு எந்த சாதனையும் இல்லை.

அகண்டானந்தமாக இருக்கக்கூடிய அந்த இடம் சேர்ந்த உடன் எதற்காக இந்த தோற்றம் எடுத்தீர்களோ அந்த தோற்றம் திரும்ப எடுக்க முடியாது. வந்தவர்களில் இரண்டு பெரிய மஹாத்மாக்கள் உண்டு. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தவர்கள்.

*சூட்சுமமாக இருக்கிறார்கள் ஒருவர் சொல்கிறார் பிரேயர் வேண்டாம். குருபூஜை செய்து முடிந்துவிட்டது வேண்டாம் என்று வாய் எடுப்பதற்குள் இன்னொரு மஹாத்மா சொன்னார் உங்கள் அன்பர்களை எல்லாம் வைத்து தினசரி அங்கு செய்கிறாய். அது அங்குள்ள எல்லோருக்கும் கேட்கும். இப்போது கொடுக்கப்போவது பர ஒலி. இங்கு சுற்றியுள்ள மரம், செடி, கொடி எல்லாவற்றிற்குமே ஒலிக்கும். எல்லோரும் இந்த ஆசீர்வாதத்தை பெறுவார்கள். இன்னொரு ஜென்மா எடுத்து பத முக்தியோ, பரமுக்தியோ பெற ஏதுவாக இருக்கும். அதனால் பண்ணு என்றார் அவர். இது அவர்கள் நிமித்தமாக பண்ணுகிறது. பறவைகள், புழுக்கள், பூச்சிகள் மற்றும் என்னென்ன நடமாடுகிறதோ அவைகளுக்காகவும் பண்ணிய பிரேயர் இது.*

***சீடர்1:*** *அந்த இரண்டு மஹாத்மாக்களும் இங்கு இருக்கிறார்களா? ஒரு லட்சம் வருடங்களுக்கு மேலாக.*

**குருதேவர்:** *ஒரு லட்சம் வருடங்களுக்கு மேலாக. பர ஒலியாக பண்ணப்பட்டது இப்போது உள்ள பிரேயர். இங்கு இருக்கும் வரைக்கும் சிறிய குழந்தையாக இருப்பான் அப்புறம் வளர்ந்து பெரியவன் ஆகிவிடுவான். என்னது இது?*

***அன்பர்:*** *இது புளுபெரி. இது ஸ்டாபெரி.*

***சீடர்:*** *நடுவில் கொட்டை இருக்கும். இது கிரீம் ஸ்வாமிஜீ. சிறிய தம்ளரில் வைத்திருக்கிறார்கள். ஸ்பூன் வைக்கவில்லை. ஜெஷ்டு கிவ் தட் ஸ்பூன்.*

**குருதேவர்:** *(விரல்களால் எடுத்து) இதுதான் ஸ்பூன். ஒரு விரல் டீஸ்பூன், மூன்று விரல்கள் சேர்ந்தால் டேபிள் ஸ்பூன். டீஸ்பூன் போதும். எல்லோரும் சாப்பிடுங்கள்.*

***சீடர் 1:*** குருதேவர் பயன்படுத்திய பேண்ட், சர்ட் கொடுப்பார். அதை பத்திரமாக வைத்துக்கொள்ளவும். (அன்பர்கள் பெயர்கள் வாசிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது)

**குருதேவர்:** இதை பெற்றவர்கள் மட்டும்தான் உபயோகப் படுத்த வேண்டும். வேறு யாரும் பயன்படுத்தக் கூடாது. சீக்கிரம் கிளம்ப சொல்லுங்கள் மழை வர காத்திருக்கிறது.

*நாராயணா!*





ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *31.07.2015 மாலை ஸத்ஸங்கம் கனடா*

**அன்பர்:** *உங்கள் புனித தாமரை பொற்பாதங்களுக்கு நமஸ்காரங்கள். அன்பான குருதேவா! இந்த பிரார்த்தனையை உங்களுக்கு சமர்ப்பணம் பண்ணுகிறோம். இந்த குருபூர்ணிமா நன்னாளில் இதயபூர்வமாக நன்றி செலுத்துகிறோம். உங்கள் புகழைப்பாட மற்றொரு நாள் கிடைத்திருக்கிறது. எங்கள் மீது நீங்கள் செலுத்திய கருணைக்கு நாங்கள் மிகவும் நன்றி செலுத்துகிறோம். அன்புடனும், கிருபையுடனும் எங்களுக்கு நீங்கள் ஆசி வழங்கி இருக்கிறீர்கள். எல்லாம் நீ! குருதேவா! உங்கள் அன்பு குழந்தை புன்னகை அரசி.*

**குருதேவர்:** *ஆசி வழங்கப்பட்டது பர அம்சம். பர அம்ச ஸத்குரு என்றும் வைத்துக்கொள்ளலாம். அந்த ஆசி வழங்குவதற்கு காரணமாக இருக்கப்பட்டது உங்களுடைய பக்குவப்பட்ட உள்ளமும், ஸ்திரமான அறிவும்தான். பக்குவப்பட்ட உள்ளமும், ஸ்திரமான அறிவும் இல்லையானால் இந்த ஆசி கிடைக்குமா? பக்குவப்பட்ட உள்ளமும், ஸ்திரமான அறிவும் உங்களுடைய முழு நம்பிக்கையினால் கிடைத்தது. அதனால் உங்களுக்குத்தான் நன்றி செலுத்த வேண்டும். அந்தளவிற்கு நீங்கள் லௌகீகத்தை விட்டு, தொழிலை விட்டு, குடும்பத்தை விட்டு அவற்றையெல்லாம்*

*மறந்து இப்படி ஈடுபடுவது பெரிய காரியம் இந்த கலியுகத்தில். அப்படி ஏற்பட்ட தன்மையினால் ஸத்குருதான் நன்றி சொல்ல வேண்டும். மேலும், மேலும் அது பெருகுவதற்கு ஆசி வழங்குவார்.*

*குருவை சிலாக்கியத்து கூறுவது அவ்வளவு சிலாக்கியம் அல்ல. அந்த குரு வாக்கியத்தை நம்பிக்கையோடும், வைராக்கியத்தோடும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே. சீடன் என்ற பக்குவ ஆன்மாவினுடைய பெருமையைத்தான் ஸ்திரப்படுத்தி சிறப்பித்து சொல்லவேண்டும். ஏனென்றால் இந்த கலியுகத்தில் ஒன்றும் வேண்டாம் நீயே வேண்டும் என்று முழு நம்பிக்கையோடு இருப்பது பெரிய காரியம். இந்த அன்பர் யாரை எடுத்தாலும் ரொம்ப ஸ்திரமாக இருக்கிறார்கள். நல்ல அனுபவம்.*

*அந்த அம்மா படித்தாளே அது என்ன?*

***சீடர்:*** வேறு படித்தார். தேசிகன் தெரிவித்த திறப்படி...

**குருதேவர்:** *அந்த வேறையே பிராத்தனையாக ஏற்றுக்கொள்கிறாள். வேறு யாராவது கேட்க வேண்டுமா?*

**முமூட்சு:** *அன்பான பரகுருதேவா! கருணைக் கடலே, கிருபா சமுத்திரமே, அன்பின் சமுத்திரமே! உங்களுக்கு எங்கள் அனுபவத்தை விளக்குவதற்கு வார்த்தைகளே இல்லை. எங்கள் இதயத்தில் இருந்து வரும் அனுபவங்களை வார்த்தையால் விளக்க முடியாது. எங்கள் இதயத்தில் இருந்து வரும் உணர்வுகளை வார்த்தையால் விளக்க முடியாது. நன்றி, நன்றி மேலும் மேலும் நன்றி. இந்த அஸத்தான வாழ்க்கையில் எங்களுக்கு குருதேவரின் கிருபையும், அவரை சந்திக்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது. அவர் எங்கள் லட்சியத்தை நோக்கி வழிநடத்திச் செல்கின்றார் என்பது உண்மை. எல்லாம் நீ! எல்லாம் நீ! எல்லாம் நீ!*

**குருதேவர்:** *அனுபவம் என்பது சுவை. சுவையை விளக்க எவராலும் முடியாது. சுவையை சுவைத்தவன்தான் உணர முடியுமே தவிர சுவைக்கு விளக்கம் கொடுக்கவே முடியாது. அப்படி கொடுக்க வேண்டுமானால் மனம் இருந்தால்தான் கொடுக்க முடியும்; அது அவ்வளவு திருப்தி ஆகாது. புகழ் அஞ்சலியாகத்தான் இருக்கும். புகழ்ச்சியான வார்த்தையாகத்தான் இருக்கும். அந்த ஒன்றை கொண்டுவர முடியாது. சுவையை எப்படி கொண்டுவர முடியும்? எவன் சுவைக்கிறானோ அவன்தான் அதை உணர முடியும். மனம் இருப்பதனால் வெளி கொண்டு வருகிறார்கள். இன்னும் அதை முழுமையாக சுவைத்து ருசி பார்க்கவில்லை. பார்த்தாச்சு என்றால் வாய் பேசாது. வாய் பேசாது என்றால் கண்ணும் பார்க்காது, காதும் கேட்காது. அந்தளவிற்கு செயலற்றுப் போகும். அந்த நிலை என்று பெறுகிறார்களோ அதுதான் சுவையின் அனுபவத்தை முழுமையாக பெற்ற நிலை. அப்போது அவர்களுக்கு இருப்பும் இல்லை. இயக்கமும் இல்லை.*

*ஆப்பிளோ, மாம்பழமோ ஒரு பழம் அதை நேருக்கு நேர் காண்பது அறிவு சொரூபம் என்று சொல்லலாம். இது ஆப்பிள்தான், ஆரஞ்சுதான் என்று வாக்கிய விளக்கத்திற்காக சொல்லலாம். வடிவத்தையும் வர்ணிக்கலாம். அதன் கலரையும் வர்ணிக்கலாம். அதன் சுவை எப்படி இருக்கிறது என்று சுவைத்தவன்தான் அனுபவிக்கலாம். பார்த்தவன் சுவைக்கவும் முடியாது. சுவையைப்பற்றி விளக்கம் கொடுக்கவும் முடியாது. காரணம் பழத்தை சுவைத்தபின் அதை அவனும் பார்க்கமுடியாது, நீயும் பார்க்க முடியாது. இருவருமே பழத்தைப் பார்க்கமுடியாது. எவன் உண்டானோ அவனுக்குள்ளாகவே புஷ்டியாக, சக்தியாக, வீரியமாக,*

வைப்ரேஷனாக இருக்கும். அதையும் கண்ணால் காண முடியாது. ஸ்வய அனுபவத்தை சொல்லுவதாக இருந்தால் சாமான்யமாக முடியாது. அதாவது ஆனந்தமாக இருக்கிறது. ஒரே வார்த்தை. ஆனால் பேரானந்தத்தை சொல்ல முடியும். பிரம்மானந்தத்தை சொல்ல முடியாது. தாம் தாமாக இருந்து ஸ்வய அனுபவத்தை சொல்லுவதாக இருந்தால் வர்ணனையாகத்தான் இருக்குமே தவிர உண்மையில் அது பொருந்தாது.

ஞான அனுபவ வாக்கியமாக சொல்லும்போது குருதேவர் மாணவனுக்காக பகவானை காட்டுகிறார். அந்த மாணவனும் ஸ்ரீ பகவானைக் காண்கின்றான், பேசுகின்றான், ஆனந்தமாக ஒருவர்கொருவர் சம்பாஷணை பண்ணிக்கொள்கிறார்கள். குருதேவரும் பார்க்கின்றார். ஒரு குறிப்பட்ட நேரம் வந்ததும் அந்த சம்பாஷணை முடிந்தது. அந்த மாணவனும் மௌனமாக இருந்தான். பகவான் மறைந்துவிட்டான். இப்போது குருதேவர் கேட்கிறார் நீ பகவானை கண்டாயே, ஆனந்தித்தாயே, பேசினாயே அது எவ்வளவு சுவையாக இருந்தது? அந்த ஆனந்தத்தை கொஞ்சம் விளக்கு பார்க்கலாம் என்கிறார். அவன் சொல்லக்கூடிய பதில் ஒரே பதில்தான். உன்னுடைய கருணையினால் பகவான் வந்தான். உன்னுடைய கிருபையினால் பகவானுடன் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. பேசி அளவில்லாத ஆனந்தம் அடைந்தோம். ஆனால் வந்த பகவான் போய் விட்டான். இருக்கும் பகவான் என் முன்னே இருக்கிறான் என்று குருவைத்தான் சுட்டிக் காட்டுகிறான்.

நீ என்றைக்கும் ஸத்திய சொரூபம். நடமாடும் தெய்வம், பேசும் தெய்வம், எமக்கு எல்லாவகையிலும்

உபகாரம் பண்ணக்கூடிய தெய்வம் நீ. ஆனால் அவர் அப்படி அல்ல. நமக்குள் இருக்கிறான் வந்து ஆனந்தத்தை கொடுத்துவிட்டு மறைகிறான்; அவனை காணமுடியாதே என்று விளம்புகிறான் மாணவன். அப்போ நீயே ஸத்திய சொரூபன், எம்முடைய கேள்விக்காக விளக்கம் கொடுப்பதற்காக பகவானை தனியாக காட்டினாய், பேச வைத்தாய் இருவரும் அளவற்ற ஆனந்தம் அடைந்தோம். ஆனால் அந்த ஆனந்தம் நிலைக்கவில்லையே. உள்ளே ஒடுங்கி போச்சு. வெளியில் காணமுடியாதே. எப்படி சுவையை காணமுடியாதோ அப்படி அந்த ஆனந்தத்தையும் காணமுடியாது. ஆனால் ஆனந்தத்தை கொடுக்கப்பட்டவன் நீ. ஞானக்கண்ணால் பார்ப்பவன். நீ ஒரு ஸ்பீக்கராகத்தான் இருக்கட்டும், ஒரு கருவியாகத்தான் இருக்கட்டும், இந்த கண்ணைக் கொண்டு பார்க்க வேண்டுமே. அதனால்தான் ஸத்குரு திருமேனி காண்டல் என்று சொன்னான். முக்கியமானது. எனவே காட்டிக்கொடுக்கப்பட்ட குருவைத்தான் மிகைப்படுத்தி கூறுவானே தவிர, பகவானை மிகைப்படுத்தி கூறமாட்டான் அந்த மாணவன். அனுபவத்திற்கு வாக்கு வராது ஐயா.

***அன்பர்:*** உங்கள் புனித தாமரை பொற்பாதங்களுக்கு நமஸ்காரங்கள். அன்பான குருதேவா என்றும் வழிகாட்டியாக உள்ள ஒளி எங்களுக்கு நெருக்கமாகவும், அன்பாகவும் உணர முடிகிறது. மிகவும் அன்பு செலுத்தக்கூடிய ஸத்குருவாக இருக்கிறீர்கள். கேள்விகள் வரும்போது சந்தேகங்கள் எம்மை ஆட்படுத்துகின்றன. அப்படி கேள்விகளும், சந்தேகங்களும் வரும்போது அமைதியின்றி இருக்கிறோம். எங்களுடைய அன்பான நண்பனாகிய

உங்களுடன் அமைதியாக, ஆனந்தமாக எப்போதும் காதுகளில் மெதுவாக சில வார்த்தைகளை சொல்லுகிறீர்கள். அந்த வார்த்தைகள் எம்மை பண்படுத்துகிறது. வலியைப் போக்குகிறது. உங்களை நண்பனாக பாவனை பண்ணி உங்களிடம் தொடர்பு கொள்ள முடிகிறது. கேள்விகளை எல்லாம் இல்லாமல் போக்குகிறது. எங்கள் இதயத்தை சுத்தப்படுத்தி மாற்றுகிறது அல்லது குணப்படுத்துகிறது. மேலும் இது நம்பிக்கையை ஊட்டுகிறது. மேலும் சரணாகதி பண்ணுவதற்கும், நம்பிக்கைக்கும் அந்த வார்த்தைகள் உதவுகின்றன. மிகவும் இருள் படர்ந்த நேரங்களில் சில வார்த்தைகளை மிருதுவான, இதமான, அமிர்தம் போன்று சொல்லுகிறீர்கள். அப்படி சொல்லும்போது அதீதமான விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. அப்போது உங்கள் கரங்களில் இருப்பது போன்று உணர்கிறோம். உங்களுடைய அன்பாலும், கருணையாலும் தழுவிக்கொள்ளுவது போல அரவணைப்பு பெறுவதுபோல் உணர்கிறோம். மேலும், மேலும் அந்த அரவணைப்பும், அன்பும் எங்களுக்கு கிடைக்கிறது. இந்த வைரம் போன்ற இதயம் ஒளிர்கிறது. இதயமானது அந்த அன்பான பரகுருவுக்கு ஒளி கூட்டுகிறது. யாம் உங்களுக்கு தலை வணங்குகின்றோம் - காமதேனு.

**குருதேவர்:** இந்த ஒரு குழந்தை மாத்திரம் கொடுக்கப்பட்ட உதாரணம் ரொம்ப அதீதமானது. இது வரை பாரதபூமியிலும், இங்கும் இருக்கும் குழந்தைகளும் இந்த அதீதமான வார்த்தையை யாரும் பிரயோகிக்கவில்லை. குரு என்பது ஒலி, ஒளி என்ற தன்மையினால் அதை அதிகமாக புகழத்தேவை இல்லை. காணமுடியாத ஒன்று. ஆனால் அறிவுக்

கண்ணால் காணமுடியும். கேட்க முடியாத ஒன்று ஆனால் இறை ஒலியாக கேட்க முடியும். அது இரண்டிற்கும் அதீதமானது இவள் சொல்லக்கூடிய வார்த்தை. நண்பன் என்ற வார்த்தையை போடுகிறாள். நண்பனுக்கு மிஞ்சிய ஒரு பிணைப்பு வேறு எதையுமே சொல்லமுடியாது.

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு.

அப்படி என்று சொன்னான் வள்ளுவன். இருவரும் போய்க்கொண்டு இருக்கிறோம். வேஷ்டியோ, பேன்டோ அவிழ்ந்து விடுகிறது. இரண்டு செகண்டு கழித்தால் கீழே விழுந்துவிடும், மானம் போய்விடும். ரோட்டில் போகிறவர்கள் எல்லாம் சிரிப்பார்கள், கைத்தட்டுவார்கள், பைத்தியம் என்பார்கள். கையில் குடை வைத்திருந்தாலும், பை வைத்திருந்தாலும் விட்டுவிட்டு வேஷ்டியை பற்றி பிடிக்கும். பிடித்தபின்தான் மற்ற காரியங்களைப் பார்க்கும். ஒரு நண்பன் அப்படித்தான் இருப்பான். உயிர் காப்பவன்தான் நண்பனே தவிர பேசுபவன் நண்பன் ஆகமாட்டான். அந்த நட்பிற்கு அவ்வளவு விளக்கம் கொடுப்பார்கள் பெரியவர்கள்.

அந்த நட்பை பெற்றுவிட்டோமானால் குரு ஸ்தானத்தை அவசியம் பெற முடியும். குரு அதீதமானது. இந்த நட்பை முதலில் பார்க்க வேண்டும். ஒரு நண்பனால்தான் முடியும். அந்த வஸ்திரத்தை சடாலென்று பிடித்து வேறு காரியம் பார்ப்பான். இல்லாவிட்டால் மானம் போய்விடும். நண்பனானவன் அப்படி கூடவே இருந்துகொண்டு உதவுவானாம். தன்னுடையது போனாலும்

பரவாயில்லை தன் நண்பனுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்று ஸ்திரத் தன்மையோடு இருப்பானாம். இந்த நண்பன் என்பதை வேறு எங்கும் சொல்லவில்லை)ல. அநேக இடங்களில் சொல்லியிருக்கும். ஆனால் இந்தளவிற்கு ப்ரஸ் பண்ணி சொல்லவில்லை. தற்போது இந்த குழந்தையின் வாயில் இருந்து வந்ததினினால் சொல்லியது. முக்கியமானது. இதில் கூட சகாவும் என்று வார்த்தை வரும். சகா என்று சொல்லக்கூடியது நண்பன். மிகவும் முக்கியமானது அந்த குழந்தை நன்றாக அனுபவிக்கிறது.

பெண்களும்தான் இருக்கிறார்கள். காற்று அடித்து சேலை தன்படி விலகுகிறது, என்னதான் பேசிக்கொண்டு இருந்தாலும் கைகள் உடனே சேலையைப் பற்றுகிறதே. அந்த மானத்தை மறைக்க வேண்டும் என்று எவ்வளவு திட உறுதியோடு இருக்கிறார்களே, அவர்கள் சொல்லாமலே காரியத்தைச் பார்க்கிறது கை. அந்த கையைப்போல உதவக் கூடியவன் நண்பன். கைக்கு யாரும் ஆணை யிடுவதில்லை.

**சீடர்:** எப்போழுதெல்லாம் காமதேனு கடிதம் எழுதினாலும் குருதேவரை வாழ்த்தி எழுதுவார்.

**குருதேவர்:** வாழ்த்தக்கூடிய உணர்வு உள்ளது. ஒண்டர்புள் காமதேனு.

*நாராயணா!*



ஸத்தியம் பேசு.
(ஸத்திய வாக்கை) தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

## *31.07.2015 இரவு ஸத்ஸங்கம் கனடா*

**குருதேவர்:** *நாரதர் தாம்புரா மீட்டிக்கொண்டு எந்த வினாடியும் நாராயணா, நாராயணா, நாராயணா ராகம் போட்டு பகவான் நாமாவை சொல்லவும் தெரியும். ராகம், தாளம், பல்லவி முறையோடு சுதி கூட்டி பாடவும் தெரியும். மற்ற வேலைகளில் நாராயணா நாராயணா நாராயணா என்று சொல்வார். இதை கதைக்காகத்தான் சொல்கிறோம். அவருக்கு கர்வம் இல்லை. அவருக்கு கர்வம் ஏற்பட்டதாம் (கதைக்காக). எந்த வினாடியும் பகவான் நாமாவை ஸ்மரிப்பவன் யாம் ஒருவன் தான் வேறு யாரும் இப்படி இடையராது ஸ்மரிக்கக் கூடியவன் கிடையாது. பஜனை பாடினாலும் நம்மைபோல் உருக்கமாக பகவான் நாமாவை பாடக்கூடியவர் யாரும் கிடையாது என்கிறது போல் ஓர் எண்ணம் ஏற்பட்டதாம்.*

*தெய்வாதீனமாக ஆஞ்சனேயரை பார்க்கிறார். அவருக்கு ராம் ராம் என்பது தவிர வேறு எதுவும் தெரியாது. எந்த நாமாவும் வாயில் வராது. ராம் ராம் ராம் ஸ்ரீராம் அல்லது ஹரேராம், எல்லாவற்றிலும் ராம நாமாதான் இருக்குமே தவிர வேறு எதுவும் இருக்காது. நாரதரிடமே கேட்கிறார்கள். பூலோகத்தில் ஆஞ்சனேயர் என்பவர் இருக்கிறாராமே. அவருக்கு*

மிஞ்சி யாரும் பாட முடியாது, என்று சொல்லும் போது, நம்மைவிட சிறந்த பக்தனா பார்த்துவிடுவோம் என்று பார்க்க வந்தார். பார்க்க வந்த இடத்தில் இவர்கள் இரண்டு பேருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது. ஆனால் ஆஞ்சனேயர் எதையுமே வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இறைவனை பாடத் தெரியாது. தாம்புரா வாசிக்கத் தெரியாது மற்றும் வீணையோ மற்ற இசைக்கருவிகளோ வாசித்து பழக்கம் இல்லை. சிப்பளா கட்டை மட்டும் கையில் இருக்கும், அதில் தாளம் போட்டுக்கொண்டே பாடிக்கொண்டிருப்போம். மற்றபடி இறைசெயல் எல்லாம் எமக்கு வராது என்கிறார்.

இருக்கப்பட்ட சில பக்தாள் எல்லாம் சொல்லி, நீங்கள் அவசியம் நாரதருடன் போட்டி போட வேண்டும் என்று சொல்லும் போது நாரதருக்கு ஒரு வேகம் உண்டாகிவிடுகிறது. ஆஞ்சனேயர் எம்மைவிட அதிகம் பாட முடியாது, நாங்கள் இரண்டு பேரும் போட்டி போட்டு பாடுகிறோம் யாருடைய பாட்டு வந்து எல்லோருடைய உள்ளத்தை மகிழ வைக்கிறதோ, எல்லோருக்கும் எது திருப்தியாக இருக்கிறதோ அவர்களே நடுவர்களாக இருந்து சொல்லட்டும் என்று சொல்லி மேடை அமைத்து உட்கார்ந்து பாட ஆரம்பிக்கிறார்கள். ஆஞ்சனேயர் யாம் போட்டிக்காக வரவில்லை என்று சொல்லிப் பார்த்தார். விட முடியாது என்கிறது போல் நிர்பந்தத்தை உண்டு பண்ணி போட்டியை ஆரம்பித்து வைத்துவிட்டார்கள். நாரதர் முதலில் பாடுகிறார். பாடிக் கொண்டிருக்கும்போதே விலங்கினங்கள் எல்லாம் நின்று தன்னை மறந்து கேட்கின்றன. பறவைகளும் கேட்கின்றன பாஷை

தெரியாத மர இனங்களும் மெய்மறந்து கேட்கின்றன. ஈ எறும்பு முதற்கொண்டு அவர் பாடலுக்கு ஆட ஆரம்பிக்கிறது. அப்பொழுது எல்லோருமே ஆச்சரியப்படுகிறார்கள் மனிதர்கள் தான் தலை அசைத்து பார்த்திருக்கிறோமே தவிர ஈ எறும்பு முதற்கொண்டு யானை மற்ற மிருகங்கள், பறவைகள் எல்லாமே தலையை அசைத்து கண்ணீர் விட்டு உருகுதே இதைப்போல் இந்த உலகத்தில் யாரும் பாடினது இல்லையே என்கின்றது போல் எல்லோரும் புகழ்கிறார்கள்.

பிறகு ஆஞ்சனேயா நீ பாடு என்கிறார்கள். அப்ப ஆஞ்சனேயர் என்ன பாட போகிறார் ராம் ராம் என்று சொல்வார் என்று ஒருவிதமான வரட்சி உண்டாகிப்போனதாம் நாரதருக்கு. அவரும் ராம் ராம் என்று தான் சொல்வார் இந்த இரண்டு அடியைத் தவிர வேறு எதுவும் தெரியாது. சிப்லா கட்டையை எடுத்தார் உருகி பாட ஆரம்பத்தார். நாரதர் அவர் பாடட்டுமே கேட்போம் என்று தன்னுடைய வீணையை (தம்பூரா) முன்னால் அதன் பீடத்தில் வைத்து விட்டு கைகளை கட்டிக்கொண்டு கேட்டு ரசிக்கிறார். எல்லோரும் தலையை ஆட்டி ஆனந்தமாக ரசித்தார்கள். நாரதருக்கு ஒன்றும் ஓடவில்லை. அவரை அறியாமலே கண்களில் கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது.

இவ்வளவு உருக்கமாக பாடுகிறானே இவன்தான் உண்மையான பக்தன் என்று எண்ணும்போதே இவருக்காவது உயிருள்ளவைகள்தான் தலையை ஆட்டியது. ஆஞ்சனேயர் பாடிய பாட்டிற்கு மண், மலை, கல் எல்லாம் உருகுகிறது. உருகி ஜலப்பிரவாகமாக ஓட ஆரம்பித்தது. இவருக்கு வைத்திருந்த ஆசனமும் உருகிப்போச்சு; அதில்

வீணையும் போகிறது. உடனே பாதத்தில் விழுந்து நமஸ்காரம் பண்ணி என்னை மன்னித்துவிடு ஆஞ்சனேயா என்று சொன்னார். அவருடைய வீணையை காணோம்; அது எங்கேயோ போய்விட்டது. அதை தேடி கண்டுபிடித்து கொண்டு வருவதற்கு இவர் பாட்டை நிப்பாட்டினால்தான் முடியும். இவரும் பாட்டை நிப்பாட்டினார் எல்லாம் அப்படி அப்படியே பனிக்கட்டிபோல் உறைந்து விட்டது. அந்த உறைந்து போனதற்குள் வீணையும் மாட்டிக்கொண்டது. எடுக்க முடியவில்லை. நாரதருக்கு தர்ம சங்கடமாக போய்விட்டது. ஏன் இவரை பாட கூப்பிட்டோம் வீணையும் இப்படி போய்விட்டதே, ஆஞ்சனேயா ஏறக்கட்டுவோம் யாம் ஏற்றுக் கொள்கிறோம் என்கிறார் நாரதர். அப்பொழுது ஆஞ்சனேயர் ராம நாமாவைதான் பாடினார் வேறு ஒன்றும் பாடவே இல்லை.

ராம நாமாவிற்கு அவ்வளவு பெருமை, அந்த ஒன்றை பாடினால் போதும் எல்லா மூர்த்திகளையும் நினைத்தது போல் ஆகும். எல்லா பாடல்களுக்கும் இசைகூட்டி அமைத்தது போல் ஆகும். அதற்கு மிஞ்சிய பாடலோ உருக்கமான ஒரு வார்த்தையோ இல்லவே இல்லை. ராம நாமா அவ்வளவு சிறந்தது என்பது மஹான்களின் மூலமாக கேள்விப்படுகிறோம்.

ராம நாமத்தில் பெரும்பாலும் எல்லா மூர்த்திகளும் அடங்கும். எந்த மூர்த்தி ஆனாலும் சரி முருகனோ, வினாயகனோ, சிவனோ, நாராயணானோ எந்த இப்படி எல்லா மூர்த்திகளும் ராமநாமத்தில் அடங்கும்.

நாராயணா!




Abode of Love

You Are Everything!